www.tamilarangam.net

La Bronchite


# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2026 துலாம் 29 (15.11.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் 40p


**கவிதை மூலை**

தேசம் எரியுதையா

தேகம் விதிர்க்குதையா

பாசம் மறந்திட்ட

பாவிகளை என்செய்வேன்

- சுடு கவி

# தாக்குதல்கள் மீண்டும் ஆரம்பம்

# புலிகள் தரப்பில் கடும் எதிர்ப்பு

**யாழ்ப்பாண நகரை நோக்கி நகர்வதற்காக, மற்றுமொரு மிகக் கொடூரமான இராணுவத் தாக்குதலைச் சிறீலங்கா 10-11-95 வெள்ளியன்று மீண்டும் ஆரம்பித்துள்ளது.**

விடுதலைப்புலிகள், படையினரை எதிர்த்துக் கடும் சண்டையிட்டு வருகின்றனர். குடாநாட்டின் வலிகாமம் பிரதேசங்கள் மீது பிற்பகல் 1.30, 3.00, 5.00 மணிக்குச் சிறீலங்கா விமானப்படையின் புக்காரா, சுப்பசொனிக் விமானங்கள் குண்டு வீசின. உரும்பிராய், கோப்பாய் ஆகிய பிரதேசங்கள் மீது நடாத்தப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதலையடுத்து, மாலை 5.00 மணியளவில் கடும் எறிகணைத் தாக்குதல்களையும் சிறீலங்காப் படைகள் நடத்தின. நீர்வேலிப் பகுதியிலிருந்து கோப்பாய், உரும்பிராய் நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்துடன் விடுதலைப் புலிகள் மிகவும் கடுமையான எதிர்த் தாக்குதல்களை மேற்கொண்டனர். இத் தாக்குதலின் போது சிறீலங்கா இராணுவத்தின் போர்த்தாங்கி ஒன்று முற்றாக அழிக்கப்பட்டதுடன், ஏராளமான இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர். இத் தாக்குதலின் போது வீரச்சாவடைந்து மண்மீட்புப் போரில் விதையாகிப் போன 25 மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கங்கள். இதேவேளை, சிறீலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்கள் தமது தரப்பில் 59 படையினர் இறந்தும், 150க்கு மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளதாகவும் கூறியுள்ளது. 11-11-95 அன்றும், தொடரும் சண்டையில் தொடர்ந்தும் இராணுவத்தினர் கோப்பாய்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## தென்மராட்சி நோக்கி இடம்பெயர்வோர் தொகை நாளுக்குநாள் அதிகரிப்பு

தென்மராட்சியில் இடம் பெயர்வோர் தொகை நாளாந்தம் அதி-கரித்து வருவதாகத் தெரியவருகிறது. சிறீலங்காப் படையினர் தொடர்ச்சியாக மக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொண்டு வரும் பலத்த எறிகணைத்தாக்குதலுக்கு அஞ்சியே தினமும் மக்கள் இடம் பெயர்ந்த வண்ணமுள்ளனர். ஏற்கனவே திறக்கப்பட்டமுகாம்கள் அனைத்தும் நிரம்பி வழிவதால் புதிய புதிய முகாம்களைத் திறக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. இதே வேளை, நுணுப்பாவளைக் கந்தசுவாமியார் கோயில், கப்புதூ ஏகாம்பர வித்தியாலயம், கப்புதூ வீரகத்திப்பிள்ளையார் ஆலயம், கப்புதூ கிராம அபிவிருத்திச் சங்கம், அந்தணந்திடல் சனசமூக நிலையம் என்பனவற்றிலும் இடம்பெயர்ந்த ஆயிரக் கணக்கானோர் தங்கியுள்ளனர்.

## ஐ.நா செயலாளரின் கருத்துக்கு விடுதலைப் புலிகள் வரவேற்பு

### அரசியற் பிரிவுத் தலைவர் நேரடிக் கடிதம்

சிறீலங்கா அரசாங்கப் படைகளின் யாழ் குடாநாடு மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தினால் அகதிகளாக வீட்டைவிட்டு வெளியேறியுள்ள 4,00,000 தமிழ் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் உடன் தேவை எனவும், பெருமளவிலான மனிதாபிமான உதவிகளினாலேயே தமிழ் மக்களின் துன்பங்களைக் குறைக்கலாம் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் மதிப்புக்குரிய பூட்ரஸ் பூட்ரஸ் காலி விடுத்த அழைப்புக்கு விடுதலைப்புலிகளின் சர்வதேசச் செயலகம் வரவேற்புத் தெரிவித்துள்ளது.

அத்துடன், கார்த்திகை 4 ஆம் திகதியிட்டு விடுதலைப்புலிகளின் அரசியற் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளருக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து அனுப்பிவைத்த கடிதத்தையும் சர்வதேசச் செயலகம் வெளியிட்டு

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## கொழும்பில் இராணுவத் தலைமையகம் மீது

# துணிகரத் தாக்குதல்கள்

சிறீலங்காவின் தலைநகர் கொழும்பிலுள்ள இராணுவத்தலைமையகம் 11-11-95 சனிக்கிழமையன்று தாக்கப்பட்டுள்ளது. தலைமையகக் கட்டடத்தின் உள்ளேயும் வெளியேயும் இரண்டு குண்டுகள் வெடித்ததாகச் சர்வதேசச் செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொழும்பில் மூலை முடுக்கெல்லாம் பலநூற்றுக்கணக்கில் முப்படையினரும் காவலில் ஈடுபட்டிருந்த போதும், அதிஉயர் பாதுகாப்புடைய இராணுவத் தலைமையகத்தின் மீது பட்டப்பகலில் நடைபெற்ற இக்குண்டுத் தாக்குதல் குறித்து சிறீலங்காவின் அரசியல், பாதுகாப்பு வட்டாரம் பெரிதும் அதிர்ச்சியும் கலக்கமும் அடைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலின் போது 15 பேர் கொல்லப்பட்டதாகவும், 53 பேர் காயம் அடைந்துள்ளதாகவும், இதில் இராணுவத்தினரும் அடங்குவர் எனவும் அரசு அறிவித்துள்ளது. இச்சம்பவத்தின்போது, துப்பாக்கிச் சமரும் நடைபெற்றதாக அறியப்படுகின்றது. இராணுவம் பீதியால் சரமாரியாகச் சுட்டதில் அருகில் இருந்த தாஸ்சமுத்திரா விடுதியில் வேலை செய்பவர் ஒருவர், 6ஆம் மாடியில் காயம்பட்டுக் கிடந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்செய்திகள் அரசு கொடுக்கும்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## வெளிநாட்டு முதலீடு வீழ்ச்சி சிறீலங்காப்பொருளாதாரம் மிகவும் பாதிப்பு

சிறீலங்காவின் உயர் விகித வட்டி, மற்றும் வெளிநாட்டு முதலீட்டில் ஏற்பட்ட திடீர்ச்சரிவு காரணமாக நாட்டின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே போர்ச்செலவை ஈடு செய்ய, பாதுகாப்புவரியை அரசு உயர்த்தியுள்ளதால் அதிருப்தியுற்றிருக்கும் மக்கள் பொருளாதாரச் சரிவையும் கேள்வியுறும் போது, சந்திரிகா அரசு மீது வெறுப்புக் கொள்வர் என ஐ. தே. க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது இப்படி இருக்க, கடந்த வாரம் பி. பி. சியின் செய்தி ஆய்வுரைக் கண்ணோட்டம் ஒன்றில் உரைநிகழ்த்திய இலண்டன் பொருளியற் கல்லூரியின் பேராசிரியர் ஒருவர், வெளிநாட்டு முதலீட்டிலேயே சிறீலங்கா அரசு இனிப் பெரிதும் தங்கியிருக்கும் என்றும் ஆனால், சிறீலங்காவில் முதலிட எண்ணும் முதலீட்டாளருக்கு அவர்களது இந்த நடவடிக்கையை ஒத்திப்போடும் படி ஆலோசனை வழங்குவதாகவும் கூறியுள்ளார்.

## அம்பாறையில் அதிரடிப்படையுடன் விடுதலைப் புலிகள் மோதல்

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியில் 07-11-95 அன்று சிறீலங்கா அதிரடிப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலில் 4 அதிரடிப்படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் தப்பிக் கொண்டனர். இச்சம்பவம் இரவு 8.30 மணியளவில் திருக்கோவில் விசேட அதிரடிப்படையினரின் முகாமில் இருந்து சுமார் 400 மீற்றர் தொலைவில் இடம்பெற்றது. இத்தாக்குதலில் 2 விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர். புனித மண் மீட்புப்போரில்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இடம்பெயர்ந்தோர் பெரும்பாலானோரைப் பராமரிக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

தற்போது யாழ். குடாநாட்டின் மீது சிறீலங்காப் படைகள் நடாத்திவரும் இராணுவ நடவடிக்கையால், தென்மராட்சிக்கும் வன்னிப்பகுதிக்கும் இடம்பெயர்ந்த பெரும்பாலான மக்களைப் பராமரிக்கும் பொறுப்பைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்றுள்ளது. வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த வேளையில் வீதிகளிற் கிடந்து தவித்த வயோதிபர்கள் மற்றும் உறவினர்களால் பராமரிக்க முடியாத 210 வயோதிபர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினாற் பொறுப்பேற்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

தென்மராட்சியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான பொருட்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகமே வன்னிப் பகுதியிலிருந்து கொண்டு வந்து சேர்க்கின்றது.

இதேவேளை வலிகாமம் பகுதியிலிருந்து வன்னிப் பகுதிக்குச் சென்ற மக்களிற் பெரும்பாலானோர் தாமாகவே வீடுகளை அமைத்து வருவதோடு விவசாயத்திலும் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

வன்னிப் பகுதிக்குச் செல்லவென சுமார் 25,000 மக்கள் கிளாலிக் கரையில் காத்து நிற்பதாக 9-11-95 இல் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. விடுதலைப் புலிகளின் இலவசப் படகுச் சேவை 24 மணித்தியாலமும் நடைபெற்ற வண்ணமுள்ளது. ஒவ்வொரு நாளும் சுமார் 5,000 மக்கள் கிளிநொச்சி நோக்கி வருவதாகவும் அவர்கள் முல்லைத்தீவு மன்னார் நோக்கி இடம் பெயர்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அக்கராயன்குளம், உருத்திரபுரம் ஆகிய பகுதிகளில் நலன்புரி நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியிற் பல பாடசாலைகள் அகதி முகாம்களாக்கப் பட்டுள்ளன. இவ்வனைத்து வேலைகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒருங்கிணைத்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 24 மணிநேரமும் இடம்பெயர்ந்த மக்களின் நலன்களைக் கவனிப்பதிலேயே தனது முழுக்கவனத்தையும் செலுத்தி வருகின்றது.

இதேவேளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனைத்துலக ஒருங்கிணைப்பாளர் திரு. யோய் மகேஸ்வரன், தமிழீழத்திற் தற்போதைய இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்தோருக்கு உடனடியாக நிவாரண உதவிகளைச் செய்துதவுமாறு வெளிநாட்டு உதவி நிறுவனங்களைக் கோரியுள்ளார். இதேவேளை வெளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களும் இந்த இக்கட்டான காலகட்டத்தில் தம்மாலான உதவிகளைத் தாமாகவே முன்வந்து செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## சர்வதேச அங்கீகாரமே...

விடுதலைப் புலிகளே விளங்குகின்றனர். எனவே விடுதலைப் புலிகளை அங்கீகரித்தல் என்பது சர்வதேசச் சட்டங்களுக்கு ஏற்புடையது என்றாகிறது.

ஆதலால் விடுதலைப் புலிகளைச் சர்வதேச ரீதியாக அங்கீகரித்தல் மூலமே தமிழ் மக்களின் இன அழிப்பைச் சிறீலங்கா செய்யாது தடுக்க முடியும்.

சிறீலங்கா விடுதலைப் புலிகளின் சர்வதேச அங்கீகாரத்தைத் தடுப்பதற்காகவே இந்த யுத்தத்தை நடாத்தி அப்பாவித் தமிழ் மக்களை அகதிகளாக்கியும் இன அழிபுச் செய்தும் வருகிறது.

எனவே சர்வதேசச் சமூகத்தின் அங்கீகாரத்தாமதமே இவ்வு யிர்களின் மனித அவலங்களுக்குக் காரணமாகின்றன, என்பதை உணர்ந்து பொறுப்புடன் செயற்பட்டு, விடுதலைப் புலிகளை அங்கீகரித்துச் சிறிலங்காவின் இன அழிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

## வெளிநாட்டு மருத்துவர்கள் வட பகுதிக்குள் நுழைய சிறிலங்கா இராணுவபீடத்தால் அனுமதி மறுப்பு

பிரான்ஸ், நெதர்லாநது தேசங்களைச் சேர்ந்த விசேட மருத்துவர்கள் குழுவொன்று வடபகுதிக்குச் சென்று தற்போது தமிழ் அகதிகளுக்கான மருத்துவ சேவையைச் செய்ய முன்வந்து வடபகுதிக்குச் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல் மூலம் சென்ற வேளையில், சிறீலங்காவின் முப்படைக் கூட்டுப்படைத் தலைமையகத்தால் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. கொழும்பில் அரசின் அனுமதியை ஏற்கனவே இவர்கள் பெற்றிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களுக்கு எந்தவித வெளிநாட்டு உதவிகளும் கிடைக்கவிடாமல், மக்களைப் பட்டினியாலும், நோய்களாலும் அழிக்கச் சிறீலங்காவின் அரசும், அதன் படைகளும் முனைப்பாக உள்ளதை இந்நடவடிக்கை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

## இராணுவத்தின் மரபுவழித் தாக்குதல் எதிர்பார்த்த பலனைத் தராது

*சண்டே ரைம்ஸ் பாதுகாப்பு செய்தியாளர்*

விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் சிறீலங்கா இராணுவம் மரபு வழியான பாரிய தாக்குதல்களை நடத்தி முன்னேறுவது எதிர்பார்க்கும் பலனைவிட ஆபத்தான விளைவுகளையே ஏற்படுத்தும் எனச் சண்டே ரைம்ஸின் பாதுகாப்புச் செய்தியாளர் குறிப்பிடுகின்றார்.

பாரிய நடவடிக்கை என ஆரம்பிக்கும் போது புலிகளுக்கு எதிரான தீடீர் நடவடிக்கைகளை எடுப்பதற்கான வாய்ப்புகள் இல்லாமற்போய்விடும். அத்துடன் இராணுவம் பாரியளவில் முன்னேறும் போது புலிகள் தந்திரோபாயமாகப் பின்வாங்கிப் பின்னர் தாக்கக் கூடிய நிலை உண்டு. இதனாற் சிறிய மட்டுப்படுத்தப் பட்ட பல தாக்குதல்களையே யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ள வேண்டும்.

ஆயுதங்கள் கொள்வனவில் அதிக அக்கறை காட்டுவதை விடுத்து இராணுவத்தில் உள்ளவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கே முன்னுரிமை அளிக்கவேண்டும். புலிகள் இதைத் தான் செய்துவருகின்றனர். ஆயுதத்திற்கான பணத்தை ஆட்பயிற்சிக்காகச் செலவிடலாம். அடுத்துப் பகுதிகளைக் கைப்பற்றுவதை விடுத்து எவ்வளவுக்கதிகமான புலிகளைக் கொல்லமுடியுமோ அவ்வளவு பேரைக் கொல்ல வேண்டும். ஆனாற் துரதிர்ஷ்டவசமாக இராணுவ உயர்பீடம் தாம் கெரில்லாப்போர் புரிவதாக எண்ணித் தமக்குப் பயிற்றப்பட்ட மரபுவழிப் போர் முறையையே கடைப்பிடிக்கின்றனர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தென் தமிழீழத்தில் தொடரும் புலிகளின் தாக்குதல்கள்

### மட்டக்களப்பு மாவட்டம் வெல்லா-வெளியில் 11 அதிரடிப்படையினர் பலி

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லா வெளியில், தேடுதல் நடவடிக்கை யென 700 மீற்றர் தூரத்திலிருந்த விசேட அதிரடிப்படையினரின் முகாமிலிருந்து புறப்பட்டு வந்த அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் ஓர் துணிகரமான அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

11-11-95 அன்று சனிக்கிழமை மாலை 3 மணியளவில் இத்தாக்குதல் இடம் பெற்றது. இத்தாக்குதலில் 11 அதிரடிப்படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட மற்றையோர் காயங்களுடன் தப்பினர். பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலின் போது போராளியொருவர் வீரச்சாவடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### திருமலை மாவட்டத்தில் காவல்துறை நிலையம் மீது தாக்குதல்

திருமலை மாவட்டத்தில், மகிந்தபுரத்திற்கும்-சங்க நகருக்கும் இடையில் அமைந்திருந்த 'அட்டுருவ' சிங்களக் காவல்துறை நிலையம் ஒன்று 11-11-95 நள்ளிரவு விடுதலைப் புலிகளாற் தாக்கப்பட்டது. தாக்குதல் தொடங்கிய சில நிமிடத்திலேயே அனைத்துக் காவல்துறையினரும் அச்சமடைந்து சிதறி ஓடிவிட்டனர். இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளாற் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

### மட்டக்களப்பில் 6—11—95 அன்றும் சிறீலங்கா இராணுவம் மீது தாக்குதல் 12 படையினர் பலி

மட்டக்களப்பு வாகனேரிச் சந்தியில் அமைந்துள்ள இராணுவ முகாமிற்கும் தேக்கஞ்சோலை இராணுவ முகாமிற்கும் இடையே தேடுதல் வேட்டைக்குச் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர். 5 நிமிடங்களே நீடித்த இத்தாக்குதலில் 12 படையினர் அவ்விடத்திலேயே பலியாகினர். இதில் ஏராளமான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்புக்களும் இல்லை.

### மணலாற்றில் ஏற்பட்ட திடீர் மோதலில் 9 வேங்கைகள் வீரச்சாவு

முல்லைத்தீவு மாவட்டம் மணலாற்றுப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் ஒன்பது போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். தமிழீழத்தின் இதயபூமியில் வீரவித்துக்களாகிய இம் மாவீரர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களில் படையினரின் அடாவடித்தனங்கள்

சிறீலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட வலிமேற்கு, காரைநகர்ப் பகுதியில் அதற்குள் சிக்கி வெளியேற முடியாமல் சுமார் 500 பொதுமக்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் தினமும் படையினரால் இம்சைப்படுத்தப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதிகாலையிலேயே பல இடங்கள் சுற்றி வளைக்கப்பட்டு வீடு வீடாகச் சோதனையிடுவது போல் பாவனை செய்யும் படையினர், அவ் வீடுகளில் உள்ள பெறுமதியான பொருட்கள் ஏதும் இருப்பின் உடனேயே அதனைச் சுருட்டிவிடுகின்றதோடு, விசாரணை எனும் பெயரில் பலரை முகாம்களுக்குக் கூட்டிச் சென்று அவர்களை வெருட்டியும் இம்சைக்குள்ளாக்குகின்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் வலிகிழக்கிலும் படையினர் தமிழ் மக்களின் பொருண்மியச் சீரழிவை ஏற்படுத்தும் கெட்ட எண்ணத்துடன், வீடுகளையும், கடைகளையும் தோட்டங்களையும் கனரக வாகனங்கள் மூலம் அழித்து நாசப்படுத்தி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# யாழ். மீதான சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலுக்கு கோபாலசாமி கண்டனம்.

யாழ்ப்பாணப்பகுதி மீதும் மற்றும் பகுதிகள் மீதும் சிறிலங்காப் படைகள் நடத்தும் தாக்குதல்களுக்கு மறுமலர்ச்சித் தி. மு. கவின் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், தமிழீழ மக்கள் நடத்துவது விடுதலைக்கான போராட்டம். தமது பாரம்பரிய பிரதேசத்தை மீட்பதற்கான போராட்டம். யாழ்ப்பாணப் பகுதித் தேவாலயம் மீது குண்டு வீசி அப்பாவிப் பொதுமக்களை, பச்சிளம் பாலகர்களை இராணுவம் கொன்று குவித்து வருகிறது. இதுபற்றி இந்தியா கண்டனம் தெரிவிக்காதது ஈழத் தமிழர்களுக்குச் செய்யப்படும் மிகப்பெரிய துரோகத்தனம். கடந்த சில நாட்களாகச் சிறீலங்கா அரசு மேற்கொண்டு வரும் தாக்குதல்களாற் பாடசாலைகள் மீது குண்டு விசப்பட்டுள்ளது. இதனாற் பாடசாலைப் பிள்ளைகள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். இதனை இந்திய அரசு கண்டிக்கவில்லை. இதன் மூலம் நரசிம்மராவ் அரசு மனித நேயத்தையும், மனிதாபிமானத்தையும் புதை குழிக்கு அனுப்பி விட்டது என்றே எண்ணத் தோன்றுகிறது எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் இப்போது நடத்தப்படும் தாக்குதல்களை விடுதலைப் புலிகளுக்கு எதிரானது என்று மட்டும் கருதக் கூடாது ஏனெனில் தமிழீழத்திற் தற்போது பொதுமக்கள் வேறு, விடுதலைப்புலிகள் வேறு என்ற நிலை இல்லை. அவர்களைப் பிரிக்க முடியாது என்பதே உண்மை. எனவே இலங்கை அரசு இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டுச் சமாதானப் பேச்சுக்களுக்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அப்பாவிப்பொதுமக்கள் மீதான படையினரின் தாக்குதல்களை இந்திய அரசு கண்டிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சர்வதேசக் கடமை

'இன அழிப்பு' எனும் சர்வதேசக் குற்றச் செயலை, தமிழ் மக்களைப் புலிகளிடமிருந்து காப்பாற்றும் 'இராணுவ நடவடிக்கை' என நியாயப்படுத்தி, யாழ்ப்பாண மக்கள் மேல் ஈவிரக்கமற்ற வகையில் சுடுபலத்தை (Fire power) உபயோகித்து, பல்லாயிரக் கணக்கான படையினரைக் கொண்டு பாரிய தாக்குதல்களைத் தொடங்கிய சந்திரிகா அரசு தனது நோக்கத்தில் எதிர்பாராத ஏமாற்றத்தை அடைந்துள்ளது.

மக்களை இராணுவ அடக்குமுறையின் கீழ்க் கொண்டுவந்து, மக்களையும் விடுதலைப் புலிகளையும் தனிமைப்படுத்த வேண்டும் எனும் நரித்தனமான அரசியல் நோக்கிற்காக அப்பாவி மக்களின் குடியிருப்புக்கள் மேல் மிகக் கொடூரமாகச் சுடுபலத்தைப் பயன்படுத்தும் சந்திரிகாவின் இன அழிப்பிலிருந்து தங்களைப் பாதுகாப்பதற்காகப் பாதுகாப்பான இடம் நோக்கி மக்கள் நகர்ந்ததினாற் சந்திரிகாவின் அரசியல் நோக்குப் படுதோல்வியடைந்துள்ளது.

இவ்வளவு காலமும் விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஆயிரக்கணக்கான சிறீலங்காப் படையினரைப் பலி கொடுத்துப் பல்லாயிரக்கணக்கான சிறீலங்காப் படையினரைக் காயமடையச் செய்து, பலத்த இராணுவ தளபாட இழப்புக்களையும் அடைந்து தவிக்கும் சந்திரிகா அரசு, இவ்வுண்மைகளைச் சிங்கள மக்களிடம் மூடி மறைப்பதற்காகப் 'பத்திரிகைத் தணிக்கை' என்ற முகமூடிக்குள் ஓடி ஒளிந்து நிற்கிறது.

சிறீலங்காவின் முகத்திரை கிழியக் கூடிய வகையில் மக்களைப் பாதுகாப்பான இடம் நோக்கி நகரவிட்டுச் சிறீலங்கா இராணுவத்தினரை நேருக்கு நேர் சந்திக்கத் தயாராகி நிற்கின்றனர் விடுதலைப் புலிகள். ஆனால், இதுவரை காலமும் மக்களின் பாதுகாப்புக் கருதி மெதுவாக நடவடிக்கை எடுக்கிறோம் எனப் பச்சைப் பொய் பேசி வந்த சிறீலங்கா இராணுவம், இன்று கண்ணி வெடிக்கு அஞ்சுவதாகக் கூறி, தனது கையாலாகாத் தனத்தைச் சமாளிக்கப் பார்க்கின்றது. இதன் மூலம் விடுதலைப் புலிகளை இராணுவரீதியாகவும் வெல்ல முடியாது என்பதனை உலகு கண்டுகொண்டுள்ளது.

மேலும், திறமையான நிர்வாக அலகுகளுடன் விடுதலைப் புலிகளின் அரசு நோக்கிய அரசு இயங்குவதனால், அதனை எந்த நேரத்திலும் சர்வதேசம் அங்கீகரிக்கலாம் என்னும் அச்சத்தால், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை அதற்கிடையில் கைப்பற்ற வேண்டும், புலிகளை இல்லாதொழிக்க வேண்டும் எனும் அரசியல் நோக்கோடு படைப்பலம் பிரயோகித்த சந்திரிகா அரசு, இன்று கிழக்கில் பெரும் பகுதியை(75 வீதத்திற்கு மேல்) இழந்து நிற்கின்றது. இந்த உண்மையை சிங்கள மக்களும் நன்கு உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

சிறீலங்காவின், தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கை இன்று ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்தையும் ஈர்ந்துள்ளது. அதனால், சர்வதேச அங்கீகாரத்தைத் தடுக்க முடியாது எனும் தவிப்பிற், தமிழர்கள்மேல் மனிதாபிமான உணர்வுடன், மனிதாபிமான உதவிகளை, அதுவும் சிறீலங்காவின் அனுமதியுடனே செய்வோம் என்ற ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் மேற் பாய்கிறது சந்திரிகா அரசு. ஐநா. உட்பட எந்தச் சர்வதேச நிறுவனங்களையும் தமிழர்களுக்கு உதவி செய்ய அனுமதியோம் என்று சந்திரிகா அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் தமிழர்களின் உள்ளக இறைமைப் பிரயோகத்தைச் சிறீலங்கா ஒருபொழுதும் அனுமதிக்காது என்பது தெட்டத்தெளிவாக உறுதியாகிவிட்டது. எனவே தமிழர்களின் பிரச்சினை இன்று சர்வதேசப் பிரச்சினையாகிவிட்டது. இனிமேற் தமிழர்களின் வெளியக இறைமையை மதித்து ஐநா. சபையோ வேறு எந்தச் சர்வதேச நிறுவனமோ தமிழர்களின் உண்மைப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வது சர்வதேசச் சட்டத்திற்கு ஏற்புடையதாகிறது. ஆகவே தமிழ் மக்களை இன அழிப்பில் நின்று காக்க விடுதலைப் புலிகளுடன் சர்வதேசம், உடன் தொடர்பு கொள்ள வேண்டும். இது சர்வதேசக் கடமை என்பதையும் வலியுறுத்துகிறோம்.

# உலகளாவிய ரீதியில் தமிழர்களின் பேரணிகள்

பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் 10க்கு மேற்பட்ட நாடுகளில் எழுச்சிப் பேரணிகளை நடாத்தியுள்ளார்கள். சிறீலங்கா அரசினதும், இராணுவத்தினதும் தமிழீழ மக்களுக்கெதிரான இன அழிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்தும், தமிழீழ மக்களிற்கு உடனடி உதவிகள் வழங்க வெளிநாடுகள் முயற்சி எடுக்க வேண்டுமெனவும் கோரி மலேசியா, நோர்வே, சுவீடன், பொட்சுவானா, அவுஸ்திரேலியா, சுவிற்சலாந்து, யேர்மனி, டென்மார்க், நெதர்லாந்து, இலண்டன், வத்திக்கான் ஆகிய நாடுகளில் மக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டு தமது உறுதிப்பாட்டினையும், ஆதரவையும் வெளிப்படுத்தினர்.

10-11-95 அன்று மலேசியாத் தலைநகர் கோலாலம்பூரில், சிறீலங்காத் தூதரகத்துக்கு முன்னால் நடைபெற்ற கண்டன ஒன்று கூடலில் சமார் 700 மக்கள் கலந்து கொண்டனர்.

10-11-95 அன்று நோர்வேயில் நடைபெற்ற நிகழ்விற் சமார் 2000 மக்கள் கலந்து கொண்டனர். இதில் நோர்வே பாராளு மன்ற உறுப்பினர்கள், செய்தியாளர்கள், கல்விமான்கள் ஆகியோர், தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தை உறுதியாகக் கூறினார்கள். உண்மையான சமாதானத்தைக் கொண்டு வருவதானாற் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

10-11-95 அன்று இலண்டனில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதராலயம் முன்பாக நடைபெற்ற விழிப்புப் போராட்டத்தில் 100 க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர்.

இதேபோன்று சுவீடனிலும் 10-11-95 அன்று ஒரு ஒன்றுகூடல் இடம்பெற்றது.

பொட்சுவானாவிலும் இதேதினத்தில் அங்கு வாழும் தமிழ் மக்களால், ஐநா. சபை பிரதிநிதியிடமும், பொட்சுவானா, தென்னாபிரிக்கா சனாதிபதிகளிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

11-11-95 அன்று சனிக்கிழமை சுவிஸ் நாட்டின் பேர்ண் நகரில்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# லெப். கேணல் அகிலா வீரச்சாவு

30-10-95 இல் யாழ்நகர் நோக்கி முன்னேற முனைந்த இராணுவத்துடன் நடந்த மோதலில் லெப். கேணல் அகிலா வீரச்சாவடைந்துள்ளார். 1987ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுடன் தன்னை இணைத்துக் கொண்ட அகிலா, இந்திய ஆக்கிரமிப்புக் கால கட்டத்திலும், அதனைத் தொடர்ந்து 2ஆம் ஈழப் போரிலும், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 3ஆம் ஈழப்போரிலும் தாயக மண்ணில் அளப்பரிய பணி புரிந்து விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவு வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரு கத்தோலிக்க குருமார்கள் தாண்டிக்குளத்திற் கைது

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற கத்தோலிக்கக் குருமார்களாகிய அருட்திரு. ஜெபநேசன், அருட்திரு. பயர்ஸ் ஆகியோர் சிறீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதிகளவு பணம் கொண்டு சென்றார்கள் என்றும் வேறு சில நொண்டிச் சாட்டுக்களையும் காரணம் காட்டி, இவர்கள் இருவரையும் சிறீலங்கா இராணுவம் தாண்டிக்குளத்தில் வைத்துக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளது. இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை இவர்கள் விடுவிக்கப்படவில்லை என அறியப்படுகின்றது.

# பலாலி முகாமிலிருந்து வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகள் மீது கடுமையான எறிகணை வீச்சு

## 3 சிறார்கள் உட்பட 7பேர் பலி

11-11-95 சனிக்கிழமை காலையிலிருந்து மாலைவரை, பலாலி இராணுவ முகாமிலிருந்து வலிகாமத்தின் பல இடங்கள் மீதும், வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகள் மீதும் பலத்த எறிகணைத் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன.

வலிகாமத்தில் கொக்குவில், கோண்டாவில், மானிப்பாய், திருநெல்வேலி, நல்லூர், கல்வியங்காடு, இணுவில் உட்பட யாழ்நகரை அண்டிய பகுதியிலும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. இவ்வெறிகணைத் தாக்குதல்களால் இப்பகுதியில் எஞ்சியிருந்த சில பொதுமக்களும் உடனடியாகவே தென்மராட்சிக்கு நகர்ந்து விட்டனர்.

இதேவேளை, வடமராட்சி மீது நடாத்தப்பட்ட அகோரமான எறிகணைத் தாக்குதலில் 7 பொதுமக்கள் பலியாகியுள்ளனர். 21 பேர் படுகாயம் அடைந்துள்ளார்கள். இறந்தவர்களின் விபரம் பின்வருமாறு:- தர்மலிங்கம் பாலச்சந்திரன் (வயது 26), செல்லத்துரை சபேசன் (வயது 22), புஸ்பநாதன் உதயசங்கர் (வயது 12), தங்கரட்ணம் கோமணன் (வயது 12), சின்னத்தம்பி இரத்தினம் (வயது 45), இரத்தினம் பாமா (வயது 11). அத்தோடு எறிகணை வெடித்த சத்தத்தின் அதிர்ச்சியால் சுப்பிரமணியம் கந்தையா (வயது 24) என்பவரும் இறந்துள்ளார்.

இவ்வெறிகணைத் தாக்குதல்களால் 30 வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டதுடன், 50ற்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. அத்தோடு பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு உணவுப் பொருட்களை ஏற்றி வந்த கபரண கப்பலில் இருந்து பொருட்கள் இத்தாக்குதலால் இறக்கப்படவில்லை. மேலும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அமைந்துள்ள காட்லிக் கல்லூரியிலும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன.

# அரசின் பத்திரிகை தணிக்கைக்கு லண்டன் அமைப்பு கண்டனம்

சிறீலங்கா அரசின் பத்திரிகைத் தணிக்கை அமுலாக்கலை லண்டனிலுள்ள 'ஆர்ட்டிகல் 19' எனும் பத்திரிகை சுதந்திர அமைப்பு கண்டித்துள்ளது.

பாதுகாப்புத் தொடர்பான செய்தி தணிக்கை நடைமுறையை நீக்குமாறு அவ்வமைப்பு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

நிலைமையின் தன்மை பற்றியும் அது எங்கு நோக்கிச் செல்கின்றது என்பது பற்றியும் பொது மக்களுக்குத் தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும் 'ஆர்ட்டிகல் 19' அமைப்பு கண்டித்துள்ளது.

22-9-95 இல் இந்தச் செய்தித்தணிக்கை அமுலானது. 27-9-95 இலேயேவெளிநாட்டு செய்தியாளர்கள் மீதான தடை மட்டும் நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழர்களின் அரசியல் அதிகாரத்தின் வெளிப்பாட்டாளர்கள் விடுதலைப் புலிகளே!

## இதனை சிறீலங்கா மறுப்பதாலேயே எமக்கு இந்த அகதி நிலை

### சர்வதேச சமூகத்திற்கு யாழ் பல்கலைக்கழகத்தினர் விளக்கம்

"சிறீலங்கா அரசாங்கப் படைகளின் இன அழிப்பிலிருந்து தப்பியோடுவதற்காகவே நாம் மக்களுடன் மக்களாக அவசரம் அவசரமாக இடம் பெயர்ந்து தென்மராட்சி வந்து கல்வியைத் தொடரமுடியாது தவிக்கிறோம். தமிழர்களின் அரசியல் அதிகாரத்தின் வெளிப்பாட்டாளர்கள் விடுதலைப் புலிகள் என்ற உண்மையை சிறீலங்கா மறுப்பதினாலேயே இந்த மனித அவலங்கள் ஏற்படுகின்றன. இதனை சர்வதேச சமூகம் அழுத்தங்களின் மூலம் தீர்த்து வைக்க வேண்டும்" என யாழ் பல்கலைக்கழகத்தினர் ஐ.நா. சபைச் செயலாளருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் தனியான கலாச்சார, கல்வி அடையாளங்களுடன் வரலாற்று ரீதியாக வாழ்ந்து 'மக்கள்' எனும் தகுதிக்கு ஏற்புடையவர்களாக வாழ்ந்து வருகின்றனர். இந்த மக்களின் விழுமியங்கள், கடந்த நான்கு தசாப்தங்களாக வெளித்தோற்றத்திற்கு ஜனநாயக அமைப்பாகத் தோற்றமளிக்கும் சிறிலங்கா அரசாங்கத்தின் அரசியல் இராணுவ நடவடிக்கைகளால் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு கட்டத்திலும் தமிழர்கள் ஜனநாயக பாராளுமன்ற வழிகளில் இவற்றை எதிர்த்து வந்தனர். ஆயினும் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் இராணுவ வழிகளில் அகிம்சை போராட்டமான சத்தியாக்கிரகம் உட்பட அனைத்தையும் நசுக்கி வந்தனர். இத்தகைய இராணுவ ரீதியான துன்புறுத்தல்கள் தமிழர்களின் நீதியான கோரிக்கைகளுக்கு பதிலாக கிடைத்ததன் இறுதி வடிவாக தமிழர்கள் ஆயுத எதிர்ப்பின் மூலமே தங்களையும் தங்கள் தாயக மண்ணையும், ஆக்கிரமிப்பு செய்த அரசாங்கத்தின் ஆயுத ஆயுதப்படையினரிடம் இருந்து பாதுகாக்கவேண்டியதாயிற்று.

இதன் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தப் போராட்டத்தில், தமிழர்களின் அரசியல் அதிகாரத்தை வெளிப்படுத்தும் தலைமைத்துவமாக உருவானபோதிலும் அரசு, அதனுடைய தீய நோக்குடன் உண்மைக்கு மாறானதும் யதார்த்தம் அற்றதுமான முறையில் தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழர்களிலிருந்து பிரித்து அந்நியப்பட்ட ஒன்றாக தொடர்ச்சியாக கருதி வருகிறது. இது வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களின் சொல்லொணா மனித அவலங்களுக்கு காரணமாகி நிற்கிறது.

அண்மையில் வடக்கில் முன்னோக்கிப் பாய்தல், கைகுலுக்கல், இடிமுழக்கம், சூரியப் பிரகாசம் எனும் குறியீட்டுப் பெயர்களுடன் இடம்பெறும் எல்லா இராணுவ நடவடிக்கைகளும் நாம் மேற்கூறிய பந்தியில் கூறப்பட்ட அரச போக்கிற்கு ஏற்ப தமிழர்களை விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து விடுவித்தல் எனும் மாயையான விளக்கத்துடன் நடாத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் பெருமளவில் குடாநாட்டின் பல பாகங்களிலும் மக்களின் இடப்பெயர்வுகளுக்கு காரணமாகி இறுதியில் சூரியப் பிரகாசம் நடவடிக்கையினால் முன்னெப்பொழுதும் நடைபெறாத வகையில் ஒரே நேரத்தில் 500,000 மக்கள் தென்மராட்சிப் பகுதிக்கும், வன்னிப் பெருநிலப் பகுதிக்கும் இடம்பெயரும் மனித அவலத்தை உருவாக்கியுள்ளது. சிறீலங்காப் படைகளின் ஈவிரக்கமற்ற எறிகணை மற்றும் விமானக் குண்டு வீச்சுக்களால் பெரும் அழிவுகளும் உயிர்ச்சேதங்களும் தொடர்ந்து விளைந்ததினால் ஏற்பட்ட அச்சம் மற்றும் மனக்குழப்பம் காரணமாக தமிழர்கள் தங்கள் உடமைகளை விட்டு கால்நடையாக (குறிக்கப்பட்டளவு மண்ணெய் மட்டுமே கையிருப்பில் எரிபொருளாக இருந்தது. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக வடபகுதிக்கான போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் சிறீலங்காவால் மறுக்கப்பட்டுவந்துள்ளது). இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். இவ்வாறு சிறீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளால் அகதிகளாக்கப்பட்ட மக்கள் தென்மராட்சி, வடமராட்சி, வன்னி பகுதிகளில் புகலிடம் தேடி தவிக்கின்றனர். இவர்கள் சரியான தங்கிடங்கள், உணவு, உடை மற்றும் அடிப்படை சுகாதார, மருத்துவ வசதிகள் இன்றி கடும் அல்லலுறுகின்றனர். பருவப் பெயர்ச்சி மழையினால் இவர்கள் மேலும் கடும் துன்பங்கள் அனுபவிக்க வேண்டியுள்ளது. சுருக்கமாகக் கூறினால், தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்ட நிலையில் தங்களுடைய அடிப்படை மனித உரிமைகளைக் கோரி அதனால் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஏன் ஆன்மீக ரீதியாகவும் கூட கடைசி இராணுவ நடவடிக்கை மூலம் சிதறடிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக சமூகத்தினராகிய நாம் எங்களுடைய சகபாடிகள் பலரை இராணுவ நடவடிக்கைகளால் இழந்தும் நீண்டகால பொருண்மியத் தடைகளினால் மிகுந்த சிரமங்களை அனுபவித்தும் எங்கள் கல்வி முயற்சிகளைத் தொடர்ந்து கொண்டிருக்கும் நாங்கள் காட்டுமிராண்டித்தனமான இராணுவ நடவடிக்கைகளை அனுபவித்துக் கொண்டும் எல்லாவகையான அநீதிகளுக்கு உள்ளாகியும் மிகமோசமான சூழ்நிலைகளில் தொடர்ந்தும் பல்கலைக்கழகத்தை கொண்டு நடாத்தி கல்வி முயற்சிகளை பேணத் துடித்து வருகின்றோம். இன்று நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவந்து யாழ்ப்பாணத்துக்கு வெளியே எங்கள் மக்களுடன் அகதிகளாகி நிற்பதினால் மேற்கொண்டு கல்வி முயற்சிகள் எதையும் தொடர முடியாத பரிதாப நிலைக்கு ஆளாகி நிற்கிறோம்.

பல்கலைக்கழக சமூகத்தவராகிய நாம் சர்வதேச சமூகத்திடம் ஒரே குரலில் பின்வரும் வேண்டுகோள்களை விடுக்க விரும்புகின்றோம்.

1. அரச படைகளிடம் இருந்து தப்பிச் செல்ல வேண்டும் எனும் ஒரே நோக்குக்காகவே எங்கள் வீடுகளை விட்டு அவசரம் அவசரமாக தப்பி ஓடி வந்தோம். எனவே சர்வதேச சமூகத்தினரிடம் சிறீலங்கா அரசின் மேல் அழுத்தங்களை கொண்டு வருவதன்மூலம் எங்கள் வீடுகளுக்கு திரும்பிச் சென்று மனித மரியாதையுடனும் சுய மரியாதையுடனும் சுதந்திரமாக நாம் தொடர்ந்தும் வாழ உதவும்படி கோருகின்றோம்.

2. நாங்கள் சர்வதேச சமூகத்தினரிடம் வெளிநாட்டு பிரதிநிதிகளும் பத்திரிகையாளர்களும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வந்து உண்மை நிலையினை உலகுக்கு விளக்க அனுமதிக்கும்படி சிறீலங்கா அரசின் மேல் அழுத்தங்களை ஏற்படுத்தும்படி கோருகின்றோம் (அரசு நீதியற்ற இந்த இராணுவ நடவடிக்கைகளை கடுமையான செய்தித்தாள் தணிக்கையை அமுலாக்கி எந்த செய்தி நிருபர்களும் வடபகுதிக்கு வரவிடாது தடை செய்து அதன் பின்னரே செய்து வருகின்றனர்).

3. நாங்கள் சர்வதேச சமூகத்திடம் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கும் மக்களுக்கு உதவிகளை உடன்வழங்கும்படி மிகப் பணிவாக வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

அன்பின்

மருத்துவர் சி.எஸ். நச்சினார்க்கினியன் சமூகபீடத்தலைவர்

மருத்துவர் கே. சிவபாலன் உளவியல் பீடத் தலைவர்

திரு. ஆர். நந்தகுமாரன் பொருண்மிய மூத்த விரிவுரையாளர்

திரு. கே. சிதம்பரநாதன் நுண்கலை விரிவுரையாளர்

பேராசிரியர் ஏ. சண்முகதாஸ் தமிழ் மற்றும் இசைத்துறைத் தலைவர்

திரு ஆர். ஜெகதீசன் பிரதம உதவி உள்ளக கணக்குப் பரிசோதகர்

திரு. ஆர். ராஜேஸ்வரன் உதவிப் பதிவாளர்-நூலக சேவை

திரு. கே. இரட்ணசபாபதி பிரதம தொலைத் தொடர்பு இயக்குநர்.

(இக்கடிதம் ஐ.நா சபை பொதுச் செயலாளருக்கு, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தற்காலிக முகவரியான சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது.)

# மக்கள் மேலான பிரகடனப் படுத்தப்படாத நீதியற்ற யுத்தம்

### யாழ் மக்களமைப்புக்கள் பேரவை ஐ.நா.செயலருக்குக் கடிதம்

மக்கள் மேலான பிரகடனப் படுத்தப்படாத யுத்தம் புதிய வகையான இன அழிவாக மாறுகிறது எனக்கூறி அதைத் தடுத்து நிறுத்தும்படி யாழ் மக்கள் அமைப்புக்கள் பேரவை, ஐ.நா. பொதுச் செயலாளருக்கு அதன் தற்காலிக முகவரியான டச்சு வீதி, சாவகச்சேரியிலிருந்து ஒரு அவசரக் கடிதத்தை அனுப்பியுள்ளது. "நாங்கள் யாழ் மாவட்டத்தில் நடைபெறும் ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகளாற் கடும் துன்பங்களை அடைந்து வருகிறோம். எறிகணை, விமானக் குண்டு வீச்சுக்கள் மனிதத் தன்மையின் கீழ் தாங்கமுடியாத அளவுக்குத் துன்பங்களைத் தொடர்ச்சியாக விளைத்து வருகிறது. கடந்த பத்து நாட்களில் 400க்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் உயிரிழந்தும் நூற்றுக்கணக்கான மக்கள் காயமுற்றும் உள்ளனர். இந்த, அறிவித்தல் எதுவுமற்ற மக்கள் மீதான தாக்குதல்களால் பொதுமக்கள் வீடிழந்து, வாழ்விழந்து, அகதிகளாகி நிற்கின்றனர். முதலே வலிகாமப் பிரிவில் இருந்து இராணுவ நடவடிக்கைகளால் அகதிகளாகி வந்த மக்களுடன் சேர்ந்து வலிகாம பகுதி மக்கள் முழுப்பேருமே தென்மராட்சி, வடமராட்சி, வன்னிப் பிரதேசங்களுக்கு 500,000 பேரளவில் இடம் பெயர்ந்து சிறீலங்காவின் இராணுவ இன அழிப்புகளுக்கு அஞ்சிப் புகலிடம் தேடித் தவிக்கின்றனர்.

மக்கள் தெருக்கரையில், மரநிழலில் பருவக்காற்றுப் பெயர்ச்சி மழையிலும், குளிரிலும், உணவு, உடை, அடிப்படை வாழ்வுத் தேவைகள் இன்றித் தவிப்பதை ஏற்கனவே சர்வதேசச் சமூகத்தின் கவனத்திற்குப் பலரும் தெரிவித்துள்ளனர். ஆயினும் ஈவிரக்கமற்ற இராணுவத் தாக்குதல்கள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. சிறீலங்காவின் பொருளாதாரத் தடைகள் இந்நிலையை மேலும் மோசமாக்கி ஆயிரக்கணக்கான மக்களை உயிரிழக்கும் நிலைக்குத் தள்ளிக் கொண்டிருக்கிறது.

இந்த பிரகடனப்படுத்தப்படாத நீதியற்ற மக்கள் மேலான யுத்தமானது, புதிய வகையான இன அழிப்புப் பரிமாணமே. எனவே சர்வதேசச் சமூகம் இந்த இன அழிப்பைத் தடுத்து, உலகில் மனித விழுமியங்கள் மேலானவை என்பதை நிலைநிறுத்தும் என்பதில் தமிழ் மக்கள் இன்னும் உறுதியும், நம்பிக்கையும் கொண்டுள்ளனர். இந்த அடிப்படையான நம்பிக்கையுடன் இந்நிலையை ஈடுசெய்யுமாறு கோரிப் பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்துகிறோம்.

1) இன அழிப்பைத் தடுப்பதற்கான ஆக்கபூர்வமானதும் உறுதியானதுமான நடவடிக்கைகளை உடன் எடுங்கள்.

2)இன ஒதுக்கல் மனோநிலையுடனான குண்டு வீச்சு, எறிகணை வீச்சுக்கள் உடன் நிறுத்தப்பட அழுத்தங்கள் கொடுங்கள்.

3) உடனடி மனிதாபிமான உதவிகளைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி மரணங்களையும், நோய்களையும் தடுத்துத் தமிழர்களைப் பாதுகாருங்கள்.

4) தமிழர்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்த உதவுங்கள்.

5) பாதிக்கப்பட்ட மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ள புகலிடப்பகுதிகளைப் பாதுகாப்புவலயமாகப் பிரகடனப் படுத்துமாறு சிறீலங்காவை வற்புறுத்துங்கள்.

தமிழர்கள் அனுபவிக்கும் சொல்லொணா மனித அவலங்களில் இருந்து அவர்கள் விடுபட உடன் உதவுமாறு வற்புறுத்தி வேண்டுகிறோம்.

நன்றி

தலைவர் — செயலாளர்

சொலமன் சிறில் — திகனகலிங்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள கடற்படையின்

# காங்கேசன்துறைத் துறைமுகப் பாதுகாப்பு

காங்கேசன்துறைத் துறைமுகமானது, இரண்டாம் ஈழப்போரின் இறுதியில் கடற்புலிகளின் தாக்குதலுக்கு எட்டிய தொன்றாகவே இருந்து வருகின்றது. இத்துறைமுகத்தினுள் கடற்புலிகளின் முதலாவது தாக்குதல், கடற்புலிகளின் நீரடி நீச்சல் பிரிவைச் சேர்ந்த கப்டன் அங்கயற்கண்ணி உள்ளிட்ட கடற்புலிகளால் 16-08-94 இல் மேற்கொள்ளப்பட்டது. இதில் இழுவைப் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டதோடு, கட்டளைக் கப்பல் ஒன்றும் தாக்கப்பட்டது.




இரண்டாவது தாக்குதல், புலிப்பாய்ச்சல் நடவடிக்கையின் தொடர் நடவடிக்கையாகக் கடற்கரும்புலிகளின் பல அணிகள் பங்கேற்ற தாக்குதலில் இடம்பெற்றது. 16-07-95 இல், இடம்பெற்ற இத்தாக்குதலின் போது, 'எரித்தாரா' கட்டளைக் கப்பல் கடற்கரும்புலிகளினால் மூழ்கடிக்கப்பட்டது.



அடுத்த தாக்குதலானது, 10-09-95ம் திகதி காங்கேசன்துறைக் கடற்பரப்பில் தரித்திருந்த தரையிறங்கு கப்பல் மீது மேற்கொள்ளப்பட்டது. இதனைக் கடற்புலிகளின் நீரடி நீச்சல் பிரிவைச் சேர்ந்த கரும்புலிகள் நடத்தியிருந்தனர்.

இறுதியாக29-09-95 அன்று மற்று மொரு பெரும் கடற் சமரொன்று காங்கேசன்துறை துறை முகப்பகுதி யைச் சூழவுள்ள பகுதிகளில் இடம் பெற்றுள்ளது. கடற்புலிகளின் தாக்குதல் படைப் பிரிவுகளும், கரும்புலிகளும் இத் தாக்குதலை நடத்தியுள்ளனர். ஒரு டோறா மூழ்கடிக்கப்பட்டதோடு, ஒரு விநியோகக் கப்பலும் பெரும் சேதத்து க்கு உள்ளாகியுள்ளது.





இவ்வாறாக, கடற்புலிகளின் தாக்குதலுக்கு அடிக்கடி உள்ளாகும் நிலையில் காங்கேசன் துறை துறைமுகம் இருப்பதன் காரணத்தினா லேயே மேலே கேட்கப்பட்ட கேள்வி இன்று தவிர்க்க முடியாது எழுந்துள்ளது. அத்தோடு, காங்கேசன்துறை துறைமுகத்தினுள் அல்லது துறைமுக த்தைச் சூழவுள்ள பகுதியில் கடற்புலிகள் மேற்கொள்ளும் நடவடிக்கையானது தனியாக கடற் படையினருடன் மட்டும் சம்பந்தப்பட்டதொரு விடயமாக மட்டும் இல்லாமல், வடபகுதியில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் நிலை கொண்டுள்ள இராணுவ த்தினரின் நடவடிக்கையுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாகவும் உள்ளது.





காங்கேசன்துறைத் துறைமுகத்தின் இன்றைய முக்கிய த்துவத்தைச் சுருக்கமாகக் கூறுவதானால், யாழ் குடாநாட்டில் சிறீலங்கா இராணுவத்தின் அசைவியக்கத்தை இத் துறைமுகமே தீர்மானிக்கின்றதெனலாம். இத் துறைமுகம் முடக்கப்படுமானால், குடாநாட்டில் இராணுவத்தினரின் அநேக நடவடிக்கைகள் முடங்குவது தவிர்க்க முடியாது போகும்.



காங்கேசன்துறைத் துறைமுகம், எண்பதுகளின் ஆரம்பத்தில் ஓரளவு புனரமைப்புச் செய்யப்பட்டது. ஆனால் கடற்படையினர் இத் துறைமுகத்தைக் பெரிதாகப் பயன்படுத்தவில்லை. வடக்கின் கட்டளைத் தலைமையமாகக் காரைநகர் கடற்படைத்தளமே இருந்தது. கடற்படையினர் சிறியளவில் தேவையின் நிமித்தம் பயன்படுத்தினர். முதலாம்கட்ட ஈழப்போர் முடிவடையும் வரையிலும் இந் நிலையே தொடர்ந்தது.

ஆனால், இந்திய இராணுவத்தின் வருகையுடன் காங்கேசன்துறைத் துறைமுகம் இராணுவ ரீதியில் பெரும் முக்கியத்துவம் பெற்றதொன்றாக மாறியது. கிழக்கில் திருமலையும், வடக்கில் காங்கேசன்துறையும் இராணுவத் தேவைகளுக்காகத் துரிதமாக இயங்கும் கடற்படையின் துறைமுகங்களாயின.

இந்நிலையானது இந்திய இராணுவம் வெளியேறிய பின்னர் ஆரம்பித்த இரண்டாம் கட்ட ஈழப்போரிலும் நீடித்தது. யாழ் குடாநாட்டில் முகாம்களுக்குள் முடங்கிய இராணுவத்தினரின் பிரதான விநியோக வழியாகக் கடல்வழி அமைந்ததோடு, காங்கேசன்துறையின் முக்கியத்துவம் அதிகரித்தது என்றே கொள்ளலாம்.

இதில், காங்கேசன்துறைத் துறைமுக த்தின் முக்கியத்துவம் அதிகரித்ததிற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். ஒன்று, பலாலி படைத்தளத்துடன் விரிவுபட்ட பல்லாயிரக் கணக்கான துருப்புக்களைக் கொண்ட கூட்டுப்படைத் தளத்திற்குப் போதிய விநியோகத்தைச் செய்ய இத்தளம் தேவையானதாக இருந்தது.

இரண்டாவதாக, புலிகளின் வெளி உலகத்தொடர்பையும் புலிகளுக்கான கடல் வழி விநியோகத்தையும் கண்காணிக்கும் பெரும் பொறுப்பு கடற்படைக்கு வந்துசேர்ந்தது. ஆரம்ப காலத்தில், விடுதலைப்புலிகளுக்கான கடல் வழி விநியோக மார்க்கமாகத் தமிழகக் கரையோரப் பகுதியே இருந்தது. ஆகையினால், காரைநகர் கடற்பரப்பில் இருந்து ஓரளவு கண்காணிப்பு நடவடி க்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

இருப்பினும், விடுதலைப்புலிகளின் முக்கிய இறங்குதுறைப் பகுதிகளாக வடமராட்சி இருந்தமையால் காரைநகர் கடற் படைத்தளம் ஒதுக்குப்புறத்தில் இருந்தது போன்றதொரு நிலையே உணரப்பட்டது.

அத்தோடு, இரண்டாம் கட்ட ஈழப்போரின் போது விடுதலைப் புலிகளுக்கான கடல் வழி விநியோகமானது, இந்தியக் கரையை எட்டாமலேயே வந்தடையத் தொடங்கியதாகவும் கருதப்பட்டது. இந்நிலையில் காரைநகர் கடற் படைத் தளமானது முற்றிலும் ஒதுக்குப்புறமானதாக மாறியது.

மேலும், காரைநகர் கடற்படைத் தளமானது ஆழம் குறைந்த பகுதியில் இருந்தமை காரணமாகக் கடற்படைக் கட்டளைக் கப்பல்கள் போன்றவை துறைமுகத்தை எட்டமுடியாது இருந்தன. இதன்காரணமாக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் கடினமானவை யாகவும் இருந்தன.

இந்நிலையில் இரண்டாம் கட்ட ஈழப்போரில் காங்கேசன்துறை கடற் படைத் தளத்தின் முதன்மை என்றுமில்லாதவாறு அதிகரித்தது. அதேவேளை, அது பெரியளவில் விரிவாக்கமும் செய்யப்பட்டது. காரைநகர் கடற் படைத்தளத்தின் முக்கியத்துவம் படிப்படியாகக் காங்கேசன்துறை கடற் படைத் தளத்திற்கு மாற்றம் கண்டது.

இவ்வாறாக முக்கிய கடற்படைத் தளமாகவும், விநியோகத் துறைமுகமாகவும் வளர்ச்சி கண்டு வந்த காங்கேசன்துறை துறைமுகத்தின் பாதுகாப்பு குறித்தே இன்று முக்கியமான கேள்வி எழுந்துள்ளது.

இதுவரையில் காங்கேசன்துறை துறைமுகத்தின் மீது கடற்புலிகள் நடத்திய தாக்குதல் பொதுவாக இரண்டு வகைப்பட்டதாக இருந்தது. ஒன்று, நீரடி நீச்சல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டவை.

இரண்டாவது, தாக்குதல் படையணிகளால் மேற்கொள்ளப் பட்டவையாகும். இவ்விரண்டு வகைத் தாக்குதல் பிரிவுகளிலும் கரும்புலிகளும் இடம் பெற்றிருந்தனர்.



இவ்விரண்டு வகைத் தாக்குதல் நடவடிக்கைகளின் போதும் கடற்புலிகள் காங்கேசன்துறை துறைமுகத்தின் மையப் பகுதியை எட்டியிருந்தனர். நீரடி நீச்சல் பிரிவைச் சேர்ந்த அங்கையற்க்கண்ணி நடத்திய தாக்குதலும் அதன் பின்னர், புலிப்பாய்ச்சல் நடவடிக்கையின் தொடர் நடவடிக்கையாக மேற் கொள்ளப்பட்ட கடற் படையணிகளின் தாக்குதலும் இவற்றைத் தெளிவாக வெளிக்காட்டுபவையாகவே இருந்தன.

இந்நிலையானது, காங்கேசன்துறை துறைமுகத்தின் மையப் பகுதி புலிகளின் கைகளுக்குள் எட்டக்கூடிய தூரத்திற்குள் இருப்பதையே காட்டுவதாக உள்ளது. அதிலும், இறுதியாக அண்மையிற் கடற்புலிகள் காங்கேசன் துறை துறைமுகத்திற்கு வெளியில் நடத்திய ஒரு பலமணி நேர கடற்சமர் புதிய சில அம்சங்களையும் வெளிக்காட்டும் ஒன்றாகவே இருந்தது.



அதாவது, இக்கடற்சமரில் விடுதலைப் புலிகள் நீண்ட தூரம் சுடக்கூடிய 20 எம் எம் பீரங்கிகளைக் பயன் படுத்தியமை முக்கியமானதொரு அம்சமாகும். ஏனெனில், இது கடற்புலிகளின் தாக்குதல் வீச்செல்லை அதிகரித்துள்ளதென்பதையே காட்டுகின்றது.

எவ்வாறெனில், கடற்புலிகள் பொதுவான பயன்பாட்டில் 50 கலிபர் கனரகத் துப்பாக்கிகளே இருந்தன. தற்பொழுதுதான் அதிலிருந்து மாறி, புலிகள் பீரங்கி வகை ஒன்றைக் கடலில் பாவிக்கத் தொடங்கியுள்ளனர். இப்பாவனையானது, கடற் புலிகளின் படகுகளைச் சிறீலங்கா கடற்படை இலகுவில் நெருங்க முடியாத நிலை ஒன்றை ஏற்படுத்துவதோடு, சிறீலங்காவின் தொலை தூர இலக்குகளையும் புலிகள் தாக்கக் கூடியதொரு தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

இதற்குச் சிறப்பான எடுத்துக் காட்டாக,

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வந்தோரையும் வாழவைக்கும் வளம் நிறைந்த வன்னிமண்

சிறீலங்கா அரசானது தமிழர்கள் மீதான பொருளாதாரத் தடையை தீவிரமாக அமுலாக்கி வரும் அதே வேளையில் விவசாய நிலங்களையும் இராணுவ நடவடிக்கை எனும் பெயரில் ஆக்கிரமித்து வருகிறது.

இதனால் குடாநாட்டிற்குள் முடங்கிக் கிடக்கும் தமிழ் மக்கள் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் தமது நிலபுலங்களையும் வீடுகளையும் இழந்து இடம் பெயர்ந்தோர் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

பரம்பரை பரம்பரையாக செய்து வந்த மீன்பிடி மற்றும் விவசாயத்தை தொடர முடியாமலும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளுக்கேற்ப குடும்பத்தை நகர்த்திச் செல்ல முடியாமலும் இவர்கள் தவிக்கின்றனர். ஆனால் வன்னிப் பெரு நிலப்பரப்பில் பெருமளவு வளங்கள் நம்மவர்களால் பயன்படுத்தப்படாத நிலையில் வீணடிக்கப்பட்டு வீண் விரயமாகிக் கொண்டிருப்பதை எங்களில் பெரும்பாலானோர் அறியாதிருப்பது துரதிஷ்டமே.

சிறீலங்கா அரசு அமுலாக்கிவரும் பொருளாதாரத் தடைகளாலும் ஆக்கிரமிப்புக்களாலும் பெருமளவில் உணவுப் பஞ்சம் ஏற்படும் சாத்தியக்கூறுகள் இருப்பதை இனம் கண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வன்னி பெருநிலப்பரப்பில் குடியமர்த்தி விவசாய மற்றும் மீன்பிடித் துறைகளை ஊக்குவிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

அங்கு பயன்படுத்தப்படாது தரிசாகக் கிடக்கும் காணிகளையும் காடுகளையும் அழித்து, இடம் பெயர்ந்து செல்லும் மக்களுக்கு விவசாயத்திற்கென ஒரு ஏக்கர் வீதம் பகிர்ந்தளித்து வருகிறது. இடம்பெயர்ந்து செல்லும் மக்கள் தாம் தங்கியிருக்க விரும்பும் கிராமங்களில் இயங்கும் கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் தொடர்பு கொள்வதனூடாகத் தமக்குத் தேவையான காணிகளையும் கடன் வசதிகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முடிவதுடன் விவசாய உள்ளீடுகளையும் பெற்று வாழ்வை வளமாக்கிட வழி பிறந்துள்ளது. அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து ஆயிரக் கணக்கானவர்கள் தத்தமது குடும்பங்களுடன் குடாநாட்டை விட்டு வெளியேறி வன்னி பெருநிலப்பரப்பில் குடியேறி பல்வேறு தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்வதை விட வன்னிப் பகுதியில் வாழ்வது பல வழிகளிலும் தமக்கு நன்மை பயப்பதாகக் கூறுகின்றனர்.

மல்லாகப் பகுதியிலிருந்து தன் ஐந்து பிள்ளைகளுடன் இடம்பெயர்ந்து முழங்காவில் பகுதியில் வாழ்ந்து வரும் தா. சிவராசா என்ற குடும்பத்தவரை சந்தித்த போது, கிராம உற்பத்திக் குழு பயன்படுத்தப்படாது தரிசாகக் கிடந்த இந்தக் காணியை எனக்குத் தந்துள்ளனர், நான் என் குடும்பத்துடன் குடிசை அமைத்து வாழ்ந்து வருகிறேன். எனது மகன் யாழ்ப்பாணத்தில் இருந்த போதே தும்புக் கைத்தொழிலில் பயிற்சி பெற்றிருந்தார். இதனால் கிராம உற்பத்திக் குழு எமக்கு கயிறு திரிக்கும் பொறியினையும் பணத்தினையும் கடனாக வழங்கினர். நாம் தற்போது கயிறு திரித்து விற்று குடும்பத்தை நகர்த்திச் செல்கிறோம். நான் தும்பினை கொள்வனவு செய்து கொடுக்க மகன் கயிறு திரிப்பார். நாளாந்தம் ஏழு கிலோ கயிறு திரிக்கிறோம்.

சிறீலங்காவிலிருந்து தும்புப் பொருட்களின் இறக்குமதியை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தடை செய்துள்ளதால் இவற்றில் தயாரிக்கும் பொருட்களுக்கு நல்ல சந்தை வாய்ப்பு கள் கிடைக்கின்றன. ஒரு கிலோ கயிறு எண்பது ரூபா வீதம் விற்பனை செய்கின்றோம். இதன் உற்பத்தியை மேலும் அதிகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதுடன் தும்புத்தடி, விளக்குமாறு, தூரிகை போன்றவற்றையும் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறோம் என்றார்.

யாழ்ப்பாணத்தில் வாழ்வதைவிட இங்கு வாழ்வது சலபமாக இருக்கின்றதா எனக் கேட்டபோது வாழ்க்கைச் செலவு யாழ்ப்பாணத்தில் மிக அதிகம். அத்துடன் வேலை வாய்ப்பும் இல்லை. அடுத்தவர் கையை எதிர்பார்த்து ஏங்கி வாழ்வதை விட இங்கு சொந்தக் காலில் நின்று நிம்மதியாக வாழக்கூடியதாக உள்ளது. அங்கு எவ்வளவு உழைத்தாலும் செலவுக்குப் போதாமல் இருந்தது. இங்கு ஆடம்பரச் செலவுகள் இல்லை. அத்துடன் நாளாந்தம் தேவையானவை இங்கு மிகவும் மலிவாகக் கிடைக்கின்றன. அரிசி 18 ரூபா, பால் லீற்றர் 12 ரூபா, முட்டை ஐந்து ரூபா, மாட்டிறைச்சி, மான் இறைச்சி என்பன கிலோ 50 ரூபா, மீன் மிகவும் மலிவு என ஒரு பட்டியலைலே நீட்டிவிட்டார்.

இதன்போது இடையில் குறுக்கிட்ட இவரது மனைவி யாழ்ப்பாணத்தில் விறகுக்கே உழைப்பது போதாது இங்கு இலவசமாகக் கிடைக்கிறது என்றவர் ஆரம்பத்தில் புதிய இடம், புது அனுபவம் என்பதால் சற்று கடினமானதாகவும் பயமாகவும் இருந்தது. ஆனால் இப்போது பழக்கப்பட்டு விட்டது. இங்குள்ளவர்களும் அன்புடன் பழகி வருகிறார்கள் பிள்ளைகளும் நிம்மதியாகப் பாடசாலை போய் வருகின்றார்கள் என்றார்.

முழங்காவில் பகுதியில் புகையிலை உற்பத்தியை முதல் தடவையாக மேற்கொண்டதுடன் லட்சக் கணக்கான ரூபாய்களை வருமானமாகப் பெற்றுக் கொண்ட புளியங்கூடலைச் சேர்ந்த இளம் விவசாயியான செ. உதயசூரியன் என்பலரை சந்தித்து வினவியபோது,

1991இல் புளியங்கூடலில் இருந்து இடம்பெயர்ந்து மாதகலில் தங்கியிருந்தோம். 1992இல் அங்கிருந்தும் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டதால் முழங்காவிலுக்கு வந்து கோவில் காணியை குத்தகைக்கு எடுத்து தோட்டம் செய்யத் தொடங்கினோம்.

ஊரில் புகையிலை செய்கை பண்ணியதால் இங்கும் அதனைச் செய்து வெற்றியீட்டினோம். இப்போது எம்மைப் பார்த்து இங்குள்ளோரில் பலர் புகையிலையை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளனர். நாம் கிராம உற்பத்திக் குழுவிடம் பெற்ற கடனை மூலதனமாகக் கொண்டு வருடம் முழுவதும் மாறி மாறி மிளகாய், வெண்காயம், மரக்கறி வகைகள், வாழை என்பவற்றை செய்கை பண்ணி வருகிறோம்.

ஆரம்பத்தில் நாம் மட்டுமே இங்கு வந்தோம். தற்போது எம்மைப் பின்பற்றி எமது உறவினர்கள் நிறையப் பேர் இங்கு வந்து விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். வாழ்க்கைச் செலவு குறைவாக இருப்பதால் வளமுடன் வாழக்கூடியதாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சந்தை வாய்ப்புகள் பற்றிக் கேட்ட போது: இங்குள்ள வியாபாரிகள் எமது உற்பத்திப் பொருட்களைப் பெற்று தென்பகுதிக்குக் கொண்டு சென்று விற்பனை செய்கின்றார்கள். இதனால் எமக்கு சந்தைப்படுத்துவதில் எதுவித சிரமங்களும் ஏற்படுவதில்லை என்றார்.

அடிப்படை வசதிகள் இல்லாத இடத்தில் எப்படி குடும்பமாகச் சென்று வாழ்வது என்ற அச்சம் இன்று எம்மவர்களிடையே குடிகொண்டிருப்பதால் நீண்ட பல ஆண்டுகளாக பெரும்பாலான மக்கள் இங்கே குடும்பத்துடன் குடியேறியுள்ளனர். அவர்கள் தற்போது நல்ல செழுமையான ஆரோக்கியமான வாழ்வை மேற்கொள்ளுகின்றனர்.

# இராணுவம் வெளியிட விரும்பாத ரகசியம்

சிறீலங்கா ராணுவத்தின் யாழ் நகர் மீதான படையெடுப்பு எந்தக் கட்டத்தில் உள்ளது. இது இன்று இலங்கையில் உள்ளவர்களினதும், வெளிநாடுகளில் உள்ள இலங்கை தொடர்பான அக்கறை உள்ளவர்களினதும் பொதுவான கேள்வியாக உள்ளது. ஏனெனில் யாழ் குடாநாட்டின் மீதான படையெடுப்பு குறித்து அரசாங்கம் வெளியிடும் தகவலில் இருந்து எவரும் யதார்த்த நிலையை உறுதி செய்ய முடியாமல் இருப்பது இதற்குக் காரணமாகும்.

யாழ் குடாநாட்டின் மீதான பெரும் படையெடுப்புக்கு சிறீலங்கா இராணுவம் ஏற்கனவே தயாராகிவிட்டது. போருக்கான தயாரிப்பு வேலைகள் பெரும்பாலும் பூர்த்தியடைந்திருந்தது. அரசாங்கமும் பல தடவைகள் இதனை ஊர்ஜிதம் செய்திருந்தது. இது ஒரு பொய்ப் பிரச்சாரம் என்று கொள்வதற்கில்லை. அந்த அளவிற்கு வெளிப்படையாகவே ஏற்பாடுகள் இருந்தன. இந்த நிலையில் 'சூரியப்பிரகாசம்' நடவடிக்கை கடந்த 17ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போது யாழ் குடாநாட்டிற்கான தாக்குதல் தொடங்கி விட்டது என்றது இதற்கான சமிக்ஞைகளைக் காட்டியதாக இருந்தது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சராலும் இராணுவத் தளபதியின் நேரடி மேற்பார்வையின் கீழும் இத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட போது அவ்வாறான ஒரு உணர்வு வெளிப்பட்டமை தவிர்க்க முடியாதிருந்தது. ஆனால் இராணுவத் தரப்பு இதனை வெளிப்படையாகவும் தெளிவாகவும் உறுதி செய்யவில்லை. தாக்குதல் இலக்கு குறித்து கருத்துக் கூற இராணுவத் தரப்பு மறுத்து வந்தது அல்லது வருகின்றது. அதிலும் 'சூரியப்பிரகாசம்' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் இக் குழப்பம் நீடித்ததோடு மட்டுமல்ல அதிகரித்துள்ளதென்றே கூறலாம்.

கொழும்பிலுள்ள செய்தியாளர்களும் இவ்வாறானதொரு நிலையிலேயே உள்ளனர். அதே சமயம் குடாநாட்டுப் போர் முனை பற்றியும் அவர்களிடம் தெளிவு எதுவும் இருப்பதாக இல்லை. ஒரு சிலரைத் தவிர அனேகர் அரசாங்க தரப்பு தகவல்களை அடிப்படையாகக் கொள்கின்றனர். அதன்படிக்கு வட பகுதி போர் முனை குறித்து மதிப்பீட்டைச் செய்ய முனைகின்றனர். இக்குழப்பத்தை மேலும் அதிகரிப்பதாக இருந்தது இராணுவப் பேச்சாளர் பிரிகேடியார் சரத் முனசிங்க சில தினங்களுக்கு முன்னர் பி பி சிக்கு அளித்த பேட்டியாகும்.

இப்பேட்டியில் அவர் இராணுவத்தினரின் இலக்கு குறித்து எதையும் கூற மறுத்ததோடு யாழ் நகரை நோக்கி இராணுவம் நகருமா என்ற கேள்விக்கு ஒழுங்கான பதில் அளிக்கவும் தயாராக இருக்கவில்லை. 'யாழ் நகரைப் பிடிப்பது எமது நோக்கம் என இப்போது வெளிப்படையாகக் கூற முடியாது. நாம் யாழ் நகரை நோக்கித்தான் முன்னேறுகின்றோம் எனக் கூற முடியாது. நாம் மேற்குத் திசைக்குத் திரும்பலாம், கிழக்கு நோக்கியும் நகரலாம். தெற்குத் திசையாகச் செல்லலாம். எமக்கு மூன்று வழிகள் உண்டு என்ற பிரிகேடியரின் பதிலானது அரசாங்கம் தனது இராணுவ இலக்கை வெளிவிடாது இரகசியம் பேண முயல்வதோடு தேவைகள் ஏற்படுமாயின் தாக்குதல் திட்டத்தில், தந்திரோபாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும்.

யாழ் குடாநாட்டின் மீது போர் நடவடிக்கையை அதாவது 'சூரியப்பிரகாசம்' தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பிக்க முன்னரே இவ்வாறான ஒரு திட்டத்தை இராணுவத் தரப்பானது கொண்டிருப்பினும் அண்மையில் இலங்கையில் நடந்துள்ள நிகழ்வுகள் அதை மேலும் ரகசியம் பேணவும் தாக்குதல் குறித்த குழப்பங்களையும் சந்தேகங்களையும் ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது என்றே கொள்ளலாம்.

இதற்கு பல காரணங்கள் காட்டக்கூடியனவாக உள்ளன. இதன் காரணமாக அடுத்த தாக்குதல் திட்டம் குறித்தோ அன்றி யுத்தத்தின் தொடர்ச்சி குறித்தோ இராணுவத் தரப்பில் உறுதி கூறமுடியாது. அத்தோடு இத்தாக்குதலில் இராணுவம் சந்தித்துள்ள இழப்புக்கள் அடுத்த கட்ட ஏற்பாடுகள் குறித்து இராணுவத்தை சிந்திக்கவும் வைத்திருக்கக்கூடும். முக்கியமாக 'சூரியப்பிரகாசம்' நடவடிக்கையின் இராணுவ வெற்றியில் எதிர்பார்த்ததைவிட கூடுதலான உயிரிழப்புக்களையும், இராணுவ தளபாட இழப்புக்களையும் சந்தித்துள்ளது இதற்குக் காரணமாகும்.

இவற்றோடு அரசாங்க தரப்புக் கூறுவதுபோல கொழும்பில் கொலன்னாவ உருகொடவத்த எண்ணைக் களஞ்சியங்கள் புலிகளினாலேயே தாக்கப்பட்டவையாயின் இராணுவம் யாழ் குடாநாட்டின் தாக்குதல் திட்டத்தை விரும்பியவாறு வெளியிடவோ அன்றிக் கையாளவோ முடியாதென்பதும் நிச்சயமாகும். ஏனெனில் யாழ் குடாநாட்டின் மீதான தாக்குதல் இலகுவானதாக இருக்கமாட்டாது என்பதோடு அதன் எதிர் விளைவுகள் பலமானதாகவும் இருக்கும் என்பதும் அண்மைக்கால நிகழ்வுகள் அரசிற்குப் புரிய வைத்திருக்கும். அதாவது யாழ் குடாநாட்டின் மீதான தாக்குதலில் பாதிப்புக்கள் எவ்வாறு அமையும் என்பதை அரச விளங்கிக் கொண்டிருக்க முடியும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சந்திரிகா அரசின் ஜனநாயக மீட்பு

கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் மக்கள் மத்தியில் பதட்டம் நிலவும் இவ்வேளையில், இராணுவப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், மற்றும் இராணுவ பேச்சாளரும் குடாநாட்டு போர் பற்றி நிறையப் பேசுகின்றனர். வடக்கில் குறிப்பாகக் குடாநாட்டில் கடும்சமர் நடைபெற்று வருவது உண்மைதான். ஆனால் கொலன்னாவ, உறுகொடவத்தவில் இடம்பெற்ற தாக்குதலே, சிங்களவர்களையும் உலகச் செய்தி ஸ்தாபனங்களையும் பெரிதும் கவர்ந்திருந்தன. இந்நிலையானது சிறீலங்கா அரசிற்குப் பெரும் சங்கடங்களை உணர்த்தி உள்ளதன் காரணமாகத்தான், கொழும்பில் நிலைகொண்டுள்ள செய்தி மையத்தை யாழ் குடாநாடு நோக்கித் திருப்பி விடுவதில் அரசாங்கம் முனைப்பாக ஈடுபட்டது. கொழும்பு வழமைக்கு திரும்பிவிட்டது போன்றும் கொலன்னாவ, உறுகொடவத்த தாக்குதல்களினால் அரசாங்கம் பெரிதாகப் பாதிக்கப்படவில்லை என்றும் காட்ட முனைந்தது. இதற்கு ஏற்றாற்போல் அமுலில் உள்ள செய்தித் தணிக்கையையும் அரசாங்கத்தரப்பு பயன்படுத்தி வருவதோடு, ஏற்கனவே குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ கெடுபிடியை விரைவு படுத்தவும் அரசு முயற்சித்தது. அவ்வாறான முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன. இதேசமயம், யுத்தமுனையில் இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பும் மற்றும் இராணுவ தளபாடங்களின் இழப்பும் அரசை விழிப்பாக்கி உள்ளது. ஆனால் எண்ணெய்க் களஞ்சியங்களும் குதங்களும் தாக்கப்பட்டமையானது, சிறீலங்கா அரசிற்குப் பெரும் நெருக்கடிகளையும், இடர்பாடுகளையும் ஏற் படுத்தி உள்ளது. இதனை அரசாங்கத்தரப்பினர், ஒருவருக்கொருவர் முரண்பாடாகப் பேசுவதிலிருந்து புரிந்து கொள்ள முடியும். இதனை, வெளிநாட்டு செய்தி நிறுவனங்களின் செய்தியாளர்களே சுட்டிக்காட்டியும் உள்ளனர். இது குறித்து பிபிசி சிங்கள சேவையின் செய்தியாளர் பெர்னாண்டோ குறிப்பிடுகையில், கொழும்பில் உள்ள எண்ணெய்க்குதங்கள் மீது ஏற்பட்டுள்ள தாக்குதல் குறித்து முன்னிற்குப்பின் முரணான வகையில் பொலிஸ்மா அதிபர், மற்றும் செயலகங்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் செய்திகளை வழங்குகின்றனர் என்றார். அத்தோடு, தகவல்களின் முரண்பாடு எண்ணெய்க்குதங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களின் எண்ணிக்கையிலும், எரிந்த குதங்களின் எண்ணிக்கையிலும், காணப்படுவதால் மக்கள் மத்தியில் பீதியும் பதட்டமும் எற்பட்டுள்ளன. அவர்களால் உண்மை நிலையை அறிந்துகொள்ள முடியாதுள்ளது எனவும் தெரிவித்தார். இதேசமயம் அரசாங்கம் செய்தித் தணிக்கை மூலம் தனக்குச் சார்பான ரீதியில் மேற்கொள்ள முனைந்துள்ள பிரச்சார நடவடிக்கைகளும் முக்கியத்துவம் பெறவில்லை. பெரும்பாலும் மறைமுகமான விளைவுகளையே அவை ஏற்படுத்தி உள்ளன. எடுத்துக்காட்டாகக் கூறுவதானால், கொழும்பு நகர் வழமைக்குத் திரும்பிவிட்டது என ரூபவாகினி தொலைக்காட்சி காட்டும் படங்கள் கொழும்பு நகர் வெறிச்சோடிக் கிடப்பதையும், ஆங்காங்கே சில பஸ்களில் சிலர் பயணம் செய்வதையும், மக்கள் அவசர அவசரமாகச் செயற்பட்டுக் கொண்டிருப்பதையுமே காட்டியுள்ளன.

வடக்கில் குறிப்பாகக் குடாநாட்டில் கடும்சமர் நடைபெற்று வருவது உண்மைதான். ஆனால் கொலன்னாவ, உறுகொடவத்தவில் இடம்பெற்ற தாக்குதலே, சிங்களவர்களையும் உலகச் செய்தி ஸ்தாபனங்களையும் பெரிதும் கவர்ந்திருந்தன. இந்நிலையானது சிறீலங்கா அரசிற்குப் பெரும் சங்கடங்களை உணர்த்தி உள்ளதன் காரணமாகத்தான், கொழும்பில் நிலைகொண்டுள்ள செய்தி மையத்தை யாழ் குடாநாடு நோக்கி திருப்பி விடுவதில் அரசாங்கம் முனைப்பாக ஈடுபட்டது.

இதே போன்றே எரிபொருள்களிற்குத் தட்டுப்பாடு இல்லை எனக் காட்ட முனையும் அரசாங்கம் நீண்ட வரிசையில் வாகனங்களும், மக்களும் எரிபொருள்களிற்குக் காத்து நிற்பதையும் ஒளிபரப்பியது. அதாவது எரிபொருள் விநியோகப் பங்கீடு எனக் காட்டமுனைந்து, எரிபொருள் குறித்து கொழும்பில் நிலவும் அச்சத்தையே வெளிக்காட்டியது. இந்த வகையில் கொலன்னாவ, உறுகொடவத்த தாக்குதல் குறித்து அரசாங்கம் மூடி மறைக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் பெரும்பாலும் தோல்விகண்டன என்பதோடு, எதிர்மாறான விளைவுகளையும் ஏற்படுத்தின என்றே கூறலாம். அத்தோடு குடாநாட்டுப் போர் முனையில் அரசாங்கம் திருப்ப முனைந்த கவனத்தையும், திருப்ப முடியாத அளவிற்குக் கொழும்பு நிலவரமும் உள்ளது. அதாவது குடாநாட்டுப் போர்முனை அரசாங்கம் எதிர்பார்த்ததை விட கடுமையானதாகவும், இழப்புகள் கூடியதாகவும் உள்ளது. இது செய்தி மையத்தைக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்குத் திருப்பும் நோக்கத்தையும் பாதித்துள்ளது என்றே கூறலாம். ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ஜனநாயகத்தை மீட்டுவிடப் போவதாகவும் மனித உரிமைகளிற்கு மதிப்பளிக்கப் போவதாகவும் வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த சந்திரிகா குமாரணதுங்கா அரசாங்கம் தகவல்களையும், கருத்துக்களையும் அறிவதையே தடைசெய்ய முனைந்துள்ளது. இது: சிறுபான்மை இனங்களின் உரிமைகளை மறுக்க முனைந்ததால், பெரும்பான்மை இனம் தேடிக்கொண்ட விடை ஆகும்■

# சிங்கள தேசத்தில் போர்க்கால நிலை

தமிழீழ விடுதலைப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரப் போவதாக பிரகடனம் செய்துள்ள சந்திரிகா குமாரணதுங்கா தலைமையிலான சிங்கள அரசு, தற்போது இலங்கை பூராவும் போர்க்கால நிலையை பிரகடனப்படுத்துவது குறித்து ஆராய்ந்து வருகிறது. போர்க்கால சூழ்நிலை பிரகடனப் படுத்துவது என்பது இலங்கை முழுவதும் மக்களை யுத்தத்திற்குத் தயாராக வைத்திருத்தல் என்பதே ஆகும்.

இதனை வெளிப்படையாகக் கூறுவதானால் சிங்களவர் அனைவரையும் தமிழ் இனத்திற்கு எதிரான யுத்தத்திற்குத் தயார் நிலையில் வைத்திருத்தல் ஆகும். இல்லாவிடில் போர்க்கால நிலையைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற சிந்தனை வந்திருக்காது. ஏனெனில் போர்க்காலச் சூழ்நிலைப் பிரகடனம் என்பது பொதுவாக வெளிநாட்டுப் படை எடுப்பு அல்லது அந்நிய நாட்டுடன் யுத்தம் என ஏற்படும் போது மக்களைத் தயார் நிலையில் வைத்திருக்க பிரகடனப்படுத்தப்படுவதாகும். போர்க்காலச் சூழலிற் கட்டுப்பாடுகளை அரசு மேற்கொள்ளலாம்.

இந்நிலையில் சிறீலங்கா அரசானது போர்க்காலப் பிரகடனம் மூலம் தமிழருக்கு எதிரான போர்ப் பிரகடனம் ஒன்றைச் செய்ய முனைகிறது என்றே கூறலாம். ஏனெனில் சிறீலங்கா அரசு இப்போது மேற்கொள்ள முனையும் போர்க்காலச் சூழ் நிலைப் பிரகடனம் என்பது, தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானது என்பதில் இரண்டாம் கருத்திற்கு இடமில்லை. இதேசமயம் போர்க் காலச் சூழ்நிலைப் பிரகடனம் என்பது சிங்களவர்களைப் போருக்குத் தயார்ப்படுத்தல் என்ற ரீதியில் மட்டுமே முக்கியத்துவம் பெறக்கூடியது ஆகும். இதிற் போர்க்காலச் சூழ்நிலையில் மேற்கொள்ளப்படும் பல நடவடிக்கைகளை ஏற்கனவே சிறீலங்கா அரசு மேற்கொண்டுள்ளது. குறிப்பாக செய்தித்தணிக்கையும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பெற்றோலியப் பொருட்களின் விநியோக தட்டுப்பாடும், இராணுவத்தினர் உட்பட, சகல ஆயுதப் படையினருக்கும் வழங்கிவரும் அல்லது வழங்குவதாக அறிவித்துள்ள சலுகைகளும் இவற்றில் அடங்கும்.

சிறீலங்கா அரசானது போர்க் காலப் பிரகடனம் மூலம் தமிழருக்கு எதிரான போர்ப் பிரகடனம் ஒன்றை செய்ய முனைகிறது என்றே கூறலாம். ஏனெனில் சிறீலங்கா அரசு இப்போது மேற்கொள்ள முனையும் போர்க்காலச் சூழ் நிலைப் பிரகடனம் என்பது, தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானது என்பதில் இரண்டாம் கருத்திற்கு இடமில்லை.

அத்தோடு வெண்தாமரை இயக்கக் கழகம் இவ்வாறான ஒரு பணியையே மேற் கொண்டுள்ளது என்றே கூறவேண்டும். யுத்தத்தைச் சிங்களவர் மத்தியிற் கொண்டு செல்லும் இவ்வியக்கமானது யுத்தத்தினால் பாதிப்புற்றோருக்கு உதவுதல் என்ற ரீதியில் படையினருக்கு உதவவும் உற்சாகமூட்டவும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் முனைப்பாக உள்ளது. இதற்கும் அப்பால் 50,000 பேர்களைக் கொண்டதாக அரசு அமைத்துள்ள பொதுமக்கள் பாதுகாப்புப் படை இவற்றின் மற்றுமொரு அங்கமாக அமையக்கூடியதாகும், அதாவது மக்களை ஆயுத பாணிகளாக்கும் இந்த நடவடிக்கை போர்க்காலச் சூழ்நிலையின் ஓர் அம்சமாகும். இந்நிலையிற் போர்க்காலச் சூழ்நிலைப் பிரகடனம் என்பது ஏற்கனவே அரசாங்கத்தின் மனதில் உள்ள சில திட்டங்களைச் சூழற் படுத்தும் நோக்கம் கொண்டதாகவும் இருக்க முடியும்.

இதிலும் குறிப்பாகக் கட்டாய இராணுவச் சேவையை சூழற் படுத்தும் நோக்கம் கொண்டதாக் கூடத் திட்டம் இருக்க முடியும். ஏற்கனவே விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அரசு வெற்றிபெற வேண்டுமானால் இன்னும் 1 லட்சம் பேர்வரை தேவை என சந்திரிகா கூறியிருந்தார். அத்தோடு 50,000 கோடி போர் நிதியாக வேண்டும் எனவும் ஜனாதிபதி கூறியிருந்தார். இந்த வகையிற் போர்க்காலப் பிரகடனம் என்பது போருக்கு அதிகமான தேவையினை அரசாங்கம் திரட்டிக் கொள்வதற்கான ஒரு நடவடிக்கையாகக் கொள்ளலாம். அதாவது சிங்கள தேசத்தின் பலத்தைச் சந்திரிகா அரசு போராகத் திரட்ட முனைகின்றது என்று கூறமுடியும். இந்நிலையானது சிங்கள தேசம் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ள முனையும் ஒட்டுமொத்தமான இன அழிப்பு முயற்சியையே காட்டுகிறது. இனப் போர் என்ற ரீதியில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கையை தமிழ் மக்கள் இன்று விரும்பியோ விரும்பாமலோ எதிர் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திலேயே உள்ளனர். ஆகையினாற் தமிழினம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஒட்டு மொத்தமான போராட்டத்தில் இறங்குவதைத் தவிர்க்கமுடியாது■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சாவதேச சமூகத்தைத் திசை திருப்பும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா

அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலத்த தோல்விகளைத் தழுவிக் கொண்டிருக்கும் சந்திரிகா, "உண்மைக்கு மாறான" பிரச்சாரங்களைச் சர்வதேச ரீதியாக முடுக்கிவிடும் பிரச்சார தந்திரத்தைத் தனது கடைசி ஆயுதமாகக் கைக்கொண்டுள்ளார். இதனை மூன்று வழிகளில் சந்திரிகா கையாள்கிறார்.

# ஏமாறப் போவது சர்வதேச சமூகமல்ல, சந்திரிகாவே!

-பற்றிமாகரன்- B.A.(cey)Special Diploma(Oxford)

1) தான் சமாதானத்தை விரும்பியதாகவும், புலிகள் அதனை நிராகரித்து யுத்தத்தில் இறங்கியதாகவும் ஜனாதிபதி என்ற முறையிலும் தனக்கு இருக்கும் சர்வதேசத் தொடர்புகளைப் பயன்படுத்தியும் நேரடிப் பிரச்சாரம் செய்தல்.

2) தான் இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுள்ள இன அழிப்பு நடவடிக்கைகளின் விளைவாக வரலாறு காணாத இனப் படுகொலைகளையும் இனத் துன்புறுத்தல்களையும் அனுபவிக்கும் தமிழ் மக்கள்பால், சர்வதேச சமூகமும் மக்களும் கொள்ளும் அனுதாபத்தை- அக்கறையைத் திசை திருப்பக்கூடிய வகையிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அபகீர்த்திகளை ஏற்படுத்தக் கூடிய முறையிலும் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விடுதல்.

3) உண்மை நிலையினை வெளிப்படுத்தும் சர்வதேச நிறுவனங்கள், தகவற் தொடர்புச் சாதனங்களைக் கண்டித்தும் தொடர்புகள் ஏற்படுதலைத் தடுத்தும் தணிக்கை நிலையிலான செய்திகளுக்கு உண்மை நிலை எனும் உருவாக்கம் கொடுத்தல்.

இந்த மூன்று வழிகளிலும், சந்திரிகாவின் சதிகாரச் செயல்பாட்டில் உள்ள உண்மைக்கு மாறான நிலைகளை வெளிப்படுத்தி தெளிவுபடுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பேச்சு வார்த்தையும் யுத்தமும்

தமிழீழ விடுதலைப் புலிகளினால், தாம் பேச்சு வார்த்தை நடத்த ஏன் முன் வந்தோம் என்ற காரணம் நன்கு தெளிவாக விளக்கப்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்குச் சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் கூறியவைகளை ஜனாதிபதிக்கும் வாசகர்களுக்கும் மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

> விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தையை அணுகுகின்றனரே தவிர, பேச்சு வார்த்தை என்ற பெயரிற் சலுகைகளை ஏற்று பதவியைப் பெற்று தமிழ் மக்களைப் பலிகொடுக்க ஒரு பொழுதும் நினைக்க மாட்டோம் என்பதைச் சந்திரிகாவுக்கு நன்கு தெளிவு படுத்தியே விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தைக்குச் சென்றனர். ஆகவே, விடுதலைப் புலிகள் தம்மை ஏமாற்றியதாகச் சந்திரிகா சீறுவது திட்டமிட்ட திரிபு வாதமாகும்.

1.1 'அரசியற் தீர்வொன்றை வகுப்பதற்காகப் பேச்சு வார்த்தை நடாத்துவதற்கு, புலிகளும் அரசாங்கமும் முன்வர வேண்டிய தருணம் வந்துவிட்டது. ஏற்கனவே எமக்கு இருப்பதைவிடக் கூடுதலானதையே நாம் பெறக் கூடியதாக இருக்க வேண்டும். கௌரவத்துடனும் சமாதானத்துடனும் வாழ்க்கையை நடாத்தக் கூடியதாக அரசியல் உரிமைகளுடன், எமது தாயகத்திற்குச் சுயாட்சி கிடைக்க வேண்டுமென்பதே எமது நோக்கமாகும். எமது மக்களுக்குக் கணிசமான அளவு சுயாட்சி அமைப்பொன்றைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

1.2 நாம் இப்போது அனுபவிக்கும் உரிமைகளுக்குச் சர்வதேச அங்கீகாரத்தையே நாடி நிற்கின்றோம். சுதந்திர அரசொன்றுபோல் தோன்றும் நிர்வாகம் ஒன்றை இப்போது இங்கு நாம் நடத்தலாம். ஆனால் இலங்கை, இந்தியா, மற்றும் ஏனைய உலக நாடுகளின் அங்கீகாரம் எமக்கு முக்கியமானதாகும். ஒரு அரசியற் தீர்வு ஏற்படுமானால், அரசியலமைப்பு ரீதியாகப் பிரதேச சுயாட்சி வழங்கப்படுமானால் இந்த அதிகாரங்கள் அங்கீகரிக்கப்பட்டு அரசியல் அமைப்பிலும் பொறிக்கப்படுமானால் எமது நிலைப்பாட்டில் மாற்றத்தைக் கொண்டுவரமுடியும்.

1.3 தமிழீழக் கோரிக்கை தொடர்பாக அரசாங்கம் எங்களுடன் பேச்சு வார்த்தை நடாத்த முடியாது என்பது வெளிப்படையானது. ஆனால், தமிழீழத்திற்குக் கணிசமான அளவு மாற்றுத் திட்டத்தைக் பரிசீலிக்க நாம் தயாராக இருக்கிறோம். சுயநிர்ணய உரிமைக்கான எமது கோரிக்கையை நாம் கைவிடுகிறோம் என்பது இதன் அர்த்தமல்ல.

1.4 நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்தது. பிரதமர் சந்திரிகாவுக்கு வரையறைகள், மட்டுப்பாடுகள் இருக்கின்றன. பாராளுமன்றத்தில் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவிலேயே அவரது அரசாங்கம் தங்கியிருக்கிறது. நாம் பேச்சு வார்த்தை நடாத்தி இனப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றைக் காண்பதற்கு, கொழும்பில் உறுதியான அரசாங்கம் ஒன்று இருக்க வேண்டியது அவசியமாகும். அதற்கு, ஆக்க பூர்வமான அரசியல் அமைப்பு மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், அரசாங்கத்திடமிருந்து எந்த விதமான உருப்படியான யோசனைத் திட்டங்களும் எமக்கு வந்ததாக இல்லை. அரசாங்கம் கணிசமான அளவு யோசனைத் திட்டங்களுடன் வரட்டும். நாம் அதற்குப் பதிலளித்து பரிசீலனைக்கு எடுக்கத் தயார்"

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மேற்கூறிய விளக்கம், சந்திரிகாவின் இன்றைய பொய்ப் பிரச்சாரத்தைப் படம் பிடித்துக்காட்ட மிக அவசியமாகிறது. கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின், பேச்சு வார்த்தை நடாத்த முன் வந்தமைக்கான காரணங்களைப் படிப்பவர் எவரும், உலகில் வேறெந்த விடுதலை இயக்கமும் இவ்வளவு தூரம் இதய சுத்தியுடனும் அரசியல் நேர்மைத்தனத்துடனும் சமாதானத்திற்கு மேலான தமது அக்கறையை வெளிக் காட்டியிருக்க மாட்டார்கள் என்பதை உணர்ந்து கொள்வர்.

விடுதலைப் புலிகள், 'அரசு நோக்கிய அரசொன்றின்" உரிமையாளர்கள் என்ற, "யதார்த்த நிலையை" தெளிவுபடுத்தி, "போருக்கு முடிவு கட்டுவதாகச் சிங்கள மக்களிடம் ஆணை பெற்று" ஆட்சிக்கு வந்த சந்திரிகா அரசாங்கத்துடன் போர் இன்றி, சமாதான வழியில் தேசிய இனங்களுக்கிடையிலான நெருக்கடிக்கு ஏற்புடைய தீர்வையே விடுதலைப் புலிகள் கோரினர். "ஏற்கனவே எமக்கு இருப்பதைவிடக் கூடுதலானதையே நாம் பெறக்கூடியதாக இருக்க வேண்டும்" என (1.1) இல் தெளிவாகக் கூறிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் (1.2) இல் "சுதந்திர அரசொன்று போல் தோன்றும் நிர்வாகம்" அங்கு இருப்பதைச் சுட்டிக்காட்டி, இந்த அமைப்புக்குச் சர்வதேச அங்கீகாரத்தை (இலங்கை, இந்தியா உட்பட) நாடி நிற்கின்றனர் என்பதையும் விளக்கி, ஆயினும் சமாதான வழியில் இந்த நிலைகளை உறுதி செய்து "கௌரவத்துடனும் சமாதானத்துடனும் வாழக் கூடிய" மாற்றுத் திட்டமொன்றை முன்வைக்கச் சந்திரிகா அரசாங்கம் முன்வருமானால், அதனைப் பரிசீலிக்கத் தயார் எனவும், ஆனால் "சுயநிர்ணய உரிமைக்கான எமது கோரிக்கையை நாம் கைவிடுகிறோம் என்பது இதன் அர்த்தமல்ல" எனவும் (1.3) இல் தெளிவுபடுத்தினார். அது மட்டுமல்ல, மிகத் திறந்த மனதுடன், மிகவும் துணிச்சலான அரசியல் நேர்மையுடன் "சிறீலங்கா அரசாங்கம் கொழும்பில் உறுதியாக இருக்க வேண்டும். அதனால் ஜனாதிபதித் தேர்தல் முக்கியமானது. அவ்விதம் உறுதியான அரசாங்கம் கொழும்பில் இருந்தால்தான், இனப் பிரச்சினைக்கு ஏற்புடைய அரசியல் அமைப்பு மாற்றங்களூடாகத் தீர்வினை ஏற்படுத்தலாம்" என உறுதியாகவும் கூறினார்.

இவ்வளவு தூரம் அரசியல் நேர்மையுடனும் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடனும் சமாதானத்திற்காக ஒத்துழைக்க முன்வந்த விடுதலைப் புலிகளைத்தான் இன்று சந்திரிகா அரசாங்கம், "சமாதானத்தைச் சீர்குலைத்தவர்கள் எனச் சர்வதேச ரீதியிற் பிரச்சாரம் செய்கின்றது.

எந்த நோக்கத்திற்காக, "எமக்கு இருப்பதைவிடக் கூடுதலானதையே நாம் பெற வேண்டும்." அதற்காகவே பேச்சுவார்த்தையில் ஈடுபட விரும்புகின்றோம் என்பதைப் புலிகள் வெளிப்படையாகவே கூறியிருந்தனர். அத்துடன், போரைத் தவிர்த்து சமாதானத்தின் மூலம் தமிழ் மக்களின் கௌரவத்தையும் சமாதான வாழ்வையும் உருவாக்கக்கூடிய ஒரு சுயாட்சியைப் பெறுவதற்கான கருவியாக்கத்தான் விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தையை அணுகுகின்றனரே தவிர, பேச்சு வார்த்தை என்ற பெயரிற் சலுகைகளை ஏற்று பதவியைப் பெற்று தமிழ் மக்களைப் பலிகொடுக்க ஒரு பொழுதும் நினைக்க மாட்டோம் என்பதைச் சந்திரிகாவுக்கு நன்கு தெளிவுபடுத்தியே விடுதலைப்புலிகள் பேச்சு வார்த்தைக்குச் சென்றனர். ஆகவே, விடுதலைப் புலிகள் தம்மை ஏமாற்றியதாகச் சந்திரிகா கூறுவது திட்டமிட்ட திரிபுவாதமாகும்.

> தாராண்மைப் பொருளாதாரக் கொள்கைகளின் தெற்காசிய மயப்படுத்தலுக்கு, யுத்தநிலை ஊறு விளைவிக்கிறது என்ற பிரச்சாரத்தை வேகப்படுத்தி, சர்வதேச நாடுகளின் வர்த்தக நலன்களின் அக்கறையைத் தன்பால் ஈர்த்துக் கொள்ளவும் முனைகின்றார்.
>
> ஜனநாயகத்தைச் சவக்குழிக்கு அனுப்பும் சந்திரிகா, யுத்தச் செலவுக்காக 4000 கோடி ரூபாக்களை வீணடிக்கிறார்

மாறாக அரசியல் யதார்த்தத்தை ஏற்க மறுத்து, சலுகைகளைக் காட்டி மக்களை ஏமாற்றி, விடுதலைப் புலிகளையும் மக்களையும் பிரிப்பதற்கான பொறியாகப் பேச்சு வார்த்தையைச் சந்திரிகா அணுகியமையே, பேச்சு வார்த்தை முறிந்தமைக்கான காரணமாகும். சந்திரிகாதான் காலக்கெடுவைக் கூட கவனத்தில் எடுத்துப் பார்க்காது போருக்கு அழைத்தார். ஆனால் இன்று, விடுதலைப் புலிகளே போருக்கு அழைத்ததாகக் கூறுகின்றார்.

சந்திரிகா, சிறீலங்கா அரசு இனவாதத்துடன் பயங்கரவாத ஆட்சி நடத்துகிறது என்று சர்வதேச ரீதியாகப் பரவியிருந்த கருத்தை மாற்றி, சிறீலங்கா அரசு சமாதானத் தீர்வினைக் கொடுக்க முனைகிறது, விடுதலைப் புலிகளே அதனைத் தடுக்கின்றனர் என்ற பொய்மைப் பிரசாரத்தைப் பரப்பி, அதன் பின்னர் இனஅழிப்பு நடவடிக்கைகளுக்கு"இராணுவத் தீர்வு" அதுவும் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காகவே என, சட்ட முலாம் பூசுவதற்கான ஊடகமாகவே பேச்சு வார்த்தையைக் கருதி அதில் இறங்கினார்.

இன்று அதைத்தான் செயற்படுத்துகின்றார். அதாவது, பேச்சு வார்த்தையின் ஊடாக, யுத்தத்தையே எதிர்பார்த்துச் செயற்பட்டார் என்பதையே சந்திரிகாவின் இன்றைய இராணுவ நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. யுத்தத்திற்கு இட்டுச் செல்வதற்கான உத்தியாகத்தான் பேச்சு வார்த்தையைச் சந்திரிகா பயன்படுத்தினார்.

அத்துடன், தாராண்மைப் பொருளாதாரக் கொள்கைகளின் தெற்காசிய மயப்படுத்தலுக்கு, யுத்தநிலை ஊறு விளைவிக்கிறது என்ற பிரச்சாரத்தை வேகப்படுத்தி, சர்வதேச நாடுகளின் வர்த்தக நலன்களின் அக்கறையைத் தன்பால் ஈர்த்துக் கொள்ளவும் முனைகின்றார். ஆனால், தாராண்மை ஜனநாயகத்தைச் சவக்குழிக்கு அனுப்பும் சந்திரிகா, யுத்தச் செலவுக்காக 4000 கோடி ரூபாக்களை வீணடித்துத் தாராண்மைப் பொருளாதாரத்தின் மீதான கட்டுப்பாடுகளைத் தானே மேற்கொள்கின்றார் என்ற உண்மை உணரப்பட, அதிக நாட்கள் எடுக்காது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# இலட்சிய ஆசைகள்

ஆசைகள்......

அவை அலாதியானவை.

ஒவ்வொருவரும் சிற்சில ஆசை விதை-களைத் தமது மனங்களில் நட்டுவைத்து நீருற்றிக்கொண்டிருப்பார்கள்.

ஆசைப்படுவது மனித சுபாவம்-இயற்கை உணர்வு.

சாதாரண மனிதர்களும் எதையாவது அடைய ஆசைப்படுவார்கள்.

பிள்ளைகளின் எதிர்காலம், குடும்பப் பொருளாதாரத்தின் முன்னேற்றம்- இவை, சாதாரண மனிதர்களின் சாதாரண ஆசைகள்.

தேசத்தின் விடுதலையை - அந்த விடுதலை நோக்கிய ஒவ்வொரு வெற்றிப் படிகளை- கண்குளிரக் கண்டுகளித்தல்-

இவை சரித்திர மனிதர்களின் இலட்சிய ஆசைகள்.

இத்தகைய இலட்சிய ஆசைகள் பலவற்றைத் தலைவர் அவர்கள், பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

படைத்துறைப் பள்ளியைத் திறந்துவைத்து விட்டு, தனது இலட்சிய ஆசைகளில் ஒன்றைத் தலைவர் இவ்விதம் வெளிப்படுத்தினார்.

"நான் ஒரு கனவு காண்கிறேன். அந்தக் கனவு நனவாகி, நடைமுறை உண்மையாக வேண்டும் என்பது எனது அவா. எனது எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய-இளம் பரம்பரை தோற்றங்கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, அறிவு ஜீவிகளாக, தேசப்பற்றாளர்களாக, போர்க் கலையில் வல்லுநர்களாக, நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக, ஒரு புதிய புரட்சிகர பரம்பரை தோன்றவேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக - நிருவாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும். இது ஒரு பெரிய ஆசை. அலாதியான கனவு. எனினும் நான் முயற்சிக்கின்றேன். முயற்சி ஆக்கம் தரும் என்பதில் எனக்கு ஆழமான நம்பிக்கை உண்டு".

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

இப்படித்தான் 15 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள்.

அது 1970 களின் பிற்பகுதி-

இரண்டு கைகளினதும் விரல்களது தொகைக்குள் அடக்கப்படக்கூடிய அளவு எண்ணிக்கையான உறுப்பினர்களே அப்போது இயக்கத்தில் இருந்தனர். அந்த உறுப்பினர்களுக்கான இராணுவப் பயிற்சிகளையும் தலைவரே வழங்கினார். இயக்கத்தின் தலைவராகவும், அதேவேளை ஒரு பயிற்சி ஆசிரியனாகவும் தலைவர் அவர்கள் செயற்பட்டகாலம் அது.

இருநூறு - முந்நூறு பேர்கொண்ட இன்றைய பயிற்சி முகாம்களையும், ஐந்து - பத்துப்பேர்கொண்ட அன்றைய பயிற்சி முகாம்களையும் உங்களது மனத்திரையில் மாறி மாறி எண்ணிப் பாருங்கள். அது வியப்பாகவும் இருக்கும், பெருமையாகவும் இருக்கும்.

பயிற்சி கொடுப்பது - பயிற்சி முகாம்களை நடாத்துவது மட்டுமல்ல, அந்த ஐந்து-பத்துப் பேருக்கான இராணுவ சீருடைகளைப் பெறுவதற்கும் அது கடினமானதொரு காலம்.

அன்று ஒரு நாள்-

எதிர்காலத்தில் இயக்கத்தில் ஏற்பட வேண்டிய வளர்ச்சி பற்றி திரு. அன்ரன் பாலசிங்கத்திற்கு எடுத்து விளக்கிக் கொண்டிருந்த போது, தலைவர் சொன்னார்-

அண்ணை!- ஒரு ஐம்பது போராளிகள் சீருடை அணிந்து கொண்டு - ஆயுதங்கள் ஏந்தியபடி - அணிவகுத்து நிற்கும் காட்சியை நான் பார்க்கவேண்டும் என்பதுதான் எனது இப்போதைய ஆசை, என்றார்.

தலைவர் வெளிப்படுத்திய அந்த ஆசையை - தான் வீரச்சாவடையும்வரை - மூத்த உறுப்பினர் லெப். சீலன் (சாள்ஸ் அன்ரனி) தனது மனதிலேயே சுமந்து திரிந்து பணியாற்றினார். அவர் வீரச்சாவடைவதற்கு சில காலத்திற்கு முன்னர் ஏதோ ஒரு அலுவலாக யாழ் நகரத்திற்குச் செல்ல வேண்டி இருந்தது. அந்தக் காலம் யாழ் நகரம் சிங்களப் படைகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் இருந்த நேரம். ஒழுங்கை ஒன்றிற்கூடாக துவிச்சக்கர வண்டியிற் சென்ற சீலனும் அவருடன் கூடச் சென்ற இன்னொரு தோழரும், நகரத்தின் உள்ளே இருந்த பிரதான வீதியில் போய் ஏறியதும், அங்கே இருந்த ஒவ்வொரு கடைகளுக்கு முன்னாலும் சிங்கள இராணுவத்தினர் நின்றதைக் கண்டனர். ஆயுதங்களைத் தோளில் போட்டபடி கூட்டங்கூட்டமாக நின்ற படையினரைப் பார்த்துவிட்டு, சீலன் தனது சக தோழரிடம் கூறினார்-

"மச்சான் இவங்கள் நிற்பதைப் போல, "எல்லா இடத்திலும் எங்கடை பெடியளும் ஆயுதங்களோடை சிரிச்சுக் கதைச்சபடி - கூட்டங்கூட்டமாக நிற்கிறதை ஒரு முறை கற்பனை செய்து பார்!"

தலைவரின் இலட்சிய ஆசை ஒன்று, தலைவரின் வலது கரமாகச் செயற்பட்ட அந்தத் தளபதியையும் பற்றிக்கொண்டு அவரை இயக்கியதையும் காணக்கூடியதாக இருந்தது.

தலைவரின் இலட்சிய ஆசையை நிறைவேற்றப் பாடுபட்டதுடன், உயிர்த் தியாகத்திற்கு ஒரு அற்புதமான முன்னுதாரணமாகத் திகழ்ந்த அந்தத் தளபதி இன்று இல்லை. ஆனால் அவரது பெயரிலேயே ஒரு படையணியை உருவாக்கி, அவரது கற்பனையைத் தலைவர் அவர்கள் நனவாக்கினார்.

"50 புலி வீரர்களைச் சீருடையுடன் பார்க்கவேண்டும்" என்ற தலைவரின் ஆசை, அதை அவர் வெளியிட்டு நாலு ஐந்து வருடங்களிலேயே நிறைவேறி விட்டது. பின்னர் ஐம்பது நூறாகி, நூறு ஆயிரமாகி, இன்று ஆயிரம் பல்லாயிரமாகப் பெருகிவிட்டது! 'கெரில்லாக் குழு' என்ற பெயர் மாறி, 'உலகிலேயே பலம் வாய்ந்த விடுதலை இயக்கம்' என்ற புகழும் எமது இயக்கத்திற்குக் கிடைத்துவிட்டது.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

அண்மையில் சிங்களப் படைகள் 'முன்னோக்கிப் பாய்ச்சலில்' ஈடுபட்டபோது அதற்கு எதிராக - தலைவர் 'புலிப்பாய்ச்சலை' நிகழ்த்தினார்.

'50 போராளிகளை வரிசையாக நிற்கவைத்துப் பார்க்க வேண்டும்' என்று ஆசைப்பட்ட தலைவர் அவர்கள், 'புலிப்பாய்ச்சலில்' பங்குகொள்ளத் தயாராக, கனரக ஆயுதங்களுடனும் வரிப்புலிச்சீருடையுடனும் ஆண்களும்-பெண்களுமாக ஆயிரக்கணக்கான புலிவீரர்கள், தத்தம் தளபதிகளுடன் அணிவகுத்தபடி கம்பீரமாக நின்றுகொண்டு உறுதிப் பிரமாணம் எடுத்த காட்சியைப் பார்த்தபடி சொன்னார்-

'இதைப் பார்க்க எனக்கு உண்மையில் மெய்சிலிர்க்குது என்று!'

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

இப்படியான சின்னச் சின்ன இலட்சிய ஆசைகளைப் போலவே, பென்னம் பெரிய கனவுகளும் தலைவரின் மனதில் இருக்கின்றன. இந்த ஆசைகளைப் போலவே அந்தக் கனவுகளும் ஒரு நாள் நனவாகும்!.

## உலகத் தமிழினத்தின் தலைவன் பிரபாகரனே!



'இத்திராவிட அரசியலின் கீழ், தமிழரின் அறிவுத் தலைவனாம் பாவாணரும் தமிழரிடமிருந்து செவ்வனவே மறைக்கப்பட்டார். உலகத் தமிழினத்தின் தானைத் தலைவனாம் ஈழத்து எல்லாளன் பிரபாகரன் கழகங்களால் வஞ்சிக்கப்பட்டதுடன், மிக இழிவாகக் கொச்சைப்படுத்தப்பட்டும் வருகின்றார். அகவாழ்க்கையிலும் புறவாழ்க்கையிலும் நல்லொழுக்கத்திற்கு நல்ல சான்றோர்கள் அவர்களாவர். எந்தத் திராவிடத் தலைவராவது அவர்களுக்கு ஈடாகுவாரோ!

அறிவுக்கு இனிப் பாவாணரே தலைமை! தமிழரின் மறத்திற்கு ஈழத்து எல்லாளனே தனிப்பெரும் தலைவன்! தமிழரின் வீரத்தை உலகத்தில் மீண்டும் அரங்கேற்றி வரும் புதிய புறநானூற்றுத் தலைவனே தமிழரால் போற்றுதற்குரியவன்! இக்காலக் கரந்தடிப்போரிற்குப் புதிய இலக்கணமானது அவனது தமிழ் மறம்! தமிழ் நாட்டின் விடுதலைக்கு அத்தகைய தலைவனொருவன் இயல்பாகவே தோன்றும்வரை, அந்த எல்லாளனுடைய வீரமும் துணிவும் கொள்கைகோணாமையுமே தமிழகத்திற்கு நன்கு வழிகாட்டட்டும்! இந்த ஓர்மை, இனமானமிக்க தமிழிளைஞரிடம் வேர்கொண்டு விட்டால் தமிழர்களுக்கு இனி எந்த இரவல் தலைவனும் போலித் தலைவனும் தேவையில்லை.

-குணா

(1995) இல் வெளிவந்த இந்தியா-பெங்களூர் ஆய்வரண் வெளியீடான 'திராவிடத்தால் வீழ்ந்தோம்' எனும் நூலிலிருந்து!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கைகளுக்குள் வீழ்கிறது களம்

ஆவணி மாதம் 29ஆம் நாளின் முன்னிரவில், முல்லைத்தீவுக் கடலில் புலிகள் சுற்றிவளைத்தது, கப்டன் லொவோலா பெர்னாண்டோவின் தலைமையிலான ஐரிஸ் மோனா என்ற கப்பலை அல்ல. உண்மையில் சிங்களப் படைத்துறையின் மானத்தையும், மனவுறுதியையும், 'இராணுவத் தீர்வையே' வழங்க முனைந்த சந்திரிகா அரசின் தலைக்கனத்தையும், இறுமாப்பையுமே ஆகும்.

சிங்களப் படைக்கு ஒரு துணைப்படையாக உதவும் டக்ளஸ் தேவா கும்பலின் பாவனையிலிருந்த, 'ஐரிஸ் மோனா' கப்பலை நாம் வழிமறித்தது - சிங்களக் கடற்படையை சண்டைக்குள் இழுக்கும் ஒரு போரியல் நோக்கிற்காகவேதான்.

அது யாழ். குடாப் போர் அரங்கில் நிலைகொண்டிருக்கும் துருப்புக்களுக்கான, தனி ஒரு வழங்கற் பாதையான கடல்வழியைச் சேதத்திற்கு உள்ளாக்கும் திட்டத்தின் ஒரு அங்கம்.

இருப்பினும் - அதற்காகப் "புலிகள் பொதுமக்களை இரையாகப் பயன்படுத்தினர்" என எவரும் கருதினால், அது தவறானதாகும். கப்பலை மட்டுமே நாம் அவ்வாறு பயன்படுத்தினோம். கையகப்படுத்தியவுடனேயே, 'ஐரிஸ் மோனா'விலிருந்த அனைவரையும் பாதுகாப்பான தூரத்திற்கு அகற்றிவிட்டு வெறும் கப்பல்தான் வெற்றியின் தூண்டிலாகக் கடலில் நிறுத்தப்பட்டது.

எதிர்பாராதவிதமாகப் பயணிகள் கப்பலிற்குள் இருக்கும்போதே சண்டை மூண்டிருந்தால்கூட, மக்களுக்குத் தீங்கு விளையாதவாறு சண்டையை வெல்லும் முன்னெச்சரிக்கை வழிமுறைகளையும் கடற்புலிகள் கைவசம் கொண்டிருந்தனர்.

அதிகாலை 5.30 மணிக்குள் காரைநகரை வந்தடைய வேண்டிய கப்பல் வந்து சேரவில்லையே என்றோ, புறப்பட்ட கப்பல் போய்ச் சேர்ந்ததோ என்றோ, எந்தக்



**கப்டன் செவ்வானம்**
கிருஸ்ணபிள்ளை சுமதி, மூளாய் தெற்கு யாழ்ப்பாணம்.

கவலையும் படாமலிருந்த படையினர், முதலில் -

'முல்லைத்தீவில் மர்மக் கப்பல் ஒன்று தரித்திருக்கின்றது' எனக் கிடைத்த ஒரு தகவலை, 'புலிகளின் கப்பல் ஆயுதங்களை இறக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றது' என நம்பினர்.

சிங்கள முப்படைகளினதும் கூட்டு நடவடிக்கைகளுக்கான தளபதி மேஜர் ஜெனரல் றொகான் தளுவத்தையின் பணிப்பிற்கிணங்க, கிழக்குக் கடற்பிராந்தியத் தளபதி கொமடோர் தயா சந்தகிரி - 'பி. 458' இலக்க 'டோறா', 'பி. 463' இலக்க 'சுப்ப டோறா' ஆகிய அதிவேகத் தாக்குதற் படகுகளைக் கடற்படையின் பாரிய போர்க் கலமான 'ஜெயசாகரா' என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலின் தலைமையின் கீழ், களத்தில் இறக்கினார்.

புலிகளின் நோக்கம் நிறைவேறியது.

அது ஓகஸ்ற் 29ஆம் நாளின் மதியப்பொழுது.

குறிப்பிட்ட ஒரு கடற்பகுதியில், தான் கப்பலொன்றைக் கண்டுள்ளதாகவும், அதனை நெருங்கித் தனது படகைச் செலுத்துவதாகவும், 'சுப்ப டோறா'வின் கட்டளை அதிகாரியான லெப். நளின்



**தலைவருடன் கப்டன் அருள்ஜோதி**
முத்துலிங்கம் சியாமளா, காரைநகர், யாழ்ப்பாணம்

விஜயசிங்க, 'ஜெயசாகரா'வுக்கும் மற்றைய 'டோறா'வுக்கும் அறிவிக்கின்றார்.

உடனடியாக அவையிரண்டும் 'சுப்ப டோறா' வுக்குத் துணை சேர்வதற்காக அப்பகுதியை நோக்கி விரைய - 'ஜெயசாகரா' விலிருந்து மின்னிய செய்தி, கிழக்குப் பிராந்திய கட்டளைப் பணியகத்தை உசுப்பி விடுகின்றது.

திருக்கோணமலையிலும், காரைநகரிலும், வடக்கு-கிழக்கு கடற்பரப்பிலும் ஏற்கெனவே பலதடவை கண்டிருந்ததனால், 'ஐரிஸ் மோனா'வைப் படையினர் சுலபமாக இனங்கண்டனர். அத்தோடு, கப்பலின் பின்புறத்திலும், முன்புறத்திலும் பெரிய எழுத்துக்களில் இருந்த 'IRISH MONA' என்ற பெயரையும், அவர்கள் கவனித்தனர்.

எனினும் -

புலிகளால் அது வழிமறித்து நிறுத்தப்பட்டுள்ளது என்பதை ஊகிக்கத் தவறினர். அதுதான் கடற்புலிகளுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு.

'சுப்ப டோறா' போதிய அளவு தூரத்திற்குள் அண்மித்துவிட்டது. தாக்குதல் வலயத்திற்குள் உட்பட்டுவிட்டது. கடற்புலிகள் விரித்திருந்த வியூக வலைக்குள் அது சிக்கிவிட்டது!

இதுதான் தருணம்! அமைவாகப் பொருந்தியது காத்திருந்த சுபநேரம்! குறி தவறாத குறி வைப்பு! இதோ எகிறிய அடி! பேரோசையோடு கேட்ட வெடியதிர்வோடு தீச்சுவாலை பிரகாசித்தது!

கண்ணிமைப் பொழுதிற்குள் கடலை நிறைத்த கடற்புலிகளின் போரூர்திகள், புகைந்துகொண்டிருந்த 'டோறா'வை வளைத்துத் தாக்கின. விரைந்து நெருங்கிய வேகத் தாக்குதல் அதன் சுடுதிறனை முறியடிக்க, 'டோறா' அடிபணிந்தது. சற்று நேரத்தின் பின்னர்,

பூநகரியில் தாங்கள் பறிகொடுத்த நீருந்து விசைப்படகு ஒன்று, 'சுப்ப டோறா'வைக் கட்டி இழுத்துக் கரைக்குக் கொண்டு போவதைச் செய்வதறியாத நிர்க்கதி நிலையோடு - 'ஜெயசாகரா'வும் மற்றைய 'டோறா'வும் தூரத்தில் இருந்தபடி பார்த்துக் கொண்டிருந்தன.

திருக்கோணமலையில் அபாய மணி அடிக்கப்பட்டது. கொழும்பிலிருந்த கடற்படையின் கட்டளைப் பீடத்திற்கும் 'டோறா'வை இழந்த செய்தி விரைந்தது.

'ஐரிஸ் மோனா'வின் நிலைமையும் விளக்கப்பட்டது. 'டோறா' எவ்விதமாகத் தாக்கப்பட்டது என்ற கேள்விக்கு, 'ஜெயசாகரா'வின் கட்டளை அதிகாரியான கொமடோர் திஸ்ஸ குணதிலகவினால் தெளிவான பதிலளிக்க முடியவில்லை. குழப்பமான தகவல்களைக் கொடுத்த அவர், "ஆனால் அது ஒரு கரும்புலித் தாக்குதலால் அல்ல" என்பதை உறுதிப்படுத்தினார்.

ஒரு கடற்கண்ணிவெடி என்பதை விடவும், தரையிலிருந்து ஏவப்பட்ட ஒரு ஏவுகணை, அல்லது கடலிலிருந்து ஏவப்பட்ட ஒரு ஏவுகணை 'டோறா' வைத் தாக்கியிருக்கக்கூடும் என்பதற்குத் தான், கூடுதலான சாத்தியப் பாடுகள் இருப்பதாக - 'ஜெயசாகரா'விலிருந்து கிடைத்த தகவல்களை வைத்து - கடற்படைக் கட்டளைப் பணியகம் ஊகித்தது. உண்மையில் அப்படித்தான் நிகழ்ந்திருக்குமானால், அது ஒரு புதிய பூதாகரமான - பிரச்சினையேதான். கடலிற் தோன்றியுள்ள சிக்கலான களநிலைமை, அவர்களைத் தடுமாற வைத்தது. அடுத்து என்ன செய்வதென்ற தீர்மானத்திற்கு அவர்களால் வரமுடியவில்லை.

அதேசமயம் - தாங்கள் தனித்து நிற்பது ஆபத்தானது என்பதோடு, உடனடியாக உதவிகள் அனுப்பப்படாவிடத்து, தாம் அங்கு தொடர்ந்தும் நிலைகொண்டிருக்க முடியாது என - 'ஜெயசாகரா'வும், மற்றைய 'டோறா'வும் அபயக்குரல் எழுப்பத் தொடங்கின. அத்தோடு, மேற்கொண்டு ஏதாவது செய்வதற்காகவும் படைகளை அனுப்ப வேண்டிய தேவையும் இருந்தது. சிங்களப் படைத்துறைத் தலைமைக்குத் தலை சுற்றியது. திரிசங்கு நிலையில் அது திகைத்தது.

மேஜர் ஜெனரல் றொகான் தளுவத்த, தன்னால் ஆற்றக் கூடிய உடனடிக் காரியமாக, வான்படையைக் களத்திற்கு அனுப்பினார்.

'பெல் 212' உலங்கு வானூர்திகள் - சுட்டு வீழ்த்தப்படலாம் என்ற அச்சத்தில் - 'டோறா' தாக்கப்பட்ட இடத்திற்குத் தொலைவில் 'கடலிற்குக் காற்று வீசிக் கொண்டிருந்தன!' சீனன்குடா தளத்திலிருந்து புறப்பட்டு வந்த எஃவ் 7 'சுப்பசொனிக்' விமானங்கள் கண்ணுக்கெட்டாத விண்ணுக்குள் மறைந்து, மண்ணில் குண்டுவீசிக் கொண்டிருந்தன! அதே சம நேரத்தில்,

சீனத் தயாரிப்பான 'ரணசுறு', 'சூரயா' வகையைச் சேர்ந்த இரண்டு 'சங்காய்' ரகப் பீரங்கிக் கப்பல்களோடு, மூன்று 'சுப்ப டோறா'க்களையும், திருக்கோணமலையிலிருந்து 50 கிலோ மீற்றர் தொலைவிலிருந்த போர்முனைக்கு அவர் அனுப்பி வைத்தார்.

பொழுது மங்குவதற்கு முன்னதாக, சண்டை முனையை அடைந்துவிட்ட அந்த அணிக்கு, உடனடியாக ஏதாவது ஒரு காரியத்தில் இறங்க வேண்டியது அவசியமானதாக இருந்தது.

ஆகக் குறைந்தது, இழந்துபோன 'டோறா' விலிருந்த லெப். நளின் விஜயசிங்க, சப் லெப். குமாரதுங்க உட்பட 9 துருப்புக்களின் நிலையைத் தன்னும் ஏதென்று அறிய வேண்டியே கடமையை அவர்கள் கொண்டிருந்தனர்.

தாக்குதலில் இறங்குவது ஆபத்தானது என்பதை அவர்கள் விளக்கியபோதும், கிழக்குப் பிராந்திய கட்டளைப் பணியகத்திலிருந்து 'உடனடியாகச் செயலில் இறங்குமாறு' விடுக்கப்பட்ட உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தே, ஆகவேண்டும்.



**கப்டன் சிவா**
கிருஸ்ணபிள்ளை மோகனதாஸ்
மண்டைதீவு, யாழ்ப்பாணம்.

அப்போது மணி - மாலை 5.30.

கடலை வளைத்து 'ஐரிஸ் மோனா'வை அண்மிக்க அவர்கள் எத்தனிக்க - கடல் களமானது. கடுமையான சண்டை ஆரம்பித்தது. விரைந்து தாக்கிய புலிகளின் படகுகளை நெருங்கித் தாக்க சிங்களப் படைகள் பின்னடித்தன. கரும்புலிகள் பற்றி அவர்களது அச்சத்தை மெய்ப்பிப்பது போல, வெடிகுண்டு விசையூர்திகள் 'டோறா'க்களை விரட்டின.


www.tamilarangam.net

கரும்புலிகளுக்குத் தற்காத்து,
கடற்புலிகளோடு சண்டையிட வேண்டிய
தர்மசங்கடத்தை அவர்கள் சந்தித்தனர்.
உக்கிர மோதலின் நடுவே,

சண்டை தொடங்கிய சில நிமிடங்களின்
பின்,

படையினரின் கண்ணெதிரிலேயே, 'பி. 456'
இலக்க 'டோறா'ப் படகு தீச்சுவாலையோடு
வெடித்துச் சிதறியது!

தடுக்க முடியாத ஆற்றாமையோடு -
கையாலாகாதவர்களாக - அவர்கள்
பார்த்துக் கொண்டிருக்க
'டோறா'விலிருந்து கடற்புலிகள்
ஆயுதங்களையும், ஏனையவற்றையும்



**மேஜர் நகுலன் - சோமன்**
கந்தையா கிருஸ்ணதாஸ் - கிருஷ்ணா
காரைநகர், யாழ்ப்பாணம்.

அப்புறப்படுத்தி முடித்தனர்.

இருள் சூழ்ந்துவிட்டது. தங்களது
தாக்குதற் படகுகள் எவ்விதமாகத்
தாக்கப்பட்டன என்பதைப் புரிந்து கொள்ள
முடியாத அதிர்ச்சியோடும் அச்சத்தோடும்
ஏனைய கடற்படைக்கலங்கள்,
பாதுகாப்பான தூரத்தை நாடிப்
பின்வாங்கின.

இரண்டாவதாகத் தாக்கப்பட்ட
'டோறா'விலிருந்த லெப். கேமந்த
விஜயவர்த்தனா, லெப். கேரத் உட்பட
தமது 7 சகாக்களையும் பற்றிய
கேள்விக்குறியோடு - பல மைல்
தொலைவிற் தரித்து நின்று - ஏனைய
கப்பல்கள் இரவு முழுவதும்
விழித்திருந்தன.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

பண்டாரவன்னியனின் பொற்கால்கள்
களையாற நடந்த ஒரு கரையோரம்.

கடல் தரையோடு கைகோக்கும் ஒரு
நெய்தற் கிராமம்.

புரட்டாதி 3ஆம் நாளின் கருக்கல்
பொழுது,

நிலவற்ற வான், எதுவும் மின்னுதலற்ற
'றாடார்' திரை.

அலைகடல் கடந்து அரசாட்சி படைத்த
சோழப் பேரரசனின் கொள்ளுப் பேரர்கள்
நீல வரிப் படகுகளை நீருக்குள்
இறக்கினர்.

சுடுநீர்ச் சுரப்பிகளை முடியிற் தரித்து -
தேசத்திற்கு மகிமையளிக்கும் தலைநகர்
கடந்து- மீன் பாடுகின்ற ஒரு கரையோரக்
கிராமத்தில் தரையேறும் பயணம்.

கண்ணாளனின் தோள்களில் தட்டி, நகுலன்
சிரித்தான்.

ஆழியிற் கவிந்திருந்த காரிருள் பிரித்து
புலிகளின் படகணி விரைந்து
கொண்டிருக்க-

9.30 மணியை நேரம் கடந்து
கொண்டிருக்க -

குச்சவெளியை அணி நெருங்கிக்
கொண்டிருக்க-

எதிர்ப்பட்டன 'டோறா'க்கள். தடைப்பட்டது
பயணம். இயக்கப்பட்டன துவக்குகள்.

கடுஞ்சண்டை! சன்னங்கள் செய்த வர்ண
ஜாலம்! இருள் வானில் கிழித்தன
'ஒளிக்கோடுகள்'.

ஐந்து நாட்களுக்கு முன்னர் -

முல்லைத்தீவு 'ஐரிஸ் மோனா'ப் பிசகில் -

இரண்டு 'டோறா'க்களை இழந்த
கணக்கை முடிக்கும் அவாவில் விரைந்து
தாக்கினான் பகைவன்.

எதிர்த்து நின்று விடாமல் மோதிய
புலிகளின் படகுகள், திடீரெனத்
திரும்பியோடத் தொடங்கிவிட! -
பகைவன் பூரித்துப் போனான், தலை, கால்
புரியாத மகிழ்வில் அவன் தன்னிலை
மறந்தான்!

உற்சாகம் கரைபுரண்டோட 'டோறா'க்கள்
கலைத்துக் கொண்டோடின.

ஆனால்,

அது ஒரு தந்திரோபாயப் பின்வாங்கல் -

பொறிக்குள் விழ வைக்கப் புலிகள் செய்த
ஒரு போர் உத்தி!

மதிநுட்பத்தோடு நகர்த்திய வியூக
வளைவு -

உவகை பொங்கியதால், பகைவன்
ஊகிக்கத் தவறினான்.

ஆத்திரத்திலும் - ஆனந்தத்திலும் அவன்
நிதானமிழந்தான்.

துரத்தித் துரத்தி அடித்தான்.

குச்சவெளியிலிருந்து புல்மோட்டை வரை
- இருபது நிமிட நேர மரண ஓட்டம்.

புலிகளின் படகுகளை 'டோறா'க்கள் மிக
வேகமாக நெருங்கின. படகுகளை முந்திக்
கொண்டு சன்னங்கள் சீறின.

ஆகக் கடைசிப் பதிவு 280 மீற்றர்
இடைவெளி.

கடற்புலிகளையே கலைத்தடித்தவர்கள்
என்ற பதக்கமொன்றைப் பெற, அந்த
'டோறா'க்களின் கட்டளை அதிகாரிகள்
ஆசைப்பட்டிருக்கலாம்.

ஆசை மோசம் செய்துவிட்டது
பகைவனுக்கு-

கலைத்தடிப்பதில் கவனமாயிருந்தவன்,
அக்கம் பக்கத்தை அவதானிக்கத்
தவறினான் - அது ஒரு போரியல் தவறு

சுற்றி வரக் கருமை, கருமையோடு



**மேஜர் கீர்த்தி**
வல்லிபுரம் நகுலேஸ்வரன்
புலோப்பளை, யாழ்ப்பாணம்.

புலிகள், புலிகளோடு வெடிகள்!

நகுலனும், கண்ணாளனும் அசுரவேகத்தில்
அண்மித்தார்கள் -அலையன்னை
ஆராதித்தாள்.

ஏமாற்றப்பட்டதால் ஏதுமறியாத பகைவன்
எதிர்பார்த்திருக்கவே மாட்டான்.

பக்கவாட்டாக - 'டோறா'வின்
பின்மூலையில் விழுந்தது இடி!

"உயிர்ப் பூ" -

இதைக் காற்றிலே ஊதினார்கள்
கரும்புலிகள்.

புல்மோட்டைக் கடலிலே எழுதினார்கள்
வரலாற்றை.

இருளைக் கலைத்த பேரொளியோடு,
செவியில் முழங்கியது பேரொலி.

கடலதிர்ந்த அந்தக் கணப்பொழுதிற்குப்
பிறகு- 'டோறா'வைக் கடல் விழுங்கத்
தொடங்கியது. புலிகளின் 'றாடார்' திரையில்
மின்னி மின்னி மறைந்த 'டோறா' மெல்ல

இல்லாமலேயே போய்விட்டது.

ஆனால் -

சந்திரிகா அரசு சங்கதியை மறைத்தது.
மூழ்கடித்த சேதியை இருட்டடித்தது.
தங்களது தப்பிவிட்டதாக
தம்பட்டமடித்தது.

ஆயினும்,

மறுநாள் பகல் முழுவதும் உலங்கு
வானூர்தி ஒன்று கடலைத் தடவியதே..
ஏனாம்! பதிந்து பதிந்து கண்களால்
துழாவியதே.. எதற்காம்-மீன்களை
ஊடறுத்து அடிமண்ணில்
தேடியதே..எதையாம்..

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

மோகன் -

புலிகளின் கடல் வேவு வீரன்.

கடற்புலிகளின் சிறப்பு வேவுப் பிரிவின்
பொறுப்பாளன்.

கடல்நீரேரி கடந்து பூநகரிக்கும்,
கண்டமேடை கடல் தாண்டி மண்டை
தீவுக்கும், சமுத்திரத்தில் மீனாகி
காங்கேசன்துறைக்கும் மட்டுமல்ல -

வெற்றிகளைப் பெற்றெடுத்த பல
சமர்களின் வேவுகளுக்காக நீந்தியவன்
அவன்.

ஆண்டில் 8760 மணித்தியாலங்கள்
என்பது பிழையற்றதெனில் - அதில் 2920
இற்கும் அதிகமான மணித்தியாலங்கள்
அவன் உப்பு நீரில் தான் ஊறினான்.

மோகன் வேவுக்காக நீந்திய மிகப்
பெரும்பாலான பயணங்களில், ரகுராம்
தான் அவனுக்குத் துணை.

'புலிப்பாய்ச்சலின்' கடற் பாய்ச்சலாய்
'எடித்தாரா'வுக்குக் குறிவைத்தது,
அருள்ஜோதி குண்டு சுமந்த கப்பலுக்கு
வழிகாட்டியதுவரை அப்படித்தான்.

அந்தக் கடைசி நாள் - 10.09.1995.

காங்கேசன்துறைக் கடற்படைத் தளத்தில்

'டோறா'க்களையும், 'சங்காய்' பீரங்கிக்
கப்பல்களையும் தமது பாதுகாப்பின்



**மேஜர் அன்பு**
இராமசாமி ராஜ்பவான்
சக்கோட்டை, யாழ்ப்பாணம்.

கவசமாக நிறுத்தி -

போர்க் கருவிகளையும், உணவுப்
பொருட்களையும் தரையிறக்கும்
பணிக்காக -

ஒரு தரையிறக்கக் கப்பலும், பிறிதொரு
விநியோகக் கப்பலும்
நிலைகொண்டிருந்தன.

இந்த இரு கப்பல்களுள் வாய்ப்பான
ஏதோ ஒன்று அவளுடைய இலக்காக
இருந்த போதும் - தரையிறக்கக்
கலத்திற்கு முன்னுரிமை
கொடுக்குமாறுதான் அருள்ஜோதிக்குச்
சொல்லப்பட்டிருந்தது. அவள்
'அங்கயற்கண்ணி நீரடித் தாக்குதற்
பிரிவின்' ஒரு கரும்புலி.

மோகன் வழிகாட்டியாகவும், வழி
நடத்துபவனாகவும் சென்றான். 'நிலைமை
அவதானிப்பாளர்' பணி ரகுராமிற்குக்
கொடுக்கப்பட்டிருந்தது. தாக்குதற்
திட்டத்தின்படி அருள்ஜோதியைத் தவிர
மற்றைய இருவரும் திரும்பிவிட

வேண்டியவர்கள்.

கடைசியாக ஒரு நேரத்தில்,
துறைமுகத்தின் உட்பகுதிக்குள் நாங்கள்
ஊடுருவத் தொடங்குவதாக அவர்கள்
அறிவித்தனர். ஆனால், அதன் பின்பு
எந்தத் தகவலும் அவர்களிடமிருந்து
எமக்குக் கிடைக்கவில்லை.

எனினும், அந்தக் கடைசி
அறிவிப்பிலிருந்து கணிக்கப்பட்ட நேர
இடைவெளியில் - 12 மணி 40
நிமிடத்திற்கு - குறிக்கப்பட்ட இடத்தில்
குண்டுத்தாக்குதல் நிகழ்ந்த வெடியோசை,
துல்லியமாக அவதானிக்கப்பட்டது.

அதன் பின்பு பெறப்பட்ட - சந்தேகத்திற்கு



**மேஜர் கண்ணாளன்**
விநாயகம் இளையதம்பி
மட்டக்களப்பு.

இடமற்ற உறுதியான தகவல்களை
ஆராய்ந்தபோது, தரையிறக்கக் கலம்
தாக்கப்படாத போதும், குறிப்பிட்ட அந்த
விநியோகக் கப்பல், தாக்கி
மூழ்கடிக்கப்பட்டதற்கான சாத்தியப்பாடுகள்
நூறு வீதமும் தென்படுகின்றன.
இருப்பினும் - எது நடந்தது என்பதை
எங்களால் ஆணித்தரமாகச் சொல்லிவிட
முடியவில்லை. ஏனெனில்
சொல்லவேண்டியவர்கள் இருவராலும்
திரும்பிவர முடியவில்லை.

புல்மோட்டைத் தாக்குதலைப் போலவே,
இந்தத் தாக்குதலிலும் உண்மையை மூடி
மறைத்து, தலைகீழான தகவல்களையே
அரசு வெளியிட்டிருக்கின்றது என்ற
நம்பிக்கை வலுவாக உள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

29.09.1995

சூரியன் மறையாத மாலை வேளை.

5 'டோறா' படகுகளினதும், 1 'சங்காய்'
பீரங்கிக் கப்பலினதும் இறுக்கமான
பாதுகாப்புடன் - காங்கேசன்துறை
துறைமுகத்திலிருந்து 500 மீற்றர்
தொலைவில் தரித்து நின்று - காலை 7
மணியிலிருந்து பொருட்களை இறக்கிக்
கொண்டிருந்த இராணுவ விநியோகக்
கப்பலான 'லங்கா முடித' - அன்றைய
கடைசித் தொகுதிப் பொருட்களை
தரையிறக்கக் கலத்திற்கு மாற்றிவிட்டு -
காரைநகரை நோக்கி நகரத் தொடங்கியது.

2 'டோறா' படகுகள் 'லங்கா முடித'வுக்குப்
பாதுகாப்பாகச் செல்ல -

3 'டோறா' படகுகளும், பீரங்கிக் கப்பலும்
தரையிறக்கக் கலத்தோடு துறைமுகப்
பகுதிக்குள் நுழைய -

'சாள்ஸ் சிறப்புப் படையணி'யையும்,
'நளாயினி சிறப்புப் படையணி'யையும்
சேர்ந்த 3 தாக்குதற் பிரிவுகள் -

இரண்டு முனைகளிலும் சமநேரத்தில்
சண்டை அரங்கைத் திறந்தன.

இரு முனைகளிலும் நாயகர்களாக,
கடற்கரும்புலிகள் களத்தில் இயங்கினர்.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகளது
துணைத் தளபதி பிருந்தனின் கட்டளை-
யிடலின் கீழ் -

கடற்புலிகளின் தாக்குதற் தளபதிகளான
டேவிட், குபேரன், முதல்வன் ஆகியோர்
மூன்று தாக்குதற் பிரிவுகளையும் -

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாக்குதல்கள் மீண்டும்....

உரும்பிராய் பகுதிகளுக்கு முன்னேற கடும் பிராயச்சித்தத்தில் ஈடுபட்டுள்ளனர். மூன்று முனைகளில் போர்த்தாங்கிகள், கனரக வாகனங்கள் சகிதம் முன்னேற முயன்ற இராணுவத்தினருடன் விடுதலைப் புலிகள் கடும் மோதல்களில் ஈடுபட்டுள்ளனர். இம்மோதல்களில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டு பாரிய இழப்பினை ஏற்படுத்தியுள்ளனர். இத்தாக்குதலின்போது தமது தரப்பில் 17 இராணுவத்தினர் இறந்துள்ளதாகவும், பலர் காய மடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரம் அறிவித்துள்ளது. இக்கடும் மோதல்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் 5 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளனர். தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெறுவதாக அறியவருகிறது.

வீடழிப்பு என்னும் நாசவேலையிற் திட்டமிட்டுச் செயற்படும் சிறிலங்காப் படைகள், தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் உள்ள வீடுகளைப் புள்டோசர் கொண்டு தரைமட்டமாக்கி வருகின்றனர். விவசாயக் காணிகளை, கனரக வாகனங்களைச் செலுத்தி நாசமாக்கும் படையினர், கடல் உப்புத்தண்ணீர் தடுப்பு அணைகளை உடைத்து, உப்புநீரை உட்புகவிட்டு எக்காலத்திலும் தமிழர் விவசாயம் செய்ய முடியாதவாறு, மண்ணை உப்புப் படுக்கையாக்கி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. வாழைத்தோட்டங்கள், மரக்கறிப் பயிர்ச்செய்கை நிலங்கள் அனைத்தையும் நாசப்படுத்தி, 'விவசாயத்துக்குச் செப்பனிட்ட தரை போல்' யாழ்ப்பாணத்தை, சிறிலங்காப் படைகள் மாற்றி வருவதாகக் கத்தோலிக்கக் குரு ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார். இதற்கிடையே வலிகாமம் பகுதிகளில் காயமேற்படின், சிகிச்சை அழிக்கக்கூடிய வசதிகள் ஏதும் இல்லாது காணப்படுவதால் இப்பகுதிகளுக்குப் பார்வையிடவோ, உடமைகளை எடுப்பதற்கோ மக்களைச் செல்ல வேண்டாமென விடுதலைப் புலிகளின் குடியாட்சி அலுவலகங்கள் கேட்டுள்ளன.

09-11-95 வியாழனன்று, மக்கள் இடம் பெயர்ந்து வாழும் கைதடிப் பகுதி மீது, சிறிலங்காப் படைகள் இரவு எட்டு மணியளவில் நடாத்திய எறிகணைத்தாக்குதலில் ஆறு பொது மக்கள் கடுங் காயத்துக்குள்ளாகினர்.

# கொழும்பில்....

தகவல்களே தவிர, சிறிலங்கா அரசின் கடுமையான செய்தித் தணிக்கையினால், சதந்திரமான தகவல் இல்லாமையால் சரியான சேத விபரம் எதுவும் தெரிய வரவில்லை.

# அம்பாறையில்...

வீரச்சாவடைந்த லெப். சதீஸ் குமார் (அழகுராஜா சதானந்த மூர்த்தி, அம்பாறை), 2ஆம் லெப். கஸவதனன் (குமாரத்தினம் தவக்குமார், அம்பாறை) ஆகியோருக்கு எமது வீர வணக்கங்கள்.

# உலகளாவிய ...

இடம்பெற்ற மாபெரும் பேரணியில் 7,000 க்கும் அதிகமான தமிழ்மக்கள் கலந்து கொண் டனர். இப்பேரணியின் முடிவில் உரையாற்றிய சுவிஸ் பாராளு மன்ற உறுப்பினர் கிறிஸ்ரினா கோல், தமிழர்களுக்கான தமது ஆதரவைத் தெரிவித்தார். சுவிஸ் அரச அதிபருக்கும் மகஜர் கையளிக்கப்பட்டது.

இதேதினத்தில் யேர்மனியில், முன்சன், பிராங்பேட், ஸ்ருட்காட், பிறீமன், டோட்முன்ட் ஆகிய இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணிகளில் 6000க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். இவ்வார்ப்பாட்டப் பேரணியின் இறுதியில் சாரலன்ட் மாநில முதல்வரின் செயலாளர் உரையாற்றுகையில், தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டென்றும், அவர்களுக்கு விரைவில் நாடு கிடைக்கும் என்றும், அவர்களது உரிமைப் போராட்டத்தை இராணுவ ரீதியில் நசுக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ன், சிட்னி, கன்பெரா போன்ற நகரங்களில் இடம்பெற்ற அடையாள உண்ணாவிரதம், விழிப்புப் போராட்டம், ஆகியவற்றில் 2,500க்கும் அதிகமான தமிழ்மக்கள் கலந்து கொண்டனர். இதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் ஆளுங்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் சொனியா மிக்கேல்சன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

11-11-95 அன்று டென்மார்க் தலைநகர் கொப்பனேகனில் நடைபெற்ற ஒன்றுகூடலில் 250 தமிழ் மக்களும், ஆர்கூஸ் நகரில் நடைபெற்ற பேரணியில் 1000ற்கு மேற்பட்ட மக்களும் கலந்துகொண்டனர். இதே தினத்தில் நெதர்லாந்தின் டென்கார்க் நகரில் நடைபெற்ற பேரணியிற் சமார் 700 மக்கள் கலந்து கொண்டனர்.

12-11-95 வத்திக்கானில் நடைபெற்ற பேரணியில் இத்தாலியின் பலபாகங்களிலிருந்து 500ற்கு மேற்பட்ட தமிழ்மக்கள் கலந்து கொண்டனர். இப்பேரணியின் இறுதியிற் பாப்பாண்டவரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. இதேபோல் அமெரிக்காவின் வாசிங்டன் வெள்ளை மாளிகை முன் நடைபெற்ற ஒன்றுகூடலிற் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறான எழுச்சிப் பேரணிகள் கார்த்திகை மாதம் 18ஆம் திகதியிலும் இலண்டன், பிரான்ஸ், கனடா போன்ற நாடுகளிலும் நடைபெறவுள்ளது.

# ஐ.நா.செயலாளரின்...

உள்ளது. அக்கடித விபரம் வருமாறு:-

அரசியல் தலைமைப்பீடம்

யாழ்ப்பாணம்

04-11-1995

மதிப்புக்குரிய பூட்ரஸ் பூட்ரஸ் காலி

பொதுச்செயலாளர்

ஐக்கிய நாடுகள் சபை

நியூயோர்க்

அன்புடையீர்,

சிறிலங்காப் படைகளின் பாரிய அளவிலான இராணுவ நடவடிக்கைகளினால் யாழ்ப்பாண மக்கள் எதிர்நோக்கியுள்ள அத்தியாவசிய தேவைகளான உணவு, இருப்பிட, மருத்துவ வசதிகளை நிறைவேற்ற உடன் கவனம் செலுத்தப்பட வேண்டிய அபாயகரமான நிலையினைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

சிறிலங்காப் படைகள் யாழ் நகரைத் தாக்கலாம் என்னும் அச்சத்தினால் 5,00,000 மக்கள் நகரிலிருந்தும் வலிகாமப் பிரதேசத்திலிருந்தும் வெளியேறியுள்ளனர். இந்தப் பெருந்தொகையான மக்கள் தென்மராட்சிப்பகுதியில் நெருக்கமாகத் தங்கியுள்ளதினாற் பலவிதமான பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

மிகவும் அவசரமான பிரச்சினையாக இடம் பெயர்ந்த மக்களுக்கு உணவுப் பற்றாக்குறை உள்ளது. சிறிலங்கா அமுல் நடத்திய பொருளாதாரத் தடைகளினாற் குடாநாட்டில் ஏற்கனவே பெரும் உணவுத்தட்டுப்பாடு திடீரென உருவாகியிருந்தமையைத் தாங்கள் அறிந்திருக்கக்கூடும். எனவே உணவுத் தட்டுப்பாட்டினால் ஏற்கனவே பாதிப்புற்ற இம்மக்களிடையே பட்டினி நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்த பாரிய பிரச்சினையாக அகதிகளான பெரும் மக்கள் கூட்டத்திற்குத் தங்கிட வசதி அளிப்பதற்குப் போதிய தங்கிடங்கள் இல்லாமை விளங்குகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் வீதி ஓரங்களிலும் மரநிழல்களிலும் தங்கியுள்ளனர். பெருமளவிற் சுகாதார வசதியீனங்கள் காணப்படுவதினாற் குறிப்பாகக் குழந்தைகளும் முதியவர்களும் தொற்று நோய்களாற் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளனர். மருத்துவசதிகளும், மருந்தும் வழங்கப்பட்டாலே மனித உயிர்கள் எதிர்நோக்கும் அபாயங்கள் குறையும். இந்தச்சிக்கலான பிரச்சினைகள், ஆரம்பமாகியுள்ள கடுமையான பருவப் பெயர்ச்சி மழையின் குளிரான ஈரலிப்பான காலநிலையினால் மேலும் மோசமடைகின்றன.

எமது மக்கள் எதிர்நோக்கும் இந்நிலை மிக மோசமாக உள்ளது. அரசியல் மற்றும் இராணுவ காரணங்களுக்காகச் சிறிலங்கா அரசாங்கம் இந்த மாபெரும் மனித அவலத்தைக் குறைத்து வெளியிடுகிறது. ஆகையினாற் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய உதவிகள் கிடைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளைத் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி உடன் மேற்கொள்ளுமாறு நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தங்களது தலையீடும், உதவிகளும் பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டத்தால் பெருமளவில் விரும்பப்படுகிறது.

நன்றி,

அன்பின்

சுப. தமிழ்ச்செல்வன்

அரசியல் பிரிவுப் பொறுப்பாளர்

# யாழ். பிரஜைகள் குழு வேண்டுகோள்

கத்தோலிக்க ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம், துர்க்கை அம்மன் ஆலயப் பிரதம நிர்வாகி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நல்லை ஆதீனப் பிரதம நிர்வாகி, தென்னிந்திய திருச்சபைத்தலைவர் கலாநிதி தி. ம. அம்பலவாணர் ஆகியோரைப் பாதுகாவலர்களாகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கே. குணரட்னம் அவர்களைத் தலைவராகவும் கொண்ட யாழ் பிரஜைகள் குழு தனது தற்காலிக முகவரியான திருக்குடும்பக் கன்னியர்மடம், மிருசுவில் தென்மராட்சியில் இருந்து ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளருக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை அனுப்பியுள்ளனர்:-

"சிறிலங்கா இராணுவம் நடத்திக் கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகளினால் யாழ் குடாநாட்டிற் பாரிய மனித அழிவொன்றை மக்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் சம்பவத்தை உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

தங்களுடைய சொந்தத் தாயகத்திலேயே சிறிலங்காப்படைகளின் தாக்குதல் அபாயத்துக்கு அஞ்சி 5,00,000 மக்கள் யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து முற்று முழுதாக வெளியேறி அகதிகளாகியுள்ளனர். இந்தத் திடீர்வருகையை எதிர்கொள்ளும் அளவுக்கு நிர்வாக ஒழுங்குகளைத் தென்மராட்சியிற் செய்து கொள்வது கடினம். பருவமழையினாற் சுகாதாரச் சீர்கேடு மோசமடைந்து வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பரவியுள்ளன.

நாங்கள் இந்தப் பிரச்சினையின் பாரிய தன்மையினையும், உதவிகள் உடன் வழங்கப்படவேண்டியதன் அவசியத்தையும் தங்களிடம் வலியுறுத்த விரும்புகிறோம். உள்நாட்டு ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர், உயிர்வாழ்வதற்கான வேதனை முனகலுடன் பெரும் பாலான அகதிகள் விடுக்கும் வேண்டுகோளுக்குச் செவிமடுத்து உடனடிப் பராமரிப்புப் பணிகளை ஆரம்பிக்கத் தாங்கள் ஆவன செய்யுமாறு வேண்டுகின்றோம். பின்வருவன உடனடி உதவி தேவைப்படும் தொகுதிகளாக எம்மால் எடுத்துரைக்கப்படுகின்றது.

01. தற்கால வதிவிடங்கள் மழையிலிருந்து பாதுகாப்புப் பெறத் தேவை. அத்துடன் குடிநீர் மற்றும் மலசலகூட சுகாதார வசதிகள் அவசியமாக உள்ளது.

02. உணவுப் பொருட்களான அரிசி, மா, சீனி, பால் மா போன்றவை.

03. குழந்தைகளுக்கும் முதியோருக்குமான பால் மா வகைகள்

04. மருந்துகளும் மருத்துவர்களும்.

மேலும் மழையிற் தெருக்கரையில் வதிவிடமின்றித் தவிக்கும் மக்களுக்கு உதவிகளை விமான மூலம் அனுப்பச் சர்வதேசச் செஞ்சிலுவைச்சங்கத்துடனும் சிறிலங்கா அரசாங்கத்துடனும் தாங்கள் தொடர்புகளை மேற்கொண்டாலே அகதிகள் உயிர் தப்ப முடியும். இது தொடர்பாக எங்களுடன் தொடர்புகளை மேற்கொள்வதானால் எமது தற்காலிக முகவரிக்குத் தொடர்புகளை மேற் கொள்ளலாம்." எனக் கேட்கப்பட்டுள்ளது.

# கைளிந்குள்....

முன்னேறுவதற்கான முன்னேற்பாடுகளும் - முறியடிப்பதற்கான தயார்ப்படுத்தல்களுமாக, வடபுலப் போர் அரங்கு, ஓய்வற்ற சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருக்கின்றது.

போனால் போகட்டுமென்று, கிழக்கை விட்டு விட்டு, பிடிக்கிறேன் பாரென்று வடக்கிலே குவிந்து வந்து -

'யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, மீள எழும்ப முடியாத உச்சந்தலை அடிபோட்டுப் புலியைப் படுக்கையில் விழுத்த' என, அராலிக் கண்ணியென்னின் கிடங்கிலிருந்து தோண்டி எடுத்த 'கொப்பேகடுவ' போர்த்திட்டத்தோடு ஆயத்தமாகியுள்ளான் பகைவன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாவிச் சடலங்கள் விவகாரத்தின் பின்னணி

## ஐ.தே.க. வின் S.T.F. இனை, சு.க வின் S.T.F.ஆக மாற்றுவது

ஐ.தேக. வின் ஆட்சியில் நிகழ்ந்தது போலவே, சந்திரிகாவின் ஆட்சியிலும் கொழும்பு வாவிகளில் இளைஞர்களின் சடலங்கள் மிதக்கலாயின. ஐ.தேக. வின் ஆட்சியின் கீழ் சிங்கள இளைஞர்களின் சடலங்களும், தமிழ் இளைஞர்களின் சடலங்களும் மிதந்தன. சந்திரிகாவின் ஆட்சியில் தமிழ் இளைஞர்களின் சடலங்கள் மட்டுமே மிதக்கின்றன.

வாவிகளிற் சடலங்கள் மிதப்பதைத் தடுப்பதற்கு, தனக்கு வாக்களிக்குமாறு சந்திரிகா கோரினார். தான் பதவிக்கு வந்தால், காணாமற்போவோர் என்ற நிகழ்வு இருக்காது என்று சந்திரிகா தேர்தற் காலத்தில் வாக்குறுதி அளித்தார்.

ஆனால், சந்திரிகாவின் ஆட்சியில் நீண்ட கால மாய்ச் சடலங்கள் கொழும்பு வாவிகளில் மிதக்கலாயின. தலைநகரில் சடலங்கள் மிதப்பது இரகசியமாக இருக்க முடியாது. பல செய்தித்தாள்களில் சடலங்கள் மிதக்கும் செய்திகள் தொடர்ந்து வெளிவந்தன. இச் செய்திகள் சந்திரிகாவின் கண்ணுக்கும், காதுக்கும் எட்டாமல் இருந்திருக்க முடியாது. ஆனால், சந்திரிகா எதுவும் தெரியாதவர் போலவே நீண்டகாலம் இருந்தார்.

அப்போதுதான், திடீரெனத் தலைநகரச் செய்திகள் தெரிய வந்தவர் போல, வாவிகளில் மிதக்கும் சடலங்களுக்குப் பொறுப்பானவர்களைத் தேடிக்கண்டு பிடிப்பதில் சந்திரிகா ஈடுபட்டார்.

'எஸ்ரிஎஃவ்.' என அழைக்கப்படும் விசேடபொலிஸ் அதிரடிப் பிரிவே, வாவிகளில் மிதக்கும் சடலங்களுக்குப் பொறுப்பென்று "கண்டு பிடித்து" அவர்கள் மீது விசாரணைகள் நடைபெறுகின்றன.

மனித உரிமை மீறல் பற்றிய குற்றச்சாட்டுக்கள் சந்திரிகா மீது சர்வதேச அரங்கில் வளர்வதால், அதிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காகச் சந்திரிகா இந்த விசாரணை நாடகத்தை அரங்கேற்றி உள்ளதாகப் பரவலாகக் கருதப்படுகின்றது.

> மனித உரிமை மீறல் பற்றிய குற்றச்சாட்டுக்கள் சந்திரிகா மீது சர்வதேச அரங்கில் வளர்வதால், அதிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காகச் சந்திரிகா இந்த விசாரணை நாடகத்தை அரங்கேற்றி உள்ளதாகப் பரவலாகக் கருதப்படுகின்றது.

இதைப்பற்றி எனது நண்பர் ஒருவர் அபிப்பிராயம் தெரிவிக்கையில் பின்வருமாறு கூறினார்:-

"அதாவது, எஸ். ரி. எஃவ். என்பது ஐ.தேக வின் உயர் குழாத்தவரைக் கொண்ட ஒரு படைப்பிரிவாகும். இந்தப் படைப்பிரிவு, ஐ.தேக. ஆதரவாளர்களைக் கொண்டதும், ஐ.தேக வால் கட்டியெழுப்பப்பட்டதுமாகும். எனவே இந்த ஐ.தேக. வின் எஸ். ரி. எஃவ். ஐப் பலவீனப்படுத்த வேண்டிய தேவை சுக. வின் சந்திரிகாவிற்கு உண்டு. எனவே, சடலங்கள் மிதப்பதைத் தடுப்பதல்ல சந்திரிகாவின் நோக்கம். இதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, தனக்கு ஏற்ற விதத்தில் எஸ். ரி. எஃவ். ஐப் பலவீனப்படுத்திக் கொள்வதுதான் சந்திரிகாவின் நோக்கம்" என்று அவர் கூறினார்.

இந்தவகையில் இதனைப் பரிசீலிப்பது தவறில்லை என்றே தெரிகிறது. இப்படி விசாரணை நடத்துதலின் மூலம் மனித உரிமை மீறலைத் தடுக்கச் சந்திரிகா முயல்கின்றார் என்றொரு தோற்றத்தைச் சர்வதேச அரங்கில் ஏற்படுத்தலாம் என்பது உண்மை தான். ஆனால், சந்திரிகா வின் முதற்தர நோக்கம், ஐ.தேக. வின் எஸ். ரி. எஃவ். ஐப் பலவீனப்படுத்துவதே என்று தெரிகிறது.

1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா பதவிக்கு வந்தபோது, இலங்கையில் ஐ.தேக. வின் காவல்துறையும் ஐ.தேக. வின் இராணுவமுமே இருந்தன. இதற்கு எதிராக சுக வின் படையைக் கட்டி எழுப்புவதற்கு, பண்டாரநாயக்கா ஒரு தந்திரத்தைக் கையாண்டார். அதாவது, எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் தமிழர் ஒரு பெரும் படையெடுப்பிற்குத் தயாராகின்றார்கள் என்றும், சிங்கள மக்களைப் பாதுகாக்க ஒரு இலட்சம் தொண்டர்படையைத் திரட்ட வேண்டும் என்றும் கூறினார். (சமஸ்டிக் கட்சியின் திருமலை யாத்திரையை ஆதாரம் காட்டியே, பண்டாரநாயக்கா இப்படித் தந்திரத்தை உருவாக்கினார்.) ஆனால் ஜே.ஆர். ஜெயவர்த்தனா இதனைப் பலமாக எதிர்த்துத் தடுத்துவிட்டார்.

எப்போதும் ஐ.தேக. வின் படை சுக விற்குச் சிக்கலாக இருப்பதுண்டு. அந்தச் சிக்கலை, தமிழரின் பெயரைத்தான் வெட்டி ஆள சுக. முயற்சிப்பது வழக்கம். இப்போது தமிழ் இளைஞர்களைப் பலிக்கடாவாக்கித்தான், எஸ்ரிஎஃவ். ஐப் பலவீனப்படுத்தும் நடவடிக்கை நிகழ்கின்றது.

ஐ.தேக. வின் எஸ்ரிஎஃவ். ற்குப் பதிலாக சுக. யின் எஸ்ரிஎஃவ். இதுதான் எஸ்ரிஎஃவ். மீதான விசாரணையின் உள்நோக்கமும் சாராம்சமும்.

**சாரணன்**

# விளையாட்டும் பண்படுத்தாத இனவாதிகள்

விளையாட்டு சகிப்புத்தன்மை, விட்டு க்கொடுத்தல், நட்புரிமை போன்ற உயர்ந்த பண்புகளைக் கொடுப்பதோடு பொறாமை, தீங்குவிளைவித்தல் போன்ற கெட்ட குணங்கள் நீங்குவற்கும் உதவும் எனக் கூறப்படுவதுண்டு. உண்மையில் விளையாட்டால் அவ் உயர்ந்த பண்புகளைப் பெற்றவர்களும் இல்லாமல் இல்லை.

ஆனால், சிறீலங்காவிலோ விளையாட்டுத்துறையும் இனவாதத்தைப் பிரதி-பலிப்பதோடு, விளையாட்டு வீரர்களும் அதற்கு விதிவிலக்கானவர்களாக இல்லை. சிறீலங்காவைப் பொறுத்து விளையாட்டுத்துறையில் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவதும், தமிழ் பிரதேசங்கள் புறக்கணிக்கப்படுவதும் புதியதொரு விடயமல்ல.

> **சிங்கள விளையாட்டு வீரர்கள் ஏதோ பரந்த மனத்தையும் தாராள சிந்தனையையும் விளையாட்டின் மூலம் வளர்த்துக் கொண்டவர்களாக இல்லை. கடந்த காலத்திலேயே சிங்கள விளையாட்டு வீரர்களின் இனத்துவேசம் பற்றிய கதைகள் பல அடிபட்டதாயினும், தற்பொழுது முன்னாள் கிரிக்கட் வீரர் மித்திர வெத்துமுனி இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகத் தெரிவித்துள்ள ஆலோசனைகள் மீண்டும் ஒருமுறை அதனைப் பிரதிபலிப்பதாகவே உள்ளன.**

இவ்வாறானதொரு புறக்கணிப்பு, விளையாட்டுத்துறையில் அரசியல் புகுந்து கொண்டதினால் ஏற்பட்ட விளைவு எனக் கூறினாலும், சிங்கள விளையாட்டு வீரர்கள் ஏதோ பரந்த மனத்தையும் தாராள சிந்தனையையும் விளையாட்டின் மூலம் வளர்த்துக் கொண்டவர்களாக இல்லை. கடந்த காலத்திலேயே சிங்கள விளையாட்டு வீரர்களின் இனத்துவேசம் பற்றிய கதைகள் பல அடிபட்டதாயினும், தற்பொழுது முன்னாள் கிரிக்கட் வீரர் மித்திர வெத்துமுனி இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகத் தெரிவித்துள்ள ஆலோசனைகள் மீண்டும் ஒருமுறை அதனைப் பிரதிபலிப்பதாகவே உள்ளன.

அவரின் கூற்றுப்படி, "ஈழக்கோரிக்கைக்கான புவியியல் காரணிகளை நீக்குவதன் மூலமே இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணலாம். வடக்குக் கிழக்கு இணையும் சாத்தியம் இருக்கும் வரை பிரபாகரன் தமிழீழ இராச்சியத்தை அடைவதற்கான இலட்சியத்தைத் தொடர்வார். எனவே ஈழம் கோருவதற்கான புவியியல் காரணிகளை நீக்க வேண்டும். அதிகாரத்தையும், அரசியல் தலைமையகத்தையும் திருகோணமலைக்கு இடம் மாற்றுவதன் மூலம் மட்டுமே இதனைச் செய்யலாம்" என்பதாகும்.

இம்முன்னாள் விளையாட்டு வீரரின் ஆலோசனையின்படி, தமிழர் தாயகக் கோட்பாடு என்பது முற்றாக அழிக்கப்படும் போதே தமிழீழ விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்படும் என்பதாகும். இதற்கு அவர் வழங்கும் திட்டமானது திருமலையைத் தலைநகரம் ஆக்குவதன் மூலம் திருமலைப் பிரதேசத்தை முழுமையாக ஆக்கிரமித்து, சிங்களமயமாக்கி விடுவதென்பதே ஆகும்.

மித்திர வெத்துமுனியின் இந்த ஆலோசனையில் புதியதென்பது, திருமலையை இலங்கையின் தலைநகரமாக்குவது மட்டுமே. ஏனெனில் கிழக்கு மாகாணத்தை முழுமையாகச் சிங்களமயப்படுத்தி தமிழர் தாயகக் கோட்பாட்டைச் சிதைப்பதென்பது, சிங்களப் பேரினவாதிகளின் நீண்டகாலத் திட்டமாகும். அவர்கள் அதனைப் பல வழிகளிலும் அமுல்படுத்தியே வந்தும் உள்ளனர். முனைந்தும் உள்ளனர். ஆனால், இதன் எதிர் விளைவே தமிழர் விடுதலைப் போராட்டம் தீவிரம் பெற்றதென்பதே உண்மை நிலையாகும். அத்தோடு, இனப்பிரச்சனை விவகாரத்தில் கடந்த காலத்தில் அரசியல் தீர்வொன்று எட்டப்பட முடியாமல் போனதற்கும், தொடர்ச்சியாகத் தமிழர் இரத்தம் சிந்த வேண்டிய நிலை உருவாகியுள்ளமைக்கும் இக்குடியேற்றங்களும், தமிழரின் தாயகத்தைச் சிதைக்க முற்பட்டமையுமே காரணம் ஆகும். இந்நிலையில், முன்னாள் கிரிக்கெட் வீரரின் ஆலோசனையானது இலங்கையில் மேலும் இரத்தம் சிந்துவதற்கும், படுகொலைகள் இடம்பெறுவதற்குமானதொரு நிலையை உருவாக்குமே ஒழிய ஒருபோதும் அமைதியை உருவாக்கவும், சிக்கலைத் தீர்ப்பதற்கும் உதவப் போவதில்லை. ஏனெனில், அவரின் யோசனையானது, பேரினவாதிகள் இதுவரை செய்த ஆக்கிரமிப்புக்களுக்கும் மேலானதொரு ஆக்கிரமிப்பை மேற்கொள்ள வேண்டும் எனவும், சிங்கள ஆட்சியாளர்களின் அதிகாரத்தைத் தமிழர் தாயகத்தில் முழுமையாக நிறுவ வேண்டும் எனவும் கூறுகின்றது.

இத்தனைக்கும் மித்திர வெத்து முனி மட்டும்தான் அவரது குடும்பத்தில் ஒரு விளையாட்டு வீரர் என்பதல்ல. அவரது ஏனைய இரு சகோதரர்கள் உட்பட சகலருமே விளையாட்டுத்துறையில் ஈடுபட்டவர்கள்தான். இந்த நிலையில், விளையாட்டுத்துறையைச் சேர்ந்த ஒரு சிங்களக் குடும்பமே அதாவது விளையாட்டால் நற்பண்புகளைப் பெற்றிருக்க வேண்டியதொரு குடும்பத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு பேசுவதால் சிங்கள அரசியல்வாதிகளிடம் இருந்தோ, அன்றி சாதாரண சிங்களவர்களிடம் இருந்தோ எவ்வாறு சகிப்புத்தன்மையையும், மற்றவர்களின் உரிமையை மதிக்கும் நற்பண்பையும் எதிர்பார்க்க முடியும்!

ஆனால், மித்திர வெத்துமுனி போன்றவர்கள் விளையாட்டு வீரர்களாக இருப்பினும் அவர்களிடம் நற்பண்புகளை எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என்ற கேள்வியும் நியாயமானதே. ஏனெனில் அவர்கள் விளையாட்டில் இலங்கை மட்டத்தில் இடம் பிடித்துத் கொண்டமைக்கு, சில சமயம் இனவாதம் உதவியிருக்கலாம். அத்தோடு, அவர்கள் பயிற்றப்பட்ட பாசறையே இனவாதப் பாசறையாக இருக்கும் போது அவர்களிடம் மட்டும் எவ்வாறு பரந்த மனத்தையும், உயர்ந்த பண்பையும் எதிர்பார்க்க முடியும்! அத்தோடு, கௌதம புத்தரின் போதனையே அவர்களுக்கு கொல்லாமையையும் உயர்ந்த மனிதப்பண்புகளையும் கொடுக்காதபோது இவ்விளையாட்டு மாத்திரம் எம் மாத்திரம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐரிஸ் சிக்கலில்....

புதிய அவதாரம் எடுத்திருக்கும் அமெரிக்கா, பேச்சுக்கள் முறியாமல் இருப்பதற்காக முயன்று வருகிறது. இன்று உலகில் நடக்கும் பல பேச்சுவார்த்தைகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தலையிட்டுத் தனது இருப்பை உணர்த்தி வரும் அமெரிக்கா, ஐரிஸ் சிக்கலிற் தலையிட விசேட காரணம் இருப்பது தெரிந்ததே. ஏனெனில் ஆங்கிலேய ஆட்சியில் தமது நிலங்கள் பறிக்கப்பட்டுப் புரட்டஸ்தாந்து மக்கள் குடியேற்றப்பட்ட நிலையிற் பஞ்சத்தின் பிடியிற் சிக்கிய அயர்லாந்து மக்கள் 1841-1851 ஆண்டுகட்கிடையிற் புலம்பெயர்ந்ததும் இவ்வாறு புலம்பெயர்ந்த 10 இலட்சம் பேரில் பலர் அமெரிக்கா சென்று குடியேறி இன்று அங்கு வலுவுள்ள அரசியல் குழுவொன்றாக இருப்பதும் தெரிந்ததே. இத்தகைய ஐரிஸ் தொகுதி மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக இவர்கள் ஆதரவு நிலைப்பாட்டினை அமெரிக்க சனாதிபதி எடுத்துள்ளார். எனவே இப்போது ஆயுத ஒப்படைப்புச் சிக்கலைக் கையாள ஒரு சர்வதேச ஆணைக்குழு அமெரிக்கா தலைமையில் அமைத்தால் நல்லது என்று ஒரு புதிய யோசனை முன்வைக்கப்படுகின்றது. இந்த ஆணைக்குழு ஆயுத விவகாரம் பற்றிப் பேச்சுக்கள் நடத்தும்போது அதற்குச் சமாந்தரமாகச் சமகாலத்திலே கத்தோலிக்க புரட்டஸ்தாந்து தரப்பினர் நேருக்கு நேர் பேச வேண்டும் என்ற ஆலோசனைகள் இப்போது ஆராயப்படுகின்றன. எனினும் அமெரிக்கா தொடர்பான புரட்டஸ்தாந்துக் குழுக்களின் வெறுப்பு இதற்கும் தடையாகவே உள்ளது.

இவ்வாறாக சாண் ஏற முழம் சறுக்கும் கதையாக நிலைமையுள்ளது. எனவே ஐரிஸ் கத்தோலிக்க மக்களின் தன்னாட்சியுரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கையைக் கணக்கிலெடுக்க முன் கணக்கற்ற தடைகள் செயற்கையாகத் தோற்றுவிக்கப்படுகின்றன. அதேவேளை அமெரிக்கத் தரப்பிலும் மாற்றம் தென்படுவதாக வேறுகூறப்படுகின்றது. பொஸ்னியச் சிக்கலில் முழுமையாகத் தனது மூக்கை நுழைத்திருக்கும் பில்கிளின்டனுக்குப் பொஸ்னியாவிற் படைகளை வைத்திருக்கும் பிரித்தானியர் உதவி மிக அவசியமானதாகக் கருதப்படுகின்றது. ஏனென்றாற் பொஸ்னியச் சேர்பியர் நிலை பலவீனமடைவதை விரும்பாத ரஸ்யா, அமெரிக்க நிலைப்பாட்டிற்கு ஆதரவு கொடுக்கத் தயங்கும் நிலையில் ஐ.ஆர்.ஏ அமைப்பிற்காக முற்றிலுமாகப் பிரித்தானியாவைப் பகைக்கப் பில் கிளின்டன் தயங்குவார் என்றே கருதப்படுகின்றது. இவை யெல்லாவற்றையும் விட உள்நாட்டிலே தமது பதவிகட்கு பெருத்த எதிர்ப்பினை, விரைவில் வரப்போகும் தேர்தலில் எதிர்நோக்கும் இரு தலைவர்களும் இப்போதைக்கு ஐரிசக் சிக்கல் தொடர்பாக தட்டிக் கழிக்கும் போக்கினைக் கடைப்பிடிக்கக் கூடும் என்றும் ஆய்வாளர் கருதுகின்றனர். ஏனென்றால் தொழிற்கட்சியின் புதிய தலைவரான ரொனி பிளேயரின் அதிகரித்த செல்வாக்கு (Tony Blair) மேஜருக்கும் அமெரிக்க சனாதிபதித் தேர்தல் போட்டியில் புதிதாகப் பிரவேசிக்கும் 'பாலைவனப்புயல்' புகழ் ஜெனரல் கொலின் பவலின் (Gen. Colin Powell) வெற்றி வாய்ப்புப் போன்றவை ஐரிஸ் சிக்கலின் தீர்வைத் தள்ளிப் போடவைக்கின்றன. இத்தகைய நிலையில் அடுத்து ஐ.ஆர்.ஏ. என்ன செய்யப் போகின்றது என்பதே கேள்வி. அவர்கள் எத்தகைய முடிவெடுத்தாலும் வரலாற்றுப் பொதுப்பாடமொன்று இப்போது தெளிவாகிவிட்டது.

மேற்காசியாவிற் தீவிரவாத யூதர், சிறீலங்காவிற் தீவிரவாதச் சிங்களவர், வட அயர்லாந்தில் புரட்டஸ்தாந்துப் பிரிவினர் எல்லோருமே தம்மைத் தட்டிக் கொடுத்துத் தீனி போட்டு வளர்த்தவர்கள், தத்தமது அரசியல் நன்மைகட்குத் தம்மைக் கைவிட்டு அமைதித் தீர்வினைக் காண முற்படும்போது பெரும் தடைக்கல்லாகி விடுகின்றனர். இத்தகைய நிலையிற் தத்தம் உரிமைக்காகப் போராடுவோர் இவ்வாறான இழிவான அரசியலிற் தம்மை ஈடுபடுத்தாது போராட்டத்தைத் தொடர்வதே சரி என்று வரலாற்று அன்னை தெரிவிக்கின்றாள் என்பதே எமக்கான செய்தி.

# எதிரியின் எண்ணத்தில்...

போராட்டம் நடைபெற்ற காலத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், போருக்கான நிதியைத் திரட்டிக்கொண்டிருந்தார். சிங்கப்பூரில் வாழ்ந்த பெண்கள் தாங்கள் அணிந்திருந்த நகைளையே கழற்றி நேதாஜியின் எடைக்குச் சமமான பொன்னைக் கொடுத்தார்கள்.

பெண்களால் மட்டுமே செய்யக்கூடிய சிறப்பான உதவிதான் இது. எந்தச் சமூக அமைப்பை எடுத்துப் பார்த்தாலும் குறிப்பாக ஆசியாவில் வாழும் மக்கள் சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் தங்க நகைகளைப் பாவிப்பது மிக அதிகம். தமிழ்ப் பெண்கள் அனைவரும் குறைந்த பட்சம் காதில் தோடுகளையாவது அணிந்துதான் இருப்பார்கள். யாழ். குடாநாட்டில் உள்ள எட்டு லட்சம் மக்களில்

குழந்தைகளான இரண்டு லட்சம் பேரை விட்டுப்பார்த்தாலும், ஆறு லட்சம் மக்கள் இருப்பார்கள். அவர்களில் மூன்று லட்சம்(கூடவும் இருக்கலாம்) பெண்களாவது இருப்பார்கள். ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய நகைகளில் ஒரு பவுணை மட்டும்(நகை என்பது தமிழ்ப் பெண்களால் உடைக்குச் சமனான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வரும் விடயமாகும். பெண் பிள்ளைகளுக்குக் 'காது குத்துதல்' என்பது ஒரு விழாவாகவே கொண்டாடப்படும். தமிழ்ப் பெண்களால் தம் தோடுகளை அல்லது ஏதேனும் ஒரு ஆபரணத்தைக் கழற்றிக் கொடுப்பது என்பது முடியாதிருக்கலாம். ஆனால் இன்றைய நிலையில் பொன்னாபரணம் முக்கியமா, போராட்டம் முக்கியமா என்பதைப் பெண்கள்தான் முடிவெடுக்க வேண்டும்) போராட்ட நிதிக்குக் கொடுத்தால் கூட மூன்று லட்சம் பவுண் சேரும். இந்த மூன்று லட்சம் பவுணும் எமக்குப் பல நவீன படைக்கலங்களைக் கொள்வனவு செய்ய உதவும்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு பெண்ணும் மனது வைத்தால், குடா நாட்டு இராணுவத்தை அடியோடு துடைத்தெறியலாம். எதிரியின் டாங்கிகளைப் புலிகளின் டாங்கிகளும், எதிரியின் போர் விமானங்களைப் புலிகளின் போர் விமானங்களும், எதிரியின் கடற்படைக் கப்பல்களைக் கடற் புலிகளின் போர்க் கப்பல்களும் நேருக்கு நேர் மோதி அழிக்கும் நிலை உருவாகும். இந்தளவுக்குப் புலிகள் இயக்கத்தைத் தமிழ் மக்கள் பலம் பெறச் செய்வார்களேயானால், எதிரி இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தை விட்டு மட்டுமல்ல, தமிழீழத்தை விட்டே ஓடி விடுவார்கள்.

போராட்டத்தில் ஈடுபடும் இயக்கம், கேட்பதற்கும் மேலாகக் கொடுக்க வேண்டியது மக்கள் கடமை. ஐரிஷ் விடுதலைப் போராட்ட இயக்கம் தன் மக்களிடம் 250000 பவுணைக்(ஐரிஷ் பணஅலகு)கேட்க, மக்கள் 375000 பவுணைப் போராட்டத்திற்குக் கொடுத்தார்கள். இதுதான் எம் மக்கள் இன்று செய்ய வேண்டிய முக்கிய கடமையாகும்.

ஒரு இனத்தின் விடுதலைப் போரில் பங்கெடுக்கும்

வாய்ப்பு எல்லோருக்கும் கிடைத்து விடாது. நமது தலைமுறைக்கு அது கிடைத்திருக்கின்றது. நமது வாய்ப்பை யும், காலத்தின் தேவைகளையும் சரியாக உணர்ந்து, நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை மிக விரைந்து முடிவெடுக்க வேண்டும்.

# கைளிற்குள் வீழ்கிறது...

'நளாயினி படையணி'யின் சண்டைப் படகு ஒன்றை லெப். கேணல் இளநிலாவும் வழி நடாத்தினார்கள்.

கடும் சண்டைக்கு மத்தியில், புலிகளின் தாக்குதலணிகளுக்குப் பின்னாலிருந்து திடீரென அவர்களை ஊடறுத்துப் பாய்ந்த கீர்த்தியும், சிவாவும் - சண்டையிட்டுக் கொண்டிருந்த 'டோறா' ஒன்றை நேரெதிராக மோதினர். பற்றிப் பிடித்த பெருநெருப்போடு இரண்டு மணி நேரமாகக் கடலில் எரிந்த அந்தப் படகு, பின்னர் மூழ்கிப் போனது.

மாதகல் கடலில் -

பாதுகாப்புக்காகச் சென்றுகொண்டிருந்த இரண்டு 'டோறா'க்களும் விரட்டியடிக்கப்பட-

'லங்கா முடித'விலிருந்து கனரகத் துப்பாக்கிகள் பொழிந்த ரவை 'மழையை' ஊடறுத்து விரைந்த அன்புவும், செவ்வானமும் அதன் நாரியில் மோதினார்கள்.

மிகப் பலத்த சேதத்திற்கு உள்ளான அந்த கடற்படை விநியோகக்கப்பல், இழுத்து இழுத்துப் போய் இப்போது காரைநகரில் ஓய்ந்து நிற்கின்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

எதிர்பாய்ச்சலாக நெற்றியிலடித்த 'புலிப்பாய்ச்சலோடு' விரட்டியடிக்கப்பட்ட போதும் - பகவன் சுருண்டு போய்ப் படுத்துவிட்டதாகச் செய்தியில்லை. மாறாக - வரிந்து கட்டிக்கொண்டு அவன் தயாராகி வருவதாகத்தான் காற்றோடு வருகின்ற தகவல்கள் காதில் உரைக்கின்றன. படை நகர்த்தல்கள், போர்க்கல விநியோகங்கள், போர்ப் பயிற்சிகள், பரீட்சார்த்த ஒத்திகைகள், தாக்குதலணி சீராக்கல்கள் என -

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# ஆன்மா அழுகிறது!

சிங்களத்தை ஆளும் சிம்மாசனத்தில் ஆசைகொண்டு
சொல்லாத உறுதிபல சொல்லியே பதவியேற்றாய்
தங்கத்தாலான தட்டில் தமிழீழம் தருவாயென்று
தொங்கப் போட்டு நாவைச் சும்மா இருந்தோமா என்ன?

சின்னஞ்சிறு வயதில் சீர்தரும் தந்தையையும்
துடிப்பு மாறாப் பருவத்திற் துணைவரையும் இழந்ததனால்
நெஞ்சத் தளத்தினிலே நல்ல சிந்தை இருக்குமென
நம்பிவிட்டோம், உன்னை நாவாலும் போற்றிவிட்டோம்!

பட்டங்கள் பெற்றவள், அஃதும் பாரிசின் படிப்பென்றும்
பாட்டாளித் தோழன், அவள்தம் பக்கத்துணைவன் என்றும்
ஏட்டில் பார்த்தமட்டில் எண்ணிவிட்டோம் பெரிதாக
ஐம்பது கலிபர் முதல் அனைத்தும் ஓயும் என்றிருந்தோம்!

வெண்புறா ஒருகையில் வெடிகுண்டு மறுகரமேந்த
வேடத்தில் மறைந்துதானா வேங்கையைத் தேடிவந்தாய்
உன்சாயம் வெளுத்துப் போச்சு எம்நாடும் சிவந்து போச்சு
எங்கள் ஓலம் கேட்டுத்தானா நீயும் உரத்துச் சிரிக்கின்றாய்!

உன்னிரு பிள்ளைகளை எண்ணியாம் கவலை கொண்டாய்
ஏதும் அறியாப் பாலகரை ஏன்தான் கொன்று தின்றாய்
உன் துணையைப் பிரிந்தவேளை எப்படி நீ துடித்திருப்பாய்
எமது இனப்பெண்களிடம் ஏன் பறித்தாய் குங்குமத்தை-கூறு!

வஞ்சகி, கொலைகாரி, வாய்நிறைந்த பொய்காரி
வாயில்லாப் பூச்சிகளின் வாசலுக்குத் தீமூட்டியவள்
அஞ்சேலென அழைத்து, அரவணைத்த தேவன் முன்னால்
அடைக்கலமாய் இருந்தவரின் உயிர்ப்பூவை எரித்தவள்.. நீ!

போரிலும் தர்மம் உண்டு புரிந்து நடந்துகொள் நீ
பிணந்தின்னும் ஆசையினால் பறந்து அலைகின்றாய்
வேரோடு சாயும் நேரம் வேதனையைப் புரிந்துகொள்வாய்
வேடிக்கையல்ல - கற்புடையோர் வேதனையின் சாபம் கொல்லும்!

- ந. கேமராஜா -இலண்டன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐரிஸ் சிக்கலில் புதிய திருப்பம்

கடந்த ஆண்டு அங்குலம் அங்குலமாக நகர்ந்து கொண்டிருந்த வடஅயர்லாந்தின் அமைதித் தேர் இப்போது அசையாமலே நின்றுவிட்டது. பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேஜரின் போக்குக் காரணமாக இப்போது அமைதிப் பேச்சுக்கள் தேங்கிவிட்டன. சென்ற ஆண்டு ஆவணி உலகெங்கும் தோன்றிய எதிர்பார்ப்புக்கள் இப்போது வற்றத் தொடங்கி விட்டன. சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ஆம் நாள் நள்ளிரவிலிருந்து தமது இராணுவ நடவடிக்கைகள் யாவற்றையும் நிறுத்தி வைப்பதாக அறிவித்த காலந் தொட்டு இன்றுவரை ஐ.ஆர்.ஏ. எனப்படும் ஐரிஸ் குடியரசு இராணுவம் தனது வாக்கைக் காப்பாற்றியே வந்துள்ளது.



இப்போது ஓராண்டு கடந்த நிலையில் இன்னும் எவ்வளவு காலத்திற்கு ஐ.ஆர்.ஏ. அமைப்புப் பொறுமையைக் கடைப் பிடிக்கும் என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும். இத்தகையதொரு நிலை தோன்றுவதற்குப் பிரித்தானியப் பிரதமர் மேஜர் முழுமை யான அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் ஐ.ஆர்.ஏ. ஆயுதங்களை ஒப்படைக்கத் தொடங்க வேண்டும் என வலியுறுத்தி வருவதே காரணமாகும். அடையாளத்திற்குத் தன்னும் ஒருசில ஆயுதங்களை ஒப்படைக்க முடியாது என்றும் அது சரணாகதிக்குச் சமம் என்றும் ஐ.ஆர்.ஏ. தெளிவாகவே கூறிவிட்டது.

## மேஜரின் வக்கற்ற நிலை

இப்போது பேச்சுக்கள் முறியாமல் தடுப்பதற்காகச் சம்பந்தப்பட்ட தரப்புக்களாற் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஐரிஸ் குடியரசின் தலைநகரான டப்ளினிற் கூடி ஆராய்கின்றனர். ஐரிஸ் குடியரசு இராணுவத்தின் அரசியற் பிரிவான சின் பெயினின் தலைவர் ஜெரி அடம்ஸ் ஆயுதங்களை ஏன் ஒப்படைக்க முடியாது என்பதை விளக்க அமெரிக்கா சென்றார். வெகுவிரைவில் வடஅயர்லாந்துத் தலைநகரம் பெல்பாசிற்கு வருகை தரப்போகும் முதல் அமெரிக்க சனாதிபதியாகப் போகின்றார் பில் கிளின்டன். ஜோன் மேஜரின் ஆயுத ஒப்படைப்புக் கோரிக்கை ஏற்கனவே மிகச் சிக்கலாக உள்ள ஒரு விவகாரத்தை மேலும் சிக்கலாக்கும் முயற்சி என்றே பொதுவிற் கருதப்படுகின்றது. "நாம் கடந்த ஓராண்டாக அமைதியைப் பேணியது எமது நல்லெண்ணத்தைக் காட்டவில்லையா! இதைவிட வேறு என்ன வேண்டும்!" என வினாவெழுப்பும் ஐ.ஆர்.ஏ. அமைப்பின் அரசியற் பிரிவினர் அமைதித் தீர்வொன்றினை முன்வைக்க வக்கற்ற நிலையிற் பேச்சுக்களைத் திசைதிருப்பும் ஒரு உத்தியாகவே இக் கோரிக்கையை மேஜர் விடுக்கின்றார் என காட்டமாகக் கண்டித்து வருகின்றனர். தத்தமது அரசியல் நலன்கட்காக இத்தகைய சிக்கல்களைத் தீர்க்க விரும்பாத நிலையில் வழமையாக அரசியல் வாதிகள் செய்வது போலவே ஆயுத ஒப்படைப்புத் தொடர்பாகக் குழப்பகரமான, தெளிவற்ற சொற்றொடர்களைப் பிரித்தானியப் பிரதமர் பயன்படுத்துகின்றார். (அண்மைக்காலமாக சந்திரிகா அம்மையாரும் இவ்வாறு கூறி வருவது மட்டுமன்றி யோன் மேஜரை வேறு உதாரணமும் காட்டி வருகின்றார்) ஆயுதங்கள் சிலவற்றை ஒப்படைத்தால் போதுமென்றும் அல்லது ஒப்படைக்க தொடங்குவதாக விருப்பம் தெரிவித்தாற் போது மென்றும் பல்வேறு விளக்கங்கள் இப்போது ஆங்கிலேயத் தரப்பிற் கூறப்படுகின்றன.



## திசை திருப்பும் உத்தி

எது எப்படியிருந்த போதும் உலகத்தின் மிகப் பழமையான மிகக் குழப்பகரமான-தாகக் கருதப்படும் வட அயர்லாந்துச் சிக்கலுக்கு இப்போதைக்குத் தீர்வில்லையென்பது தெளிவாகிவிட்டது. இவ்வாறாக ஓராண்டு கால ஐ.ஆர்.ஏ.யின் போர் நிறுத்தக் காலம் ஏன் தக்க முறையிற் பயன்படுத்தப் படவில்லையெனப்பார்க்குமிடத்துப் பொதுவான சில உண்மைகள் புலப்படுவதைக் காண முடிகின்றது. ஐரிஸ் சிக்கலைத் தீர்க்கப் போகின்றேன் என மார்தட்டிக் கூறிய யோன் மேஜர் இப்போது பின்வாங்குவதற்கு அவரது பலவீனமான பதவி நிலையே முக்கிய காரணமாகின்றது. பிரித்தானிய நாடாளுமன்றில் மிகக்குறைந்த பெரும்பான்மையோடு காலம் தள்ளும் அவருக்கு அவரது பழமைபேண் கட்சிக்குள்ளே பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. அண்மையிற் கூட அவரது பதவி பறிபோகும் நிலைதோன்றித் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனதுபோற் தப்பிப் பிழைத்தார்.



சரிந்துபோகும் பிரித்தானிய பொருண்மிய நிலை, அதை நிமிர்த்த ஐரோப்பிய ஒன்றியத்தோடு முற்றாக இணைந்து செயற்பட "ஆங்கிலேயத் திமிர்" விடாமை எனப் பலவகையாலும் தள்ளாடும் மேஜரின் நாடாளுமன்றப் பெரும்பான்மை வட அயர்லாந்தின் புரட்டடஸ்தாந்து அல்ஸ்ரர் இணைப்புக் கட்சியின் (Ulster Unionist Party) 9 நாடாளுமன்ற உறுப்பினர் ஆதரவிலே தங்கியுள்ளது. இவர்கள் அமைதித் தீர்விற்கு எதிரானவர்கள். தமக்குத் துரோகமிழைக்கப் பிரித்தானிய அரச முயல்கின்றது எனக் கொதி நிலையில் உள்ளவர்கள். இவ்வாறாக வடஅயர் லாந்தினை இங்கிலாந்தோடு இணைக்க விரும்பும் இணைப்பாளர் (Unionists) கட்சியை முற்றிலும் பகைக்க முடியாமல் அதேவேளை அமைதிப் பேச்சுக்கள் தோல்வியடையத் தானே காரணம் என்றாகி விடக் கூடாதென்பதற்கா கவே யோன் மேஜர் ஆயுத ஒப்படைப்பு விவகாரத்தைத் தூக்கிப் பிடிக்கின்றார் என்பது தெளிவு.

ஐரிஸ் குடியரச இராணுவத்தினரின் இலண்டன் மாநகர் மீதான தொடர்ச்சியான பல ஆண்டுக் குண்டுத் தாக்குதல்கள் கொடுத்த தாங்க முடியாத பொருண்மியச் சீரழிவு 17 ஆயிரத்திற்கும் மேலான தனது படைவீரரோடு பல ஆண்டுகளாக வட அயர்லாந்தைப் பராமரிக்கும் பெரும் செலவுச் சுமை, அமெரிக்க சனாதிபதியின் அழுத்தம் போன்ற பல காரணங்களிற்காகவும் தனது அரசியல் நிலையை அப்போது பலப்படுத்தும் என்றும் கருதியே ஜோன் மேஜர் ஐ.ஆர்.ஏ அமைப்புடன் பேச்சுக்கு முன் வந்தார். ஆனால் இப்போதோ காலம் காலமாகத் தமது விசுவாசிகளாகச் செயற்பட்ட புரட்டஸ்தாந்துக் கட்சிகளின் ஆயுதக் குழுக்களை எவ்வாறு சமாளிப்பது எனத் திணறும் நிலை. (வடஅயர்லாந்தின் குடித்தொகையில் 60 விழுக்காட்டு மக்கள் அதாவது ஏறத்தாழ 10 இலட்சம் பேர் புரட்டடத்தாந்து மக்களாவர்) அதேவேளை 1800ஆம் ஆண்டளவில் அயர்லாந்துத் தீவைத் தன்னோடு பிரித்தானியா இணைத்தபோது அதை எதிர்த்துப் போராடி 1916-21ஆம் ஆண்டுகட்கிடையில் நடைபெற்ற ஐரிஸ் - ஆங்கிலேயப் போரின் விளைவாக அயர்லாந்தின் தென்பகுதி ஐரிஸ் குடியரசாக இறைமையுள்ள 95 விழுக்காடு கத்தோலிக்கர் வாழும் நாடாகியதும் அப்போது அயர்லாந்தின் 6 பிரதேசப் பிரிவுகள் (Counties) பிரித்தானிய மேலாதிக்கத்தின் கீழ் வந்ததும் முன்னைய கதை. அங்கு வாழும் 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட கத்தோலிக்க மக்களை அடக்கி அயர்லாந்தைத் தன்னோடு இணைத்து வைக்கக் கருவியாகப் பயன்பட்ட புரட்டஸ்தாந்து மக்கள் இப்போது எழுப்பும் எதிர்ப்பே வடஅயர்லாந்தின் அமைதிக்குப் பெரும் தடையாகி விட்டது.

## வளர்த்த கடா

எனவே அண்மையில் நடைபெற்ற அல்ஸ்ரர் இணைப்பாளர் கட்சியின் தேர்தல் முடிவுகள் நிலைமைகளைத் தெளிவாகவே பிரதிபலிக்கின்றன, இத்தேர்தல் முடிவுகள் மேஜரின் அமைதி முயற்சிக்கு பெரும் தடைக் கல்லாகி விட்டன. இதுவரை காலமும் ஓரளவு மிதவாதப் போக்கில் செயற்பட்டவரும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவருமான யோன் ரெயிலர் தோற்கடிக்கப்பட்டுக் கட்சித் தலைமை தீவிர வலது சாரியிற் கடும் கோட்பாளர் எனக் கருதப்படுபவரான டேவிற் றிம்பிள் (David Trmble) வசம் 466-233 என்னும் வாக்குகள் வித்தியாசத்தில் போயுள்ளது. இவரோ யோன் மேஜரைவிட ஒரு படி மேலே போய் ஐ. ஆர். ஏ முழுமையாக ஆயுதங்களை ஒப்படைத்தாலே அதனோடு புரட்டஸ்தாந்து தரப்பினர் பேச்சுக்கள் நடத்த முன் வருவர் எனக் குண்டொன்றைத் தூக்கிப் போட்டுள்ளார். அது மட்டுமன்றி ஐக்கியராச்சியத்தின் (U.K) குடிமக்களாக வாழும் தமது பிறப்புரிமையை என்றும் பாதுகாப்பதே தமது பணி என்றும் கூறியுள்ளார். எனவே இப்போது ஜெரி அடம்ஸ் கூறியதுபோல் பேச்சுவார்த்தைகள் ஒரு தீர்க்கமான கட்டத்தில் உள்ளன. ஜெரி அடம்ஸ் 25 ஆண்டுகாலப் போராட்டத்தைத் தாம் இடைநிறுத்தியது ஐரிஸ் சிக்கல் தோன்றியதற்கான மூலகாரணிகளை அகற்ற ஒரு வாய்ப்பை, சிக்கலை உருவாக்கிய ஆங்கிலேய அரசுக்கு அளிப்பதற்கே எனப் பொருத்தமாகக் கூறித் தமது நிலைப்பாட்டை வலுப்படுத்தி வருகின்றார்.

## அமெரிக்க அவதாரம்

இத்தகைய நிலையிலே இன்று அமைதித் தீர்ப்பாளனாகப்

தொடர்ச்சி : 14 ஆம் பக்கம் பார்க்க

இத்தகையதொரு நிலை தோன்றுவதற்குப் பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேஜர் முழுமையான அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் ஐ.ஆர்.ஏ. ஆயுதங்களை ஒப்படைக்கத் தொடங்க வேண்டும் என வலியுறுத்தி வருவதே காரணமாகும். அடையாளத்திற்குத்தன்னும் ஒருசில ஆயுதங்களை ஒப்படைக்க முடியாது என்றும் அது சரணாகதிக்குச் சமம் என்றும் ஐ.ஆர்.ஏ. தெளிவாகவே கூறிவிட்டது.

"நாம் கடந்த ஓராண்டாக அமைதி யைப் பேணியது எமது நல்லெண்ணத்தைக் காட்ட வில்லையா! இதைவிட வேறு என்ன வேண்டும்!" என வினாவெழுப்பும் ஐ.ஆர்.ஏ. அமைப்பின் அரசியற் பிரிவினர் அமைதித் தீர்வொன்றினை முன்வைக்க வக்கற்ற நிலையிற் பேச்சுக்களைத் திசைதிருப்பும் ஒரு உத்தியாகவே இக் கோரிக்கையை மேஜர் விடுக்கின்றார் என காட்டமாகக் கண்டித்து வருகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எதிரியின் எண்ணத்தில் மண்ணைப் போடுவோம்

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி தம் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்து விடவேண்டுமென்பதுதான், சந்திரிகா அரசின் தற்போதைய நோக்கம் என்பதை அரச படைகளின், 'முன்னோக்கிப் பாய்தல்' தெளிவாக்கி விட்டது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதன் மூலம் தமிழீழ நிர்வாகக் கட்டமைப்பை உடைத்து விடலாம் என முன்னோக்கிப் பாய்தல் மூலம் அரச கண்ட பகல் கனவு 'புலிப்பாய்ச்சலால்' தகர்ந்தது.

மழைபோல் ரவைகளையும் எறிகணைகளையும் பொழிந்தவாறு, 78 சதுர மைல் பரப்பை நான்கு நாட்களில் பிடித்துக்கொண்ட வேகத்தை

விட, புலிப்பாய்ச்சலின் வீச்சைத் தாங்கமுடியாது ஒரு நாளிலேயே தமது பழைய இடங்களுக்குச் சிறீலங்காப் படைகள் திரும்பி ஓடிய வேகம் மிக அதிகம்.

அதன் பின்னர் அளவெட்டியிலிருந்து சன்னாகம் நோக்கி முன்னேற முயன்ற அரச படைகள், புலிகளின் எதிர்த் தாக்குதலுக்கு முன் நின்று பிடிக்க முடியாது பின் வாங்கி ஓடிவிட்டன.

இவ் வெற்றிகளுக்கெல்லாம் பின்னால் நிற்பவர், பிரபாகரன் எனும் பெரு மனிதர்.

புலிப்பாய்ச்சலின் போது, அரச படைகளுக்கு மும்

முனைகளிலும் இழப்பை ஏற்படுத்தும் வகையிற் திட்டங்களைத் தீட்டியவர் அவர். புலிப்பாய்ச்சலில்

தன்னுடைய விமானம், உலங்குவானூர்தி, போர்க்கப்பல், டாங்கி, படை வண்டிகள் என்பவற்றை இழந்தது அரசுக்குப் பேரிழப்பே. அதே நேரம் இத்தகைய படைக்கலங்களைத் தாக்கியழிப்பதற்கு எமக்குப் பொருளாதார ரீதியாகக் குறிப்பிடத்தக்களவு இழப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாத விடயமாகும்.

ஒரு விமானத்தைத் தாக்கியழிப்பதற்கு ஏறத்தாழ 50 இலட்சம் ரூபா செலவேற்படும். பன்னிரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான 'எடித்தரா' வைத் தாக்கி மூழ்கடிப்பதற்குரிய வெடி மருந்துகள், விசைப்படகுகளின் பெறுமதியும் கோடிக்கணக்கானது தான்(வெடிமருந்தோடும் விசைப்படகோடும் விலை மதிப்பிடவே முடியாத துடிப்புமிக்க போராளிகளையும் சேர்த்தே நாம் இழக்க வேண்டியிருக்கிறது).

முன்னேறிய இராணுவத்தைத் தடுத்து, நிறுத்துவதற்கு ஏற்படும் செலவை விட, இராணுவத்தை முற்றாகவே துடைத்தெறிவதற்கு ஏற்படும் செலவு மிக அதிகம்.

இன்று எமக்கு வேண்டியது என்ன என்று ஆழ்ந்து சிந்தித்தால்,'எமக்கு நிம்மதியாய் வாழ ஒரு நிலம்' என்ற பதில்தான் எல்லோர் மனங்களிலும் எழுகின்றது. பக்கத்திலே தன் படைத்தளத்தை அமைத்துக்கொண்டு, அடிக்கடி 'சொறியும்' இராணுவத்துடன் வாழ, இன்று எந்தத்தமிழ் மக்களுமே தயாராக இல்லை.

எம் மக்கள் நிம்மதியாய் வாழ்வதற்கான தாயகத்தை மீட்கும் பணியில் எல்லோருமே ஈடுபட வேண்டும். அதற்காக நாம் எம் மக்களிடம் கேட்பது, வீட்டுக்கொரு போராளியையும் நிதியையும் எமக்குத் தாருங்கள் என்பதையே.

'தமிழீழத்தைத் தவிர வேறு எதுவுமே தமிழருக்கு விடுதலை பெற்றுத் தராது' என்பதுதான் உண்மை. எமக்கென்றொரு நாடு இருந்தால் உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும், ஏதிலிகள் தங்ககங்களிலும், மர நிழல்களிலும் நம் மக்கள் வாழ வேண்டியிராதே.

ஒவ்வொரு பெற்றோரும் தம் வாரிசுகளின் எதிர் கால நல்வாழ்வுக்கெனச் சேமித்த ஏராளமான செல்வங்கள் எல்லாம் நிலங்களாகவும், வீடுகளாகவும், பொருள் பண்டங்களாகவும் எதிரியின் கையிலேயே இருக்கின்றன. பலாலியின் தோட்டக் காணிகளும், பழத் தோட்டங்களும், மாவிட்டபுரத்தின் வெற்றிலைத் தோட்டங்களும் தமிழருக்குரியவை. ஒவ்வொரு தமிழனும் தன் வியர்வையைச் சிந்தி உழைத்த நிலம் அது. யாழ் குடாநாட்டு மக்களின் உப்புத் தேவையை நிறைவு செய்து வந்த ஆனையிறவு எதிரியிடம். தீவுப்பகுதியெங்கும் இராணுவம். இன்று பலாலியிருந்து பல்லாயிரக்கணக்கான படையணியுடனும், நவீன கனரக ஆயுதங்களுடனும், விமானக்குண்டுகள்-எறிகணை வீச்சக்களுடனும் கொலைப்படையாக நீர்வேலி வரை நகர்ந்த சந்திரிகாவின் முப்படைகளும், என்ன விலை கொடுத்தேனும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பதில் வெறியாயுள்ளன. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற அரசின் எண்ணத்தில் நாம் மண்ணைப் போட வேண்டுமென்றால், யாழ்ப்பாணத்தைச் சூழ்ந்துள்ள சிறீலங்கா இராணுவத்தை முற்றாக அழிக்க வேண்டும். அல்லது துரத்தியடிக்க வேண்டும். இதைச் செய்ய, புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது. புலிகள் இயக்கத்திற்குப் பின் பலம் கொடுக்கத் தமிழ் மக்கள் தம்மைத் தயார் படுத்த வேண்டும்.

ஆயுதக் கொள்வனவுக்காக சிறீலங்கா அரச அதிகாரிகள் பாகிஸ்தானுக்குப் போய் வருகிறார்கள். அமைச்சின் செலவினங்களைப் பத்து வீதத்தால் குறைத்து, மீதப்படும் நிதியைப் பாதுகாப்புக்கு ஒதுக்கலாம் என்று, அரசுக்கு அமைச்சர்களால் ஆலோசனை தரப்படுகிறது. இலங்கையின் தரைப்படைக்கு 225 கோடி ரூபாவும், கடற்படைக்கு 152 கோடி ரூபாவும், விமானப்படைக்கு 25 கோடி ரூபாவும், காவற்துறைக்கு 30 கோடி ரூபாவும் தேவை என அமைச்சர் ஒருவர் அரசுக்கு அறிவுறுத்துகிறார். சிங்களப் பேரினவாதிகள் அரசுக்குக் கொடுக்கும் பேராதரவைப்போல, பல மடங்கு ஆதரவை ஒவ்வொரு தமிழனும் புலிகள் இயக்கத்திற்கு வழங்க வேண்டும்.

இந்திய விடுதலைப்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்



# இந்து மா கடலில் காணாமல் போனது?

## சிட்டுவின் சிநகைசப்பு

'எல்லாம் காலப்பிழை'

'காலம் பிழைச்சப் போச்சதெண்டா ஆர்தான் என்ன செய்ய முடியும்'

குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

சாளரத்தின் பலகைக் கதவில் சிட்டுக் குருவி வந்து குந்தியிருந்தது.

'காலை வணக்கம் வாரும் வாரும்' வரவேற்பு முகமன் கூறினேன்.

'எங்க கனகாலமாய் காணேல?'

'அன்ரனோவும் விழுந்து, உள்ளூர் விமான சேவையும் ர்த்தான பிறகு வான மண்டலம் முழுதும் எனது இராச்சியம் தானே. எல்லா இடமும் பறந்து திரிந்துபோட்டு இப்பதான் வாறன்" என்றது அது.

'அப்படியெண்டா உம்மட்டைக் கன புதினம் இருக்குமே! அவிட்டு விடுமன்"

'உப்பிடிக் கேட்டா சரிவராது. உமக்குத் தேவையான விசயத்தை ஒண்டொண்டாய் கேளும். எனக்குத் தெரிந்ததை சொல்லுறேன்" என்றது அது.

'அட! பேச்சுவார்த்தை தொடங்குறதுக்கே நிபந்தனையோ" என உதடுகள் உதிர்த்த வார்த்தையைக் காற்றோடு போக விட்டுவிட்டு 'என்னெண்டு இந்த அன்ரனோவ் விழுந்ததாம்" என்றேன்.

'மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியை என்ன மாதிரி சாதாரணமாய் கேட்கிறீர்"! நையாண்டி பண்ணியது அது.

'சரி கிடக்கட்டும் விசயத்தைச் சொல்லுமன்'

'நாசவேலை, இயந்திரக் கோளாறு, காலநிலைக் கோளாறு இதில் ஏதாவது ஒண்டு அல்லது எல்லாம் சேர்ந்ததாய்தான் இருக்க வேணும். ஆனா இதில் உள்ள பிசகு என்னெண்டா உண்மையான காரணம் என்னவாய் இருந்தாலும் அதை அரசாங்கத்தால வெளியில சொல்ல ஏலாது கண்டியோ"!

'ஏனாம்" என்றேன்.

'ஏனோ" என்று கேட்டு முறைத்துப் பார்த்தது.

சட்டு விழுத்தினது எண்டு சொன்னா—

கொழும்பு வானமும் பறிபோயிட்டுது எண்டு ஒப்புக் கொள்ள வேண்டியதாய் போகும். குண்டு வைச்சது எண்டு சொன்னா—ஊடுருவி வைக்கக்கூடிய ஆக்கள் இருக்கினம் எண்டதை ஏற்க வேண்டி வரும். இயந்திரக் கோளாறு எண்டு சொன்னா— புதிதாய் வாங்கினது பார்த்து வாங்கேல்லையோ எண்டு மற்றவை குறை சொல்லுவினம். 'அப்ப எல்லாத்துக்கும் பொதுவாய் காலநிலைக் கோளாறு எண்டிட்டா பிரச்சனையில்லைத்தானே"! எனது கண்டு பிடிப்பை வெளியிட்டன். காலநிலைக் கோளாறு இல்லைக் காணும் காலப் பிழை' எனத் திருத்தியது. உடனேயே கிட்டவாகப் பறந்து வந்து தோளில் குந்திய சிட்டுக் குருவி காதுகளில் கிசுகிசுத்தது.

"அவ்ரோவுக்கும், புக்காராவுக்கும் நடந்ததை அறிஞ்சு அன்ரனோவ் தற்கொலை செய்து போட்டுது. பிரேத பரிசோதனை செய்தாப்போல, செத்த ஆள் திரும்பியா வரப்போகுது" என்பதாய் அது இருந்தது.

"புதுசாய் கொள்முதல் செய்த மூன்று அன்ரனோக்களில் ஒன்று மட்டும்தான் கடலில். ஆனபடியால் நீா கனக்க நினைக்காதையும்" என்று ஒரு எச்சரிக்கைக் குறிப்பை எடுத்து வீசினேன்.

அவ்வளவுதான் சிட்டுக்குருவி கிறீச்சிட்டது. அதன் குரலில் ஒரு கடூரம்.

"அன்ரனோவின் சக்தி அபரிமிதமானதுதான். ஆனா அந்த சக்தியில் அரசு வைச்சிருந்த நம்பிக்கையும் கூட இந்துப் பெருங்கடலில் விழுந்துபோய்க் கிடக்கு. தெரியுமோ?" அது கேள்வி எழுப்பியது.

"சும்மா கதை விடாதை"

அன்ரனோவ் வந்து சேரும்வரை யாழ்ப்பாணத் தாக்குதல்களே ஒத்தி வைப்பு செய்யப்பட்டது தெரியாதோ?"

அன்ரனோவ் வந்துவிட்டால் படையினரின் மன வலிமை வான்வரை உயருமென்று கணக்குப் போட்டது தெரியாதோ!

படையினர் முன்னேறிக் குதிக்க அன்ரனோவ் பின் பலம் சேர்க்கும் என்று அனுருத்த கனவு கண்டது தெரியாதோ!

அன்ரனோவ்கள் வந்து சேர்ந்த போது, கொழும்புப் பத்திரிகைகள் போட்ட கும்மாளம் உமது கண்ணுக்குப் புலப்படவில்லையோ! யாழ்ப்பாணத்தை வாரி எடுக்க அன்ரனோவ் கை கொடுக்கும் என்று நம்பியிருந்தது புரியாதோ! கேள்விக்கு மேல் கேள்வியாகத் தொடர்ந்து அடுக்கினேன்.

அனைத்தையும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த சிட்டுக் குருவி, வெகு நிதானமாக 'டி-55' ரகப் போர்த் தாங்கிகளிலும், டோறா ரக அதிவேக ரோந்துப் படகுகளிலும் அரசும் படைகளும் வைத்திருந்த நம்பிக்கைகளுக்கு என்ன நடந்தது! என்று அது கேள்வி எழுப்பியது. நான் மௌனமானேன்.

சிறிது நேரம் தாமதித்திருந்த சிட்டுக் குருவி எனது மௌனத்தின் ஆழத்தை அறிய சிங்கப்பூரின் நீர் மூழ்கியும், இந்தியாவின் சுழியோடிகளும் இன்னும் ஆழ்கடல் தொலையுணர் சாதனங்களும்தான் தேவையெனக் கூறியவாறு சிறகுகளை அசைத்தது.

**இனியவன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காட்டுமரங்களைக் காவலரண்களாகக் கொண்டிருந்த அந்த முகாமின் அமைதி மெல்ல மெல்லக் கலைந்தது! அவர்கள் இரண்டு மூன்று பேராய் கூடி நின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவனுக்கு வயது பதினாறு அல்லது பதினேழு தான் இருக்கும்... ஒல்லியான சிவந்த உடல், அவன் மட்டும் தனித்து ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தான். கண்களிற் தூக்கம். கன்னங்களிற் சுருள் சுருளாய் முடி... "இந்தியனிட்டை இருந்து எஸ். எல் ஆர் பறிக்காமற் திரும்பி வரமாட்டன்." அவனின் குரல் காட்டுமரங்களிற் பட்டுத் தெறித்தது!

"அப்ப நீ இந்தச் சண்டையில கட்டாயம் மண்டை தான் ஆ..." கேலிபண்ணிய பிறகுதான் அவனுக்குச் சுயநினைவு வந்தது. வெட்கத்துடன் முகத்தைப் பொத்திக் கொண்டான்.

தாக்குதற் பொறுப்பாளர் அவனருகே வந்து அமர்ந்தார். அவன் கத்தியது பொறுப்பாளருக்கும் கேட்டிருக்க

# இழப்புக்களின் பின்னால்

வேண்டும்.

ஆதரவாகத் தோளிற் கை போட்டபடி... "அருள். நீ இந்தச் சண்டையில ஒரு எஸ்எல் ஆர் எடுத்தியெண்டா. அண்ணையிட்டைச் சொல்லி உன்னைக் கொமாண்டோ றெயினிங்குக்கு அனுப்புவன்" என்றார் பொறுப்பாளர்.

அண்ணன் என்ற பெயரைக் கேட்டதும் அந்த இளம்புலி அருளுக்கு உடம்பின் உள்ளே இரத்த ஓட்டம் சுறு சுறுப்பாகியது, முகத்தில் பெருமிதம் பிறந்தது.

"தம்பி' நிமிர்ந்து பார்த்தார்கள். நாதன் அண்ணா உணவுப் பார்சல்களுடன் நின்றார். முகமும் உடலும் புழுதி படிந்திருந்தது.

"இருங்கோ அண்ணை." உணவுப் பாசல்களை வைத்துவிட்டு அமர்ந்தார்.

"வழியில ஏதும் சிக்கலோ அண்ணை."

"பெரிசா ஒண்டுமில்லை. பிள்ளையார் கோயிலடிப் பக்கம் இண்டைக்கு ரவுண்டப். ஆரைப் பிடிக்கிறாங்களோ." பெருமூச்செறிந்தார்.

"நல்லவடிவா இண்டைக்கு ரவுணடப் செய்யட்டும்...நாளைக்கு இருக்குக் கதை மச்சான்மாருக்கு." பொறுப்பாளரின் குரல் ஏளனம் செய்தது!

"ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்தை றவுண்டப் செய்யிறான்... ஆம்பிளையளை விசாரணைக்கெண்டு அனுப்பிப் போட்டு. கொம்பிளையளை...ம்... இந்தியன் இப்படிச் செய்யிறான். ஆர் கண்டம் இப்படியெல்லாம் வருமெண்டு..." நாதனின் கண்களில் ஈரம் உருண்டது!

நாதன் விடுதலைப் புலிகளின் நீண்டகால ஆதரவாளர். அவரின் தம்பியையும் மூத்த மகனையும் சிங்கள ஆமி சந்தேகத்திற் கைது செய்தது. இன்றுவரை செய்தியில்லை! இரண்டாவது மகன் இயக்கத்தில். அவரும் மனைவியும் இரண்டு பெண் பிள்ளைகளும் தான்.

ஆதிலட்சுமி சிவகுமார்

போராளிகள் உப்புப் பிஸ்கற்றையும் பச்சைத் தண்ணீரையும் உணவாக உண்பதைக் கண்டு அவராற் பொறுக்க முடியவில்லை. மனைவியிடம் சொல்லித் தினமும் காலை உணவு கொண்டு வருவார். காலை உணவு என்று பெயர் ஆனால் அது நண்பகல் மட்டிற் தான் வரும்.

"எங்களுக்கு நாளைக்குச் சாப்பாடு வேண்டாமண்ணை."

நாதன் அண்ணா தவிப்போடு சொன்னவனைப் பார்த்தார்.

"கனநாளைக்குப் பிறகு ஒரு அடி கொடுக்கப்போறோம். நீங்கள் இஞ்சாலை வரவேண்டாம்...சக்ஸஸ் எண்டா வந்து சொல்லுவம்." நாதன் அண்ணா தலையாட்டினார்.

நாதன் அண்ணா கொண்டு வந்த பிட்டையும் சம்பலையும் போராளிகள் அமிர்தமாய் உண்டார்கள்.

"வாறன் தம்பி. தம்பியவை வாறன்... அருள்... கவனமடாப்பா... தம்பி குணம் வரட்டே."

நாதன் அண்ணர் உரப்பையையும் மடித்துக் கொண்டு விடைபெற்றார்.



பாதிக்கப்பட்டவர்களுக்காக இந்திய இராணுவம் வழங்கிய அரிசியையும் பருப்பையும் சுமந்தபடி நடந்து கொண்டிருந்தார் நாதன் அண்ணர். "பெடியளுக்கு நாலு நாளைக்குச் சமைச்சுக் கொடுக்கக் காணும்." அவர் மனம் கணக்குப் போட்டது.

"நாதன் அண்ணை சயிக்கில்லை ஏறுங்கோ... வீட்டடியில் இறக்கி விடுறன்." சின்ராசு அருகில் சயிக்கிளோடு வந்தான். சின்ராசுவின் சயிக்கிளில் நாதன் அண்ணர் ஏறிக்கொண்டார்.

"எத்தினை நாளைக்கு இந்தியன்ர அரிசியைத் தின்னுறது... உழைக்கப் பிழைக்க விடுகிறாங்களில்லை." சின்ராசு வேதனைப் பட்டான்.

"இந்தியன் அரிசி தாறது நாங்கள் பாவமெண்டில்லையடா... அரிசியைத் தந்து போட்டு. பெடியளைப் பற்றி ஏதாலும் பிடுங்கலாம் எண்டு பாக்கிறாங்கள்."

> **சுடடா....சுடடா..... குரல்கள் மோதின.**
> **போராளிகளை முன்னேற விடாது கைக்குண்டுகள் மின்னின முழங்கின! நீண்ட நேரமாய் இருந்த இடத்திலிருந்தே தற்காப்புக்காகத் தாக்கினார்கள்! தாக்குதலுக்குத் தலைமை தாங்கியவன் மார்பில் குண்டேந்தி வீழ்ந்து கிடந்தான்...சற்றுத் தள்ளி... சின்னவன் அருளும் இரத்த வெள்ளத்தில்!**
> **பின்வாங்குவதைத் தவிர வேறுவழியில்லை... பின்வாங்கினார்கள்!**

"பெடியளை எங்க இவை பிடிக்கிறது! ராத்திரி முழுக்க ஒரே நாய்ச் சத்தம்... பிள்ளையார் கோயிலடிப் பக்கமா பெடியள் வந்திருக்கிறாங்கள் போலை."

"எங்கட குணம் கோஸ்டிக்கு பிள்ளையார் கோயிலடிக் காம்பில ஒரு கண்ணடா சின்ராசு. கிட்டடியில சாத்து விழும்."

"கோயிலடிக் காம்பில கைவைச்சா... எங்கட கதையெல்லாம் இந்தியன் முடிச்சப் போடுவான்." சின்ராசுவின் குரலில் நடுக்கம்.

சிறிது நேரம் அமைதி. இந்திய அமைதிப் படையின் அணியொன்று வீதியின் இருமருங்கிலும் கொடி போல நகர்ந்தது. அவர்களின் உருவங்கள் அச்சமூட்டின. சிலர் சின்ராசுவையும், நாதனையும் பார்த்து "எல்ரிரிசு, எல்ரிரிசு..." என்று கூறிச் சிரித்தபடி சென்றனர்.

தலைப்பாகையும் தாடியுமாகச் சென்ற ஒருவன் இவர்களைத் திரும்பித் திரும்பி முறைத்தபடி போனான்.

"எங்கடை மண்ணில உவைக்கு நாங்கள் பயப்பட வேண்டிக் கிடக்கு..." நாதனுக்கு ஆத்திரமாக இருந்தது.

"என்ன இருந்தாலும் இந்தியா ஒரு வல்லரசு. மொக்குத்தனமாச் சண்டையைத் தொடங்கிட்டம்."

"அவை வல்லரசு எண்டதுக்காக எங்கட சனத்தை அழிக்க. பொடியள் விடுவாங்களே...!"

உரையாடலுக்கு நடுவே வீடு அண்மித்தது. "வாவன் சின்ராசு... பிளேன்ரீ ஒன்டு குடிக்கலாம்." நாதனின் அழைப்பை மறுத்துவிட்டுச் சின்ராசு மறைந்தான்.

சின்ராசுவால் தூங்க முடியவில்லை. அடிக்கடி எழும்பி முற்றத்தில் வந்து நின்றான். அவனின் செயல் மனைவிக்கு வியப்பூட்டியது.

"என்னப்பா கடுமையாக யோசிக்கிறியள்!" பரிவோடு கேட்ட மனைவியை மௌன-மாகப் பார்த்தான். பார்வையில் மரணபீதி!

இந்திய இராணுவத்தின் நெடிய தோற்றமும். இராணுவ கொமாண்டர் பிரேம்சிங்கின் அசாதாரண உருவமும் அவனைப் பயமுறுத்தின!

கடந்த சனிக்கிழமை... இருள் பிரியாத அதிகாலை நேரத்தில். வீடு வீடாகப் புகுந்து எல்லோரையும் கூட்டிச் சென்று கோயில் வீதியில்... சுடுமணலில் உட்கார வைத்து. தங்களுடைய வீரதீரங்களையும், தாங்கள் தமிழ் மக்களுக்குப் பெற்றுத்தர இருக்கும் மாகாண ஆட்சியைப் பற்றியும், புலிகளின் நடவடிக்கைகள் பற்றியும் பிரசங்கம் செய்து...இறுதியில் மொழிபெயர்ப்பாளர் மூலம் "இந்தப் பிரதேசத்தில் ஏதாவது தாக்குதல் நடந்துதெண்டா வீடுவீடாகப் புகுந்து எல்லோரையும் சுட்டுப் போடுவன்" என்று மிரட்டியதையும் சின்ராசு நினைவு கூர்ந்தான்.

நாதன் சொன்னது போல பிள்ளையார் கோயிலடி முகாம் புலிகளால் தாக்கப்படுமானால் தன் குடும்பமும் அழியும் என்று சின்ராசு பயந்தான்.

"என்னப்பா! ஏதானும் பிரச்சனையே." மனைவி மீண்டும் கேட்டபோது "மனிசரைக் கொஞ்சம் நிம்மதியாய் இருக்கவிடு பாப்பம்..." மனைவிமேற் சீறினான்.

இரவு முழுவதும் அவன் மனம் அலைபாய்ந்தது. ஒரு முடிவுடன் தூங்கிப் போனான்.

காலையில் எழுந்ததும் தன் முடிவோடு அவன் இந்திய இராணுவ முகாமிற்குள் நுழைந்தான்.

இந்திய இராணுவமும் தமிழீழத் தேசத் துரோகிகளும் அருகருகாகக் குடியிருக்கும் அந்தக் கிராமத்தை நோக்கி... கொமாண்டோ ரெயிடுக்காக வாகனம் புறப்பட்டது.

மிகவும் அநுபவம் கொண்ட புலிகள் பதினொருபேர் அமர்ந்திருக்கிறார்கள். காட்டின் கரையோரமாக வாகனத்தை நிறுத்திவிட்டு, அவர்கள் மெதுவாக ஊர்ந்து செல்கிறார்கள்.

தாக்குதற் பிரிவுத் தலைவன் முன்னே செல்ல... அவனின் கட்டளைப்படி போராளிகள் பின்னே நகர்கிறார்கள். ஒருவனாய் சின்னவன் அருளும்! காவல் நிலையங்களையும் ஊடுருவி உள்ளே இன்னும் சில யார்கள் தான்! திடீரென இந்திய இராணுவத்தினரின் துப்பாக்கிகள் நாலாபுறங்களிலிருந்தும் சீறின!

"சுடடா...சுடடா..." குரல்கள் மோதின. போராளிகளை முன்னேற விடாது கைக்குண்டுகள் மின்னி முழங்கின! நீண்ட நேரமாய் இருந்த இடத்திலிருந்தே தற்காப்புக்காகத் தாக்கினார்கள்! தாக்குதலுக்குத் தலைமை தாங்கியவன் மார்பில் குண்டேந்தி வீழ்ந்து கிடந்தான்...சற்றுத் தள்ளி... சின்னவன் அருளும் இரத்த வெள்ளத்தில்!

பின்வாங்குவதைத் தவிர வேறுவழியில்லை... பின்வாங்கினார்கள்! "இந்தியனிட்டை இருந்து எஸ்எல்ஆர் பறிக்காமல் திரும்பி வரமாட்டன்" சின்னவன் அருளின் முகம் மனதில் நிழலாடியது...

எஞ்சியோரிலும் இருவருக்குப் கடுங்காயம்... பதினொரு பேரில் ஆறு பேர் மட்டும் திரும்பி வந்தார்கள்!

"குணமண்ணை செத்திட்டாரடா..." ஒருவன் சோகம் தாளாமல் சிறு குழந்தையாய்த் தேம்பி அழுதான்.

'ஆரோ மெஸேச் கொடுத்திருக்கிறான்கள். இல்லாட்டி இந்தியன் இவ்வளவு தூரம் அலேட்டாயிருக்கமாட்டான்."

சோகத்தோடு தலைமறைவானார்கள்!

தேசத்துரோகிகளின் முகாமில் சினிமாப் பாடல் பெரிதாக அலறியது. ஐந்து புலிகளின் உடல்களும் நிலத்தில் தாறுமாறாய்க் கிடந்தன.

ஒருவன் தீராத வன்மத்தோடு சில உடல்களைக் காலால் உதைத்தான்.

சின்னவன் அருளின் கழுத்தில் வெறும் கறுப்புக் கயிறு மட்டும் கிடந்தது. வாயில் இரத்தம் வடிந்து காய்ந்து கிடந்தது. குணத்தின் ஜீன்ஸ் பொக்கற்றில் இருந்து அவனது குறிப்புப் புத்தகம் தலை நீட்டியது.

தேசத்துரோகி ஒருவன் அதனை எடுத்துப் படித்தான். அவனுடலில் ஜிவு ஜிவு என்று தீப்பற்றியது.

தொடர்ச்சி மறுபக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நெருக்கடிக்கு உள்ளாகி.....

புலிப் பாய்ச்சல் தொடர் நடவடிக்கையின்போது புலிகளுடன் நெருங்கி வந்து தாக்குதலில் ஈடுபட்ட 'டோறா' அதிவேகப் பீரங்கிப் படகுகள், தாக்குதலில் கடற் புலிகளை நெருங்கி வந்து தாக்கமுடியாததோடு பின்வாங்கி துறைமுகத்திற்குள் அடைக்கலம் தேடிக் கொள்ளும் நிலையையும் உருவாக்கியது எனலாம்.

இதேசமயம், கடற் புலிகள் 20 எம். எம். பீரங்கிகளைப் பயன்படுத்தத் தொடங்கியமை கடற்போரில் டோறாக்களின் சகாப்தம் முடிவடைகின்றதா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது. ஏற்கனவே கடற் புலிகளின் தாக்குதல்களினால் கடற் போரில் டோறாக்களின் ஆதிக்கம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. தற்பொழுதும் புலிகளிடம் டோறாக்களின் வசதி இல்லாதவிடத்தும் அதனிடம் உள்ள தூர வீச்சு ஆயுதத்தைக் கடற் புலிகளும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளமை, டோறாக்களுக்குச் சவாலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இதை ஒத்ததாகவே இரண்டாம் கட்ட ஈழப் போரில் கரையோர ரோந்தில் கணிசமான இடத்தைப் பிடித்துக் கொண்ட நீருந்து விசைப் படகுகள், 'வோட்டர் ஜெட்' படகுகள் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதோடு, சில கைப்பற்றப்பட அவை கடற் போரிலிருந்து பெரிய அளவில் மறைந்து கொண்டன.

இதனை ஊர்ஜிதம் செய்தாற் போன்று இருந்ததே, கடற் புலிகளின் படகுகள் காங்கேசன்துறை துறைமுகப் பகுதிக்கும் அப்பால் சென்று, மாதகல் கடற் பரப்பில் 'லங்கா முடித' கப்பலின்மீது நடத்திய தாக்குதலாகும். இதன் மூலம் 20-09-95 சமரின்போது, குடாநாட்டின் வட கடற்பரப்பு புலிகளின் கட்டுப்பாட்டி ற்குள் இருந்தது என்றே கூறலாம்.

இந்த நிலையில் இன்று காங்கேசன்துறை துறைமுகம் குறித்து எழும் முக்கியமான கேள்வி, எவ்வேளையிலும் இத்துறைமுகத்தின் உட்பகுதியிலேயோ அன்றி வெளிப் புறத்திலோ சிறீலங்கா கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி நிற்க முடியுமா! என்பதே ஆகும். அது கடற் படைக் கப்பலாகவோ அன்றி விநியோகக் கப்பலாகவோ இருக்கலாம். இவற்றின் பாதுகாப்பைச் சிறீலங்கா கடற் படையால் எச்சமயத்திலும் உறுதிப்படுத்த முடியுமா! என்பதே அக்கேள்வியாகும்.

## இழப்புக்களின் பின்னால்...

நாதன்! பலமாக அந்த வீடே அதிரும்படி கத்தினான்! யோகன், சிறி. வாங்கோடா இஞ்சை! அவர்கள் வந்து அவன்முன் நின்றார்கள்!

இந்தப் புலியின்ரை பொக்கற்றிலை இரண்டு ஆதரவாளற்றை அட்ரஸ் கிடக்கு-ஆட்களை அப்ப வேணும். வெளிக்கிடுங்கோ.

தேசத்துரோகிகள் தயாரானார்கள். நவீன ஆயுதங்கள், கத்திகள், தடிகள், பொல்லுகள். ஊர்நாய்கள் எல்லாம் சேர்ந்து ஒன்றாக ஊளையிட்டன!

சந்தை கலைந்தது. கடைகள் இழுத்து மூடப்பட்டன! தெரு வெறிச்சோடியது. யமதூதர்களாய் அந்தக் கூலிக் கூட்டம் ஊரைச் சுற்றி வளைத்தது.

பெடியள் பூந்து அடிச்சவங்கள். அந்த ஆத்திரத்தில இவை இப்ப சனங்களை அடிக்க வெளிக்கிட்டிருக்கினம் போலை. நாதன் மனைவியைப் பார்த்துக் கூறினார்.

தம்பி நாதன். கோயில் றோட்டாலை கத்தியள் பொல்லுகளோடை வாறான்களாம். இண்டைக்கு ஏதோ நாசமறுக்கத்தான் போறான்கள். பக்கத்து வீட்டுக் கிழவி பரபரத்தாள்!

இஞ்சாருங்கோ! எனக்குப் பயமாக் கிடக்கு. நாதனின் மனைவி கலங்கினாள்.

நீ சும்மா பயப்பிடாதை! சொல்லி வாய் மூடுமுன். பின்னே வேலிக்கதியால்கள் சடசடவென்று முறிந்தன.

டேய் நாதன்! குரலொன்று காது சகிக்காத வார்த்தைக-ளால் தூஷித்தது.

பொல்லுகளாலும் தடிகளாலும் தாக்கப்பட்டு. அரை குறை உயிருடன் கைகள் கட்டப் பட்டு. நாதனை அவர்கள் இழுத்துச் சென்றார்கள்.

தம்பி அவரைச் சுட்டுப் போடாதேங்கோ. ஒருவனின் காலில் விழுந்து நாதனின் மனைவி கதறினாள்.

ஓமடி! வார்த்தைகள் அசிங்கமாய் அருவருப்பாய் வந்தன. நாதன் அண்ணரின் குழந்தைகள் அழுது துடித்தன.

நாதனை இழுத்துக் கொண்டு மற்றொரு ஆதரவாளர் வீடு நோக்கி எட்டப்பர் கூட்டம் நகர்ந்தது.



# அவுஸ்திரேலியாவில் புனர்வாழ்வுக்கழக

# 10 வது ஆண்டு நிறைவு விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10வது ஆண்டு நிறைவை ஒட்டி அவுஸ்திரேலியாக் கிளை, ஒரு சிறப்புக் கலை நிகழ்ச்சியை 9-10-95 அன்று சனிக்கிழமை மெல்போர்ண் நகரில் வெகு விமரிசையாக நடாத்தியது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் புரியும் அரிய பணிகளை எடுத்துக் காட்டும் கண் காட்சியுடன் பிற்பகல் 5.30 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. கழகத்தின் விக்ரோறியா மாநிலப் பிர-திநிதி திரு. விவேகானந்தன் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து, கழகத் தலைவர் வைத்தியக் கலாநிதி ஈஸ்வரன் கணபதிப்பிள்ளை அவர்களின் தலைமை உரை ஒரு தமிழ்த் தொண்டனுக்குரிய பாணியில் நிகழ்த்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் 10வது ஆண்டு நிறைவைச் சித்தரிக்கும் சின்னத்தைக் கழகத் தலைவர், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கழகத்தின் சுவிஸ்லாந்து மாநிலப் பிரதிநிதி பேராசிரியர் செல்வநாதனுக்கு அணிவித்து வெளியீடு செய்தார். விழாவிற்குச் சமூகமளித்திருந்த தமிழ் மக்கள் பெருமளவில் அச்சின்னத்தை வாங்கி, கழகத்தின் செயற்பாடுகளுக்குப் புத்தூக்கத்தைக் கொடுத்தனர். தொடர்ந்து இடம்பெற்ற உரையில் பேராசிரியர் செல்வநாதன், தமிழீழத்தில் அதர்மத்தை எதிர்த்து ஒரு தர்மப் போர் நடக்கிறது என்றும், இத்தார்மீகப் போரை தமிழ்த் தாய் பெற்ற எங்கள் சகோதர தியாக சீலர்கள் தம்மை மெழுகுவர்த்தியாக்கி நடாத்திக் கொண்டிருக்கிறார்களென்றும், இது ஒரு ஆயுதப் போராட்டம் மட்டுமல்ல அரசியல், சமூக சீர்திருத்த சுதந்திரப் போராட்டமுமாகும் என்றும் கூறினார். அந்தத் தியாகிகள் புரியும் அரும் பணிக்கு, புலம் பெயர்ந்து வாழும் எமது தமிழ்ச் சமுதாயம் எவ்வாறு பங்களிக்கலாம் என்பதனையும் எடுத்துரைத்தார். தமிழீழ மண்ணில் சிங்கள இராணுவம் புரியும் அட்டூழியங்களையும் இதனாற் பரிதவிக்கும் எமது உடன் பிறப்புக்களின் அல்லல்களையும் அவர் கூறிய முறை சகலரையும் உருக வைத்தது. இறுதியாக, அவர் அங்குள்ள தமிழ் மக்களிடம், "போரில் நாம் நேரடியாகப் பங்காளிகளாக இருக்காவிடினும் பார்வையாளர்கள் என்ற நிலையை விடுத்து, தமிழீழப் பொருளாதார சுதந்திரப் போராட்டத்திலாவது பங்காளிக ளாக வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்.





அடுத்து, மெல்போர் ண் கலைஞர்களால் தயாரிக்கப்பட்டு நடிக்கப்பட்ட 'இவர்கள் நாளை மாறுவார்கள்', 'அண்ணை லைட் எரியுது' என்ற இரு நாடகங்களும் மக்களின் கரகோசத்தைப் பெற்றதோடு, சிந்தனையையும் தூண்டும் வண்ணம் இருந்தன.

இடைவேளையின் பின்பு, சிறப்பு அம்சமாகத் திரு. சண்முகராஜா அவர்களினால் ஆக்கப்பட்ட யாழ் குடா நாட்டின் நீர்வளம் பற்றிச் சித்தரிக்கும் புத்தக வெளியீடு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவில் நடைபெற்றது. தமிழீழத்தின் பொருளாதார சுதந்திரத்திற்குக் குடாநாட்டின் நீர் வளத்தை அபிவிருத்தி செய்யும் திட்டங்களை இப்புத்தகத்தின் வாயிலாக, அதன் ஆசிரியர் வலியுறுத்தியுள்ளார். இப்புத்தகத்தை ஆய்வுரை செய்தவர்கள், ஒவ்வொரு தமிழ் குடிசார் பொறியியல் வல்லுஞர்களும் இந்நூலிலுள்ள கருத்துக்களை ஆராய்ந்து, அறிவுரைகள் வழங்குவது தமிழீழப் பொருளாதார சுதந்திரத்திற்கு மிகவும் அவசியமானதென்ற கருத்தினை வெளியிட்டனர்.

இறுதி நிகழ்ச்சியாக, சிட்னி-மெல்போர்ண் கலைஞர்கள் இணைந்து வழங்கிய நாடக அரங்கு இடம்பெற்றது. பின்னர் "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய் நன்றி கொன்ற மகற்கு" என்ற வள்ளுவர் வாக்குடன் நிகழ்ச்சிப் பொறுப்பாளர் திரு. சரன்குமார் நன்றியுரையை வழங்க, இரவு 11.30 மணியளவில் விழா நிறைவெய்தியது.

# கோவிலில் தஞ்சமடைந்திருந்த 2 வயோதிபர் ஷெல்லுக்கு பலி

### புத்தூர் கிழக்கில் கோர சம்பவம்

சிறீலங்கா இராணுவத்தினர் புத்தூர் கிழக்கில் ஆலயம் ஒன்றின் மீது மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின்போது அங்கு தஞ்சமடைந்திருந்த இரு வயோதிபர்கள் பலியானார்கள்.

நேற்று முன்தினம் மாலை 3.00 மணியளவிற் பலாலிப் படைமுகாமிலிருந்து புத்தூர்க் கற்பக விநாயகர் ஆலயம் மீது எறிகணைத் தாக்குதலை மேற் கொண்டனர். இதன்போது இவ்வெறிகணை வீழ்ந்து வெடித்ததில் ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த பொன்னர் தம்பிராசா (வயது 65), கந்தர் கிட்ணர் (வயது 72) ஆகிய இருவரும் ஸ்தலத்திலேயே பலியாகினர். இவர்களது சடலங்கள் இதுவரை உறவினரால் மீட்கப்படவில்லை.

இத்தாக்குதலின்போது ஆலயம் சேதமடைந்ததுடன் அங்கிருந்த ஏனையோர் மயிரிழையில் தப்பித்துக் கொண்டனர். இவர்கள் அங்கிருந்து வெளியேறித் தென்மராட்சிப் பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# இலண்டனில்

# மாவீரர் நாள்

காலம்: 25 - 11 - 1995 சனிக்கிழமை
மாலை 6 மணி முதல் 11 மணிவரை
இடம்: GOLDSMITH COLLEGE
NEW CROSS

* கொடியேற்றம்
* அஞ்சலி
* நடனம்
* மாவீரர் உரை
* சிறுவர் நிகழ்ச்சி
* நாடகம்



காலம்: 26 - 11 - 1995 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6 மணி முதல் 11 மணிவரை
இடம்: ACTON TOWN HALL
ACTON

மேலதிக விபரங்கள், தொடர்புகளிற்கு : 0181 - 503 4294



## உலகத்தமிழர் இயக்கம் யேர்மனி
## கல்விப்பணி

**அறிவித்தல்**

# உலகத் தமிழர் இயக்க கல்விப்பணி நடாத்தும்
# பொதுத்தேர்வு 1995

உலகத் தமிழர் இயக்க கல்விப்பணி நடாத்தும் பொதுத்தேர்வு இவ்வாண்டு 16-12-1995 இல் நடைபெறவுள்ளது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். யேர்மனியில் 89 தமிழாலயங்களை நிர்வகித்துவரும் உலகத்தமிழர் இயக்கம் பரீட்சார்த்திகளின் வசதி கருதி வழமைபோல யேர்மனியின் பலபாகங்களிலும் தேர்வு நிலையங்களை அமைத்து ஒரே நாளில் பொதுத்தேர்வை நடாத்தி முடிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இப் பொதுத்தேர்வில் தமிழ்மொழி, சமூகக்கல்வி ஆகிய பாடங்கள் 2ம் ஆண்டு முதல் 10 ம் ஆண்டுவரை நடைபெறும். இத்தேர்வில் சகல தமிழாலயங்களும் பங்குபற்றுதல் வேண்டும். வெளிவாரி மாணவர்கள் அண்மையிலுள்ள தமிழாலயங்களுக்கூடாகவும், தமிழாலயங்கள் இல்லாத நகரத்து வெளிவாரி மாணவர்கள் தனித்தனியாகவும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவங்களை அண்மையிலுள்ள தமிழாலயங்களிலும் உலகத்தமிழர் இயக்கப் பணியகத்திலும் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 20.11.95.

மேலதிக விபரங்களுக்கு: 0209 - 76956 என்னும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

நன்றி

பணியகம்
உ.த.இயக்கம்
யேர்மனி.

பணியக முகவரி :
World Tamil Movement FRO c.V
Gathestr IA, Elberfeld
42107 Wuppertal.



நான்கு நூற்றாண்டுகளுக்கு முன் அந்நியரிடம் பறிகொடுத்த எமது நாட்டை மீட்டெடுக்க, செந்தமிழ் மண்ணை செந்நீரால் நனைத்துத் தம் இனிய உயிர்களை அர்ப்பணித்து மரண பயத்தை வென்ற தியாகிகளை கௌரவிக்கும் நாள்.

## இலங்கைத் தமிழ் சங்கமும் உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரும் இணைந்து நடாத்தும்

# மாவீரர் நாள்

இடம் : FRESH MEADOWS SCHOOL (PS 173)
174-10, 67 AVENUE
FLUSHING, NY 11365
NEW YORK

நேரம் : பிற்பகல் 4.00 மணி.
காலம்: 25 - 11 - 1995 சனிக்கிழமை
தொடர்புகளுக்கு: (718) 657 - 9463

* தேசியக் கொடியேற்றம்
* தேசிய கீதம்
* மாவீரர் அஞ்சலி
* நடன அஞ்சலி
* உரை அஞ்சலி
* கவியரங்கம்
* கர்நாடக இசை அஞ்சலி
* மாவீரர் நினைவு மலர் வெளியீடு
* புலிப்பாய்ச்சல் படக்காட்சி
* ஒரு நிஜத்தின் நிழல்
  - திலீபனின் தியாக நிமிடங்கள்
* சிந்தித்தால் தீர்வு வரும்
  - ஓரங்க நாடகம்
* எழுச்சிக்கீதங்கள்

பின்வரும் இடங்களில் மாவீரர் தினத்தை முன்னிட்டு 26-11-95 அன்று விசேட பூசை நடைபெறும்.

BOSTON - MASSASUSETTS
NEW ENGLAND HINDU TEMPLE
117 WAVERLY STREET,
ASHLAND, MA 01721
CONTACT TEL: (617) 942-7087

CALIFORNIA
PALANISWAMI SIVAN TEMPLE
1819 SECOND ST, CONCORD, CA 94519
CONTACT TEL: (408) 243-0863 / 554 - 1490

MIAMI, FLORIDA
KRISHNA TEMPLE
3220 VIRGINIA STREET, MIAMI FL 33133
CONTACT TEL: (305) 266-5618 / 663 - 0885

CHIGAGO
BALAGI TEMPLE
1145 WEST SULLIVAN ROAD, AURORA, IL60507
CONTACT TEL: (312) 266-5618 / 663-0885

COLUMBUS, OHIO
THE BHARATYA TEMPLE
3671 HYATT ROAD
COLUMBUS, OHIO 43235
CONTACT TEL: (614) 764 - 1211



## நெதர்லாந்தில்

# மாவீரர் நாள்
# 1995

காலம்: 26 - 11 - 1995 (ஞாயிற்றுக் கிழமை)
15.30 மணி
இடம்: Diligenia
Lange Voorhout 5, 2514 EA, Denhaag

*எமது எதிர்கால சந்ததி சுதந்திரமாக வாழ தம்மை உருக்கிய மெழுகுவர்த்திகளை.*
*விடுதலைப் பயிருக்கு வித்திட்டுச் சென்ற வீர மறவர்களை.*
*தமிழர்கள் அனைவரும் ஒன்று கூடி பூஜிக்கும் புனிதமான நாள்.*



- வீர வணக்கம்
- நாடகம் (விலங்குகள்)
- நாடகம் (சதியை வென்ற சாவுகள்)
- வில்லுப்பாட்டு
- எழுச்சி இசை
- நாட்டிய நடனங்கள்
- சிறுவர் நடனங்கள்
- சோலோ இசை
- மற்றும் பல நிகழ்ச்சிகள்

கலை நிகழ்ச்சிகள் யாவும் தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும்

மேலதிக விபரங்களுக்கு : 070 346 1963, 380 1210

தமிழீழ விடுதலைப் புலிகள் - நெதர்லாந்து


# சர்வதேச அங்கீகாரமே தமிழ் மக்களின் உயிர்களைப் பாதுகாக்கும்

இன்று 500000 தமிழ் மக்கள் இன அழிப்பினை எதிர்நோக்கி நிற்கின்றனர். உணவு ஆயுதமாக்கப்பட்டு, மக்கள் மேலான முற்றுகை சட்டபூர்வமாக்கப்பட்டு, மருத்துவ, எரிபொருள் வசதிகள் மறுக்கப்பட்டு தமிழ் மக்கள் வாழ்கின்றனர். ஆவணி மாதத்தின் பின்னர் உணவு விநியோகத்தைச் சிறீங்கா நிறுத்திவிட்டது. மண்ணெண்ணெய்த் தடை வர்த்தமானிப் பிரகடனம் இன்றி அதிகாரிகளின் மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிழலையில் மக்களுக்கான உயிர் வாழ்தலுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படமுடியாத அவலம் தோன்றியுள்ளது.

இதனை அகற்றுவதற்கு இந்த அவலத்திற்கான அடிப்படைக்காரணிகள் அகற்றப்பட வேண்டும். அதாவது இந்த அவலங்களுக்கான அடிப்படைக் காரணி யாழ்ப்பாண மக்கள் சிறீங்காவின் நிதி ஒதுக்கீட்டிலும், உதவி வழங்கலிலும் தங்கியுள்ளமையே.

இதனை மாற்றுவதற்கு வெளிநாடுகளுடன் தமிழீழ மக்களின் உண்மைப் பிரதிநிதிகள் தொடர்புகளை மேற்கொள்வதற்கான அங்கீகாரம் தேவை.

விடுதலைப் புலிகள் இயக்கமே தமிழ் மக்களின் அரசியல் அதிகாரத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். "அரசு நோக்கிய அரசு" என்பதற்கு எல்லைகள் தேவையன்று. அரசியல் அதிகாரம் யாரால் வெளிப்படுத்தப்படுகிறது என்பதே முக்கியம். எனவே தமிழ் மக்கள் தமது வெளியக இறைமையைப் பயன்படுத்தும் ஊடகமாக

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வரலாற்றின் வழிகாட்டி...



காலதேவன் மானுடத்தின்
கைகளில் கொடுத்த
புத்தம் புதிய பதிப்பு
ஞாலமீதில் காவிய நாயகன்
பிரபாகரனின் பிறப்பு
மூலமாகி மூச்சாயாகி
முதலுமானான்
தமிழர்க்கு அவனே பொறுப்பு
காலமுழுதும்
கோலமெழுதும்
வரலாறு அவனது பதிப்பு

வரலாறு வழிகாட்ட
வரலாற்றின் வழிகாட்டி
தத்துவங்கள் தத்தெடுத்த
தத்துவத்தின் ஆசிரியன்
இயற்கை.... நண்பனாகி
இயற்றி வைத்த பெட்டகம்
புத்தகங்கள் பூத்துரைக்கும்
பூமணக்கும் புத்தகம்

நாயன்மார்கட்டு சிவகுமாரன்





தமிழ்த் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் 41 வது பிறந்த நாள் நினைவாக அனைத்துலகச் செயலகமும், கிளைகளும், களத்திலும் அன்புத் தமிழ் நெஞ்சங்கள் சார்பில் தங்கள் பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றன.

தமிழின் துயர்தீர்த்து, தமிழ் உள்ளவரை நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9463

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1983 , F: 384 0683

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224



Printed by Observer Group Newspapers